விலை: 30
பக்கங்கள்: 28

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

சுடர் 33 கதிர் 361 கார்த்திகை 06ஆம் நாள் வியாழக்கிழமை 22 நவம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

வடமாகாண மர நடுகை மாதம்

கார்த்திகை - 2018

"நாகரிகத்தின் வேர் காடுகள்தான். கூட்டங்களில் இருந்து விலகியிருந்து மரங்களுடன், ஆறுகளுடன் ஏரிகளுடன் ஒன்றாய் கலந்திருந்த மனிதர்களிடம் இருந்துதான் தலை சிறந்த கருத்துக்கள் வந்துள்ளன. காடுகளின் அமைதி மனிதனின் அறிவாற்றல் பெருக உதவியுள்ளது."

– இரவீந்திரநாத் தாகூர்–
(வங்கக் கவிஞர்)

தொடர்ந்தும் வீழ்ச்சியடையும் ரூபா!

கொழும்பு, நவ. 22

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை விலையின் பெறுமதி படி, இலங்கை ரூபாயின் விலை தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்துள்ளது. இதன்படி அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 179.04 ரூபாவாக நேற்றுப் பதிவாகியுள்ளது. (5)

சதித் திட்டத்துக்கு கூட்டமைப்பு உடந்தை

சாடுகிறது சு.க.

கொழும்பு, நவ. 22

வெளிநாட்டுச் சக்திகளுடன் இணைந்து நாட்டை உறுதிப்பாடற்ற நிலைக்கு கொண்டு செல்லும் சதித்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உடந்தையாக இருக்கின்றது. வடக்கு >> 25

நாடாளுமன்ற கலரி நாளையும் மூடப்படும்

கொழும்பு, நவ. 22

நாடாளுமன்ற பார்வையாளர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களின் பார்வையாளர் பகுதி நாளை வெள்ளிக்கிழ >> 25

இடைக்கால கணக்கறிக்கையை சமர்ப்பிக்க மகிந்த தரப்பு முயற்சி

அதை தோற்கடிப்போம் என்று ஐக்கிய தேசியக் கட்சி சூளுரை

கொழும்பு, நவ. 22

மகிந்த அரசு பெரும்பான்மையை நிரூபிக்கத் தடுமாறி வருகின்ற நிலையிலும், அடுத்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கான இடைக்கால கணக்கறிக்கையை சமர்ப்பிப்பதற்கு முடிவு செய்துள்ளது. இதற்கான அமைச்சரவை அனுமதி நேற்று வழங்கப்பட்டுள்ளது.

மகிந்த அரசு இடைக்கால கணக்கறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்பித்தால் அதனை தோற்கடிப்போம், என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

தலைமை அமைச்சரும், நிதி அமைச்சருமான >> 25

நாமலுடன் மோதிய கனேடியத் தூதுவர்

கொழும்பு, நவ. 22

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச ஆகியோருக்கு இடையில் கீச்சகத்தில் கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

மக்கள்விடுதலைமுன்னணி (ஜே.வி.பி.). >> 24

see more news in
newuthayan.com

அடுத்த அந்தர் பல்டி

மகிந்த கூடாரத்துக்கு தாவினார் வசந்த

கொழும்பு, நவ. 22

மகிந்த அரசின் அமைச்சரவைப் பொறுப்பில் இருந்து பதவி விலகுவதாக அறிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சேனாநாயக்க நேற்றுப்புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் >> 21

கோப்பாயில் மாவீரர் நாளை தடுக்க கோரி மனுத் தாக்கல்

யாழ். நீதிமன்றில் பொலிஸார் நேற்றுத் தாக்கல்

யாழ்ப்பாணம், நவ. 22

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த இடத்திற்கு முன்பாகத் தனியார் காணியில் மாவீரர் நினைவு தினம் கடைப்பிடிப்பதற்குத் தடை விதிக்குமாறு கேட்டு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் மனுத் தாக்கல் செய்துள் >> 21

பலவந்த ஆட்சியை தொடர விடமுடியாது

முழங்குகிறது ஐ.தே.க.

கொழும்பு, நவ. 22

பலவந்த அரசின் ஆட்சி பலம் உறுதிப்படுத்தப்படும் வரை நாம் விட்டுக் கொடுக்கப் போவதுமில்லை. விட்டுக்கொடுப்பதற்கான வாய்ப்பும் இல்லை. சட்டம் முறையாக நடை >> 25

நாடாளுமன்றத் தெரிவுக் குழு நியமனத்தில் பெரும் மோதல்

கொழும்பு, நவ. 22

நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பிலான தெரிவுக்குழுவுக்கு பெயர்களைப் பரிந்துரை செய்வதில் அரச தரப்புக்கும், எதிர் தரப்புக்கும் இடையில் பெரும் மோதல் ஏற்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. கடந்த திங்கட்கிழமை சபா நாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், நாடாளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பிலான தெரிவுக்குழுவை அமைப்பதற்கு பெரும்பான்மையான கட்சித் தலைவர்கள் இணக்கம் வெளியிட்டிருந்தனர். நாளை >> 25

மகிந்த அணிக்கு மேலும் நெருக்கடி

ஐ.தே.க. அடுத்த அதிரடி

கொழும்பு, நவ. 22

மகிந்தவின் தலைமை அமைச்சர் அலுவலகத்துக் கான நிதி ஒதுக்கீட்டை நிறுத்தும் தீர்மானத்தை சமர்ப்பித்திருந்த ஐக் >> 25

நாடாளுமன்ற வன்முறை பிரதேச சபைக்கும் பரவியது

கொழும்பு, நவ. 22

நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற அடிதடி பிரதேச சபைகளிலும் எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது. பலப்பிட்டிய பிரதேச சபையின் நேற்றைய அமர்வில், ஐக்கிய தேசியக் >> 25

என்னை விமர்சிப்பதைவிடுத்து பெரும்பான்மையை நிரூபியுங்கள்

சபாநாயகர் காட்டமான அறிக்கை

கொழும்பு, நவ. 22

சபாநாயகர் கரு ஜயசூரி வுக்கு எதிராக ஆதாரமற்ற குற்றச்சாட்டுக் >> 24

வடிவேல் சுரேஸ் கட்சி தாவவில்லை

ஐ.தே.க. இப்படி அறிவிப்பு

கொழும்பு, நவ. 22

நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொள் >> 21

ரணிலை மீண்டும் தலைமை அமைச்சராக நியமிப்பதே பிரச்சினை தீர்வதற்கான வழி

கூறுகிறார் முன்னாள் முதலமைச்சர் விக்கி

கொழும்பு, நவ. 22

ரணிலைத் தொடர்ந்து தலைமை அமைச்சராக ஏற்றுக் கொண்டு மகிந்தவை எதிர்க்கட்சித் தலைவர் ஆக்கி இரு தரப்பாரிடையேயும் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்த >> 25

சிறப்பு மேல் நீதிமன்றங்களின் நடவடிக்கையை ஒத்திவைக்கவும்

நாட்டு நிலமையைச் சீராக்க அதுவும் தேவை என்கிறார் விக்கி

கொழும்பு, நவ. 22

மகிந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற பெரும் ஊழல், மோசடிகள் தொடர்பிலான விசாரணையை முன்னெடுக்கும் சிறப்பு >> 24

Member of
David Pieris
Group of Companies

எசட்லைன்

• குத்தகை
• கடன்வசதிகள்
• பக்டரின்
0114 700 100

மைத்திரியின் அடாவடியை கண்டித்துப் போராட்டம்

கொழும்பில் நேற்று ஆரம்பம்

கொழும்பு, நவ. 22

அரசதலைவரின்ஜனநாயக விரோதச் செயற்பாட்டைக் கண்டிக்கும் முகமாக கொழும்புவிகாரமகாதேவி பூங்கா முன்றலில் தம்பர அமிலதேரர்தலைமையில் சத்தியாகிரக போராட்டம் நேற்றுஆரம்பமாகியுள்ளது.

2015ஆம் ஆண்டு அரச தலைவர்தேர்தலில்மைத்திரிபாலசிறிசேனவைஆதரித் திருந்த, சிவில் அமைப்புக்கள்மற்றும்தொழிற்சங்கங்களும் இணைந்து இந்தப் போராட்டத்தைஏற்பாடுசெய்துள்ளன.

போராட்டத்தின்போது இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலைக்கு அரச தலைவர்மைத்திரிபாலசிறிசேனவே காரணம் என்று குற்றம்சுமத்தியுள்ளனர்.

பன்னாட்டுச்சமூகம்மைத்திரியின்நடவடிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. குறைந்தபட்சம்மாலைதீவு, சுவிசிலாந்துஆகியநாடுகள் ஊடகப்புதிய அரசைஏற்றுக் கொள்ளவில்லைஎன்றுதம்பர அமில தேரர் தெரிவித்தார்.

இந்தப் போராட்டத்தில் அரச தலைவருக்கு எதிராக கையெழுத்து வேட்டையும் நடாத்தப்பட்டுள்ளது. (5)

சம்பந்தனின் இலக்கு கூட்டாட்சித் தீர்வே

யாழ்ப்பாணம் நவ 22

ரணில்விக்கிரமசிங்கசெய்துள்ளஊழல்கள்தொடர்பில்கண்டுகொள்ளாதஎதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் கூட்டாட்சித் தீர்வு கிடைத்தால் போதுமென்ற நிலைப்பாட்டில் மாத்திரமே உள்ளதாக அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிசாந்த குற்றம் சாட்டினார்.

தலைமை அமைச்சர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தாவது,

துமிந்த திசாநாயக்க ஐ.தே.கவில் இணைந்து கொள்ளவுள்ளதாக கூறப்படுகிறது. அவ்வாறில்லை சுகவீனமுற்றிருப்பதாலேயே அவர் நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்கவில்லை.

மகிந்த ராஜபக்சவை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, திருட்டுத்தனமாகத் தலைமை அமைச்சராக நியமித்துள்ளதாகவும், மகிந்தராஜபக்சின் கதவால் பதவியைக் கைப்பற்றியதாகவும்ஐ.தே.க. விமர்சிக்கிறது. அரசமைப்பின்பிரகாரமேஅவர்தலைமைஅமைச்சராக நியமிக்கப்பட்டார் என்பது முழு நாட்டுக்கும் தெரியும். அதனால் தான் அவர் நியமிக்கப்பட்டதை நீதிமன்றில் சவாலுக்கு உட்படுத்த ஐ.தே.கவினர் பின்வாங்கினர்.

மக்கள் விடுதலை முன்னணியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இந்த நாட்டில் ஒருபோதும் ஆட்சியமைக்கப் போவதில்லை. இந்த இரண்டு கட்சிகளும், ஆட்சியில் இருப்பவர்களின் செயற் பாடுகளைத் தடுக்கவே முற்படுகின்றன. எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் ரணில் விக்கிர மசிங்கவின் எந்தவொருஊழல்நடவடிக்கையையும் கண்டுகொள்ளவில்லை. அவருக்கு கூட்டாட்சி கிடைத்தால் போதுமென்ற நிலைப்பாட்டில் மாத்திரமே உள்ளார்-எனவும்கூறினார்.

(8,10)

நீதிபதியின் மெய்க்காவலர் கொலை வழக்கில் சந்தேகநபர்களின் பிணைக்கு ஆட்சேபனை

நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்தது பொலிஸ்

யாழ்ப்பாணம், நவ. 22

மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர் சுட்டுக்கொலை செய்யப்பட்டவழக்கின்சந்தேகநபர்கள்மூவருக்கும்வழங்கப்பட்டபிணையைதடுத்துநிறுத்தக்கோரிசீராய்வுமனுத்தாக்கல்செய்துள்ளனர்பொலிஸார்.

சந்தேகநபர்கள் மூவருக்கும் கடந்த 19ஆம் திகதி பிணைவழங்கப்பட்டது. அதற்குஆட்சேபம்தெரிவித்து அரச சட்டவாதி மூலமாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி நகர்த்தல் பத்திரம் முன்வைத்திருந்தார்.

மேல் நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கிய பின்னரும் அரச சட்டவாதி சீராய்வு விண்ணப்பத்தைச் சமர்பித்ததை சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி ஆட்சேபித்தார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிமன்றம் வழக்கைஎதிர்வரும்26ஆம்திகதிக்குஒத்திவைத்தது டன், நகர்த்தல் பத்திரத்தை முன்வைத்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை நீதிமன்றில் முற்படுமாறும்உத்தரவிட்டார்.

"மேல்நீதிமன்றநீதிபதியின்முன்னிலையில்அவரது மெய்ப்பாதுகாவலரான பொலிஸ் உத்தியோகத்தர் சுட்டுக்கொல்லப்பட்டார். எனவேமேல்நீதிமன்றநீதிபதி மாணிக்கவாசகர்இளஞ்செழியனைஇலக்குவைத்து இந்தத்தாக்குதல்நடத்தப்பட்டதா? என்றுவிசாரணைகளை முன்னெடுக்கின்றோம். எனவே சந்தேகநபர்களுக்கு பிணை வழங்கப்பட்டால் அதனால் விசாரணைகள் பாதிக்கப்படும். அத்துடன், கொலை தொடர்பான இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை இன்னும் கிடைக்கப்பெறவில்லை" என்று பொலிஸார் தமது ஆட்சேபனையில் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்தஆட்சேபனைவிண்ணப்பத்தையாழ்ப்பாணம் பொலிஸார், மேல் நீதிமன்ற அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரனிடம் நேற்றுமுன்தினம் கையளித்தனர். அவர் நேற்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் அணைத்து பிணை விண்ணப்பங்களை மன்றில் அழைக்குமாறு கோரினார். நேற்று இந்தமனுவிசாரணைக்குஎடுத்துக்கொள்ளப்பட்டது.

"சந்தேகநபர்களுக்கு எதிரான சுருக்க முறையற்ற விசாரணை இன்னமும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் ஆரம்பிக்கப்படவில்லை. பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகள் நிறைவடையவில்லை. இந்தச் சம்பவம் யாழ்ப்பாணக் குடாநாட்டை மட்டுமல்ல முழுநாட்டையும்பெரும்அச்சுறுத்தலுக்குஉள்ளாக்கியது. அத்தகையகொலையுடன்தொடர்புபட்டசந்தேகநபர்களுக்கு பிணை வழங்கப்பட்ட செய்தி ஊடகங்களில் வெளிவந்தமை மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. சந்தேகநபர்கள் பிணையில் விடுவிக்கப்படுவது சாட்சிகளுக்கு அச்சுறுத்தலாக அமைவதுடன், பொலிஸாரின் விசாரணைகளையும் பாதிக்கும்" என்று அரச சட்டவாதி வாதிட்டார்.

"பிணைவழங்கப்பட்டபின்னர்அதனைஅதேமன்றிலேயே ஆட்சேபனைக்கு உட்படுத்துவது ஏற்புடைய தல்ல. நீதிமன்றின்கட்டளையைசவாலுக்குட்படுத்தும் நடவடிக்கை இது. சந்தேகநபர்கள் பிணையில் வெளிவருவது பொலிஸாரின் விசாரணையைப் பாதிக்கும் என்ற வாதத்தை ஏற்க முடியாது" என்று சந்தேகநபர்கள் சார்பில் முற்பட்ட சட்டத்தரணி எதிர்ப்பு வெளியிட்டார்.

யாழ்ப்பாணம்மேல்நீதிமன்றநீதிபதிமாணிக்கவாசகரின் வாகனத்துக்கு பாதுகாப்பு வழங்கிச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தரின் மோட்டார் சைக்கிளை இடைமறித்த ஒருவர், அவருடைய கைத்துப்பாக்கியைப் பறித்து அவரைச் சுட்டுக் கொன்றார். சார்ஜன்ட் ஹேமாவகே சரத் ஹேமச்சந்திர யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலையில்சேர்க்கப்பட்டபின்னர் சிகிச்சைபயனின்றி உயிரிழந்தார்.

அத்துடன், மேல் நீதிமன்ற நீதிபதியின் காரில் பயணித்த மற்றொரு பொலிஸ் உத்தியோகத்தர் மீது கூடு நடத்தப்பட்டது. அவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நல்லூர் கந்தசுவாமியார் ஆலயதெற்கு வீதிப் பகுதியில் 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் 22ஆம் திகதி இடம்பெற்றது. சம்பவத்தைத் தொடர்ந்து இரண்டு நாள்களில் பிரதான சந்தேகநபரான செல்வராசா மகிந்தன் என்பவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பின்னர் பாலசிங்கம் மகேந்திராசா, செல்வராசா ஜயந்தன் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் மூவரும் 2017ஆம் ஆண்டு ஜூலை 24ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

"சந்தேகநபர்கள் மூவரும் காசுப் பிணையாக தலா 2 இலட்சம்ரூபாபணத்தைநீதிவான்நீதிமன்றில்வைப்பிலிடவேண்டும். மூவரும் 5 லட்சம் ரூபா பெறுமதியுடைய தலா இரண்டு ஆள் பிணையாளிகளை முற்படுத்தவேண்டும். சந்தேகநபர்கள்மூவரும்ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற அலுவலகத்தில் கையொப்பமிடவேண்டும். மூவரும்வெளிநாடுசெல்லத்தடைவிதிக்கப்படுகிறது" ஆகியநிபந்தனைகளுடன்சந்தேகநபர்களுக்குயாழ்ப்பாணம்மேல்நீதிமன்ற அன்னலிங்கம்பிரேமசங்கர் அண்மையில்பிணைவழங்கினார். (உ_8.26.37)

ரணில் தலைமை அமைச்சர் பதவியில் இல்லாதபோதும் சுகபோகத்துக்காக அலரிமாளிகையை பயன்படுத்துகிறார்

யாழ்ப்பாணம் நவ 22

நாடாளுமன்ற சொத்துக்களை சேதப்படுத்தியதாகக் தெரிவித்து பொலிஸில் முறைப்பாடு செய்துள்ள நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கு, ரணில்விக்ரமசிங்க அலரி மாளிகையை சட்ட விரோதமாக பயன்படுத்திக் கொண்டிருப்பது புலப்படவில்லை என கம்பஹா மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர் இந்திக அனுருத்த ஹேரத் தெரிவித்தார்.

தலைமைஅமைச்சர்அலுவலகத்தில்நேற்றுஇடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

ரணில் விக்ரமசிங்க தலைமை அமைச்சர் பதவியிருந்துநீக்கப்பட்டபின்னரும் பலவந்தமாக அலரி மாளிகையில்தங்கியிருப்பதோடு, பொதுச்சொத்தைதனதுதனிமனிததேவைக்காகப்பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார். அதற்கான அனைத்து செலவீனங்களும்மக்களின் வரிப்பணத்தின் மூலமாக அரசினாலேயே முன்னெடுக்கப்படுகின்றன. ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைக் காரியாலயமான சிறிக்கொத்தாவிலிருந்து இந்த செலவீனங்கள் மேற்கொள்ளப்படவில்லை . கடந்த காலங்களில் சந்திரிகா குமாரதுங்கவால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு ஐ.தே.வினர் தீமூட்டி அதனை மேசைகளில் எரியவிட்டனர். 13 ஆம் சீர்திருத்தம் முன்வைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் ஜே.வி.பி நாடாளுமன்றத்தில் குண்டெறிந்தனர். அவர்கள் அரசியலமைப்புக்கு முரணாக அரசு செயற்படுவதாகதெரிவித்தே அன்றுஅவ்வாறுசெயற்பட்டனர். அதனையே நாம் இன்றுசெய்கின்றோம்.

ஐக்கிய தேசிய கட்சியுடன் மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து தலைமை அமைச்சர் பதவியை நாம் திருடியுள்ளதாகவும் மஹிந்தராஜபக்சபின்கதவினூடாக வந்ததாகவும் தெரிவிக்கின்றனர். இவர்கள் கூறுவதைப் போல் நடந்திருந்தால் அவர்கள் நீதிமன்றத்திற்கு சென்றிருக்க முடியும். ஆனால் அவர்கள அதைச் செய்யாதது ஏன் என்பதே எமது கேள்வியாகும். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ரஞ்சித் ஆண்டகையுடனான சந்திப்பின் போது நீதிமன்றம்சென்றால்அதுஅவர்களுக்கு பாதகமாக அமையும்எனத்தெரிவித்திருந்தார். ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் அமைச்சர்கள் சிலர் அமைச்சுக்களுக்குச் சென்றுஅங்குள்ளஅரசஅதிகாரிகளைபணிபுரியவேண்டாமென எச்சரித்த சம்பவங்கள்இடம்பெற்றுள்ளன. அவ்வாறு கட்டளையிடுவதற்கு அவர்களுக்குஎந்ததகுதியும் கிடையாது. காரணம் அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேன முறைப்படி புதிய அரசாங்கத்தையும்அதற்கேற்ப அமைச்சரையையும் நியமித்துள்ளார்.

அதனடிப்படையில்வேலைத்திட்டங்களும்முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ரணில் விக்ரமசிங்க இன்னமும் அலரி மாளிகையில் இருப்பதே தற்போது எமது நாட்டில் நடைபெறும் ஒரேதவறாகும்-என்றார்.

(8,31)

இடைக்கால கணக்கு அறிக்கை தயாராகிறது

கொழும்பு, நவ. 22

இடைக்கால கணக்கு அறிக்கை தற்போது தயாரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. திறைசேரியின் செயலர் எஸ். ஆர். ஆட்டிகல இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது, டிசெம்பர் 31ஆம் திகதி வரை அரசின் செலவுகள் தொடர்பில் எவ்வித பிரச்சினையும் ஏற்படாது. சில வேளை நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் அரச தலைவரின் அதிகாரத்துக்கு ஏற்ப அடுத்து வரும் நாள்களுக்கான செலவுகள் இடம்பெறும்.

அந்தச் செலவுகளுக்கு தேர்தலின் பின்னர் உருவாக்கப்படும் புதிய அரசின் நாடாளுமன்றம் மூலம் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்படும்- என்றார். (5)

நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறியதாகவே பதிவு

நாடாளுமன்ற அதிகாரபூர்வ பதிவேட்டில் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 22

தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்சவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக, நாடாளுமன்றத்தின் அதிகாரபூர்வ பதிவேட்டில் (ஹன்சாட்டில்) குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 14ஆம் திகதி நாடாளுமன்றம் கூடியது. மகிந்த தரப்புக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மக்கள் விடுதலை முன்னணியினால் கொண்டு வரப்பட்டது. அது நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் அறிவித்தார். ஆனால் அரச தலைவர் மைத்திரிபால அதனை ஏற்றுக் கொள்ள மறுத்தார்.

இந்த நிலையில் நாடாளுமன்றத்தின் அதிகாரபூர்வ பதிவேட்டில், கடந்த 14 ஆம் திகதி அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து அரசமைப்பின் 48(2)ஆவது உறுப்புரைக்கு அமைவாக அரசு கலைக்கப்பட்டுள்ளது.

மேலும் புதிய தலைமை அமைச்சர் மற்றும் அவர் தலைமையிலான அமைச்சரவை நியமிக்கப்படாமையினால் இன்று முதல் தலைமை அமைச்சராகவோ, அமைச்சர்களாகவோ, பிரதி அமைச்சர்களாகவோ, இராஜாங்க அமைச்சர்களாகவோ ஆளுங்கட்சியாகவோ எவரையும் அனுமதிக்க முடியாது, என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (5)

நிசாந்த சில்வா விடயத்தில் நாங்கள் தலையிடவில்லை

தேசிய பொலிஸ் ஆணைக்குழு விளக்கம்

கொழும்பு, நவ. 22

குற்றப் புலனாய்வுப் பிரிவின், ஒருங்கிணைக்கப்பட்ட குற்றங்கள் விசாரணை அலகின் பொறுப்பதிகாரியான, நிசாந்த சில்வாவின் இடமாற்றத்தை நிறுத்துமாறு தாங்கள் உத்தரவிடவில்லை என்று தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

முக்கியமான பல வழக்குகளின் விசாரணை அதிகாரியான நிசாந்த சில்வா கடந்த 19ஆம் திகதி திடீரென, அரச தலைவரின் வழிகாட்டலுக்கு அமைய, பொலிஸ் மா அதிபரால் நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்ததுடன், அரச தலைவருக்கு உள்நாட்டிலும் பன்னாட்டு அரங்கிலும் பலத்த கண்டனங்களை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையில், நிசாந்த சில்வாவின் இடமாற்ற உத்தரவு பொலிஸ் மா அதிபரால் நிறுத்தப்பட்டுள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

எனினும், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உத்தரவுக்கு அமையவே, இந்த இடமாற்ற உத்தரவு நிறுத்தப்பட்டதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதனை மறுத்துள்ள, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலர் சமன் தீசநாயக்க, பொலிஸ்மா அதிபருக்கு, நிசாந்த சில்வாவின் இடமாற்றத்தை நிறுத்துமாறு ஆணைக்குழு பணிக்கவில்லை என்றும், குற்றப் புலனாய்வுப் பிரிவு தமது ஆணைக்குழுவின் செயற்பாட்டுப் பரப்பில் இல்லை என்றும் கூறியுள்ளார்.

இடமாற்ற உத்தரவையும், அதனை நிறுத்தும் உத்தரவையும் வழங்கியது, பொலிஸ்மா அதிபரே என்றும் அவர் தெரிவித்துள்ளார். (5)

சுவிஸ்குடியுரிமையை கைவிட்டார் கீதா

கொழும்பு, நவ. 22

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக காலி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க தனது சுவிட்சர்லாந்துக் குடியுரிமையைக் கைவிடுவதாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பான ஆவணத்தை நேற்றுப் புதன்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரியவிடம் கையளித்துள்ளதாகக் கூறியுள்ளார்.

இவற்றைக் கையளித்ததன் மூலம் தான் அடுத்த தேர்தலில் போட்டியிடுவதை உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, நான் நாடாளுமன்றத் தேர்தலில் நிச்சயம் போட்டியிடுவேன். எனது குடும்பத்திலிருந்து வந்த அழுத்தத்துக்கு மத்தியில் சுவிட்சர்லாந்தில் குடியுரிமையை நான் கைவிட்டுவிட்டேன். காலி மாவட்டத்திலுள்ள மக்களின் நலனுக்காக நான் இதை செய்தேன். என்று கூறியுள்ளார்.

கடந்த 2017 ஆம் ஆண்டு நவம்பர் 2 ஆம் திகதி கீதா குமாரசிங்க இரட்டைக் குடியுரிமை பெற்றுள்ளதன் காரணமாக தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

நாடாளுமன்றத்தை புண்ணிய பூமியாக்கிய பின்னரே ஓய்வு

காமினி ஜயவிக்கிரம சபதம்

கொழும்பு, நவ. 22

நாடாளுமன்றத்தை புண்ணிய பூமியாக்கியதன் பின்னரே எனது அரசியல் வாழ்விலிருந்து நான் ஓய்வு பெறுவேன் என்று மூத்த நாடாளுமன்ற உறுப்பினரும், மிளகாய்ப் பொடி தாக்குதலுக்கு உள்ளானவருமான காமினி ஜயவிக்கிரம தெரிவித்தார்.

நாடாளுமன்றில் கடந்த அமர்வில் மிளகாய்த்தூள் தாக்குதல் நடாத்தியமைக்கு எதிராக நீதி கோரி பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முறைப்பாடு செய்தார். இதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

1972 ஆம் ஆண்டு டட்லி சேனநாயக்க என்னை அரசியலுக்குள் பிரவேசிக்க வைத்தார். அன்றிலிருந்து எனது அரசியல் வரலாற்றில் பொலிஸ் தலைமையகத்துக்கு முறைப்பாடு செய்வதற்காக வந்தது இதுவே முதல் தடவையாகும். அப்பாவிப் பொதுமக்கள் அவர்களது வாக்குகளால் எம்மை நாடாளுமன்றுக்கு அனுப்பி வைத்துள்ளார்கள். அவர்களுக்குச் சேவை செய்யும் இடம் சுத்தமான பூமியாக இருக்க வேண்டும்.

ஆனால் கடந்த நாடாளுமன்ற அமர்வின் போது நாடாளுமன்றினுள் நடந்த விடயங்கள் நாடாளுமன்றுக்குள் நடக்கத் தகுதியான விடயங்கள் அல்ல. மிளாகாய்த் தூள் தாக்குதல் என் மீது நடாத்தினார்கள். அதற்காக நான் இன்னும் சிகிச்சை பெற்று வருகிறேன்.

எனது வாக்குறுதியின் படி நாடாளுமன்றை சுத்தமான புண்ணிய பூமியாக மாற்ற வேண்டும். எனக்கு நடந்த விடயம் இனிமேல் எவருக்கும் நடக்கக் கூடாது என்பதற்காகவே பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தேன் -என்றார். (5)

அரசின்

கழுத்தை இறுக்குகிறது பன்னாட்டுச் சமூகம்

கொழும்பு, நவ. 22

இலங்கையின் அரசியல் நெருக்கடி தொடருமானால், இதற்குக் காரணமான அரச தரப்பைச் சேர்ந்தவர்கள் மீது பயணத் தடை மற்றும் சொத்துக்கள் மீதான தடைகளை விதிக்கும் முடிவுகளை எடுக்க சில நாடுகள் திட்டமிட்டுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் ஜனநாயகத்தைக் காப்பாற்றும் நோக்கில், அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா போன்ற நாடுகளே இந்த முடிவுகளை எடுக்கக் கூடும் என்று கூறப்படுகிறது.

அரசியல் நெருக்கடிகளைத் தீர்ப்பதில் பிடிவாதமான நிலைப்பாட்டில் இருந்தால், இந்த அரசியல் குழப்பங்களுக்குக் காரணமானவர்கள் மீது பயணத்தடை விதிக்கப்படலாம் என்றும், தமது நாடுகளில் உள்ள குறிப்பிட்ட நபர்களின் சொத்துக்களை முடக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபடலாம் என்றும் இராஜதந்திர வட்டாரங்கள் கூறியுள்ளன.

மகிந்த ராஜபக்சவின் சகோதரர்களான கோத்தபாய ராஜபக்ச மற்றும் பசில் ராஜபக்ச ஆகியோர் அமெரிக்கக் குடியுரிமையையும் கொண்டுள்ளனர். இதனால், அவர்களுக்கு அமெரிக்காவில் உள்ள சொத்துக்கள் முடக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (5)

மைத்திரிபாலவின் அதிகாரங்களை கரு ஜயசூரியா பிடுங்க முயற்சியா?

தலைமை நீதியரசருக்கு அனுப்பப்பட்ட கடிதம் போலியானது என்று மறுப்பு

கொழும்பு, நவ. 22

அரசமைப்பின் 37 ஆவது உறுப்புரையின் 2ஆவது பிரிவுக்கு அமைவாக, அரச தலைவரின் அதிகாரங்களைக் கைப்பற்றுவதற்கு தலைமை நீதியரசருக்கு சபாநாயகர் கரு ஜயசூரியா அனுப்பியதாக வெளியான கடிதம்போலியானது என்று சபாநாயகர் அலுவலகம் மறுத்துள்ளது.

தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில், அரச தலைவர் புதிய தலைமை அமைச்சரையும், அமைச்சரவையையும் நியமித்திருக்க வேண்டும். அரச தலைவர் மைத்திரிபால தனது பொறுப்பை நிறைவேற்றாததால், அரசமைப்பின் 37ஆவது உறுப்புரையின் 2ஆவது பிரிவுக்கு அமைவாக, தலைமை நீதியரசரின் துணையுடன் அரச தலைவரின் அதிகாரங்கள் மற்றும் பாதுகாப்பு படையினர் கட்டுப்பாடு சபாநாயகருக்கு உரித்தாக்கப்படும். இந்த விடயத்தில் அரச தலைவரின் இயலுமை தொடர்பில் பெரும்பான்மைக் கருத்தை அறியுமாறு தலைமை நீதியரசரிடம் கோரப்பட்டுள்ளதாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தலைமை அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பிலும், அரச தலைவரின் செயற்பாடு தொடர்பிலும் தலைமை நீதியரசரின் நிலைப்பாட்டை வினவி கடிதம் அனுப்பியதாக வெளியாகியுள்ள செய்தியில் உண்மையில்லை என்று சபாநாயகர் அலுவலகம் அறிக்கை மூலம் தெரியப்படுத்தியுள்ளது. (5)

தமிழர், முஸ்லிம் மக்களுக்கு ஆபத்து நிலை ஏற்பட்டுள்ளது!

பாதுகாப்பை மைத்திரி உறுதிசெய்யவேண்டும் ஜனநாயக மக்கள் முன்னணி கோரிக்கை

கொழும்பு, நவ. 22

"தமிழ், முஸ்லிம் மக்களின் துணையுடன் அரசதலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட மைத்திரிபால சிறிசேன, தமிழ் முஸ்லிம் உள்ளிட்ட சிறுபான்மை மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். சிறுபான்மையினரான அவர்களுக்குத் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று ஜனநாயக மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

முன்னணியின் உபதலைவரும், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் இது பற்றி மேலும் தெரிவித்ததாவது:

பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் அவர்களின் பாதுகாப்பை மைத்திரிபால உறுதிப்படுத்த வேண்டும்.

கடந்த அரசதலைவர் தேர்தல் காலத்தில் நாடெங்கும் அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிடப்பட்டிருந்தது. சட்டஒழுங்கு சீர்குலைந்திருந்தது. மதரீதியாகத் துன்புறுத்தப்பட்டார்கள். இத்தகைய ஜனநாயகவிரோதநிலையில் இருந்துநாட்டை மீட்பதற்கே மகிந்தவுக்கு எதிராகவும் மைத்திரிபாலவுக்குஆதரவாகவும் மக்கள் வாக்களித்தனர். மைத்திரி அதனை மறந்து செயற்படுவது வருத்தத்துக் குரியது.

நாட்டுக்கும் ஜனநாயகத்துக்கும் அன்று யார் அச்சுறுத்தலாக இருந்தார்களோ அவர்களிடமே ஆட்சியை ஒப்படைக்க முற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார்.

(4)

ரணிலின் வெளியேற்றத்தைத் தடுக்கவே மகிந்த அலுவலக செலவினம் குறைப்பு

மகிந்த தரப்புக் கூறுகிறது

கொழும்பு, நவ. 22

அலரி மாளிகையிலிருந்து ரணிலைநீக்குவதைத்தடுக்கும்நோக்கிலேயேதலைமை அமைச்சர் அலுவலகத்துக்கான செலவினத்தைக் கட்டுப்படுத்த ஐ.தே.க. தீர்மானித்துள்ளது என்று மகிந்த தரப்புத் தெரிவித்துள்ளது.

தலைமைஅமைச்சர்அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்சந்திப்பில்நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி.சாணக்க இந்தவிடயத்தைத்தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில், தலைமைஅமைச்சர்அலுவலகத்தின் செலவீனத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்குமாறு தீர்மான வரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் சஜித் பிரேமதாஸவே உள்ளார்.

இவ்வாறான வரைவு கொண்டுவரப்படுவதன் நோக்கத்தை நாம் தெளிவுபடுத்துகின்றோம். ரணில் விக்கிரமசிங்கதற்போதுஅலரிமாளிகையிலேயே உள்ளார். அங்குமின்சாரம், தண்ணீர் உள்ளிட்ட அனைத்து விதமானசெலவுகளுக்குமான நிதியை தலைமை அமைச்சர் அலுவலகமே வழங்குகின்றது. தலைமை அமைச்சர் அலுவலகத்தின் செலவீனங்களைக் கட்டுப்படுத்தினால்அலரிமாளிகைக்கான செலவீனங்கள் செலுத்தப்படாது. ரணில் விக்கிரமசிங்க அங்கிருந்து வெளியேறுவார். அதன் மூலம் அவரை அலரிமாளிகையிலிருந்தும், கட்சித்தலைவர் பதவியிலிருந்தும் வெளியேற்றிவிடலாம் என்பதே திட்டம். அதைத் தடுக்கவே மகிந்த ராஜபக்சவின் செலவீனங்களைக் கட்டுப்படுத்துவதாகக் கூறி தீர்மான வரைவைக் கொண்டுவருகின்றார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை அமைச்சர் வேட்பாளர் குறித்துக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துகளைப் பெறுவதற்காகையொப்பம்பெற்றுக்கொள்ளும் செயற்பாடொன்று மூன்று நாள்களுக்கு முன்னதாக ஆரம்பமாகியிருந்தது. ஐ.தே.கவின் 96 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 72 பேரே அவருக்குஆதரவாகக்கையொப்பமிட்டுள்ளனர். அதன்பின்னர் சஜித் பிரேமதாஸவின் தலைமையை முன்மொழிந்து கையொப்பம் பெறப்பட்டது. அதில் 57பேர் கையொப்பம்இட்டுள்ளனர். ஐக்கியதேசியக்கட்சியினுள் ஆக்குறைந்ததுதலைமை வேட்பாளரைக்கூட தெரிவு செய்யமுடியாதநிலைஏற்பட்டுள்ளது. இதன்பின்னணியிலேயேவரைவுசமர்ப்பிக்கப்பட்டுள்ளது - என்றார்.

ரொஷான் ரணசிங்க எம்.பி.

மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சருக்கான வரப்பிரசாதங்களைப்பெற்றுக்கொள்வதில்லை. அவர்உணவைக்கூபெற்றுக்கொள்ளவில்லை. அவ்வாறு இருக்கையில் ரணில் விக்கிரமசிங்கவே அலரிமாளிகையில்தங்கியிருந்துஅனைத்தையும்பெற்றுக்கொள்கின்றார். தீர்மானவரைவைக்கொண்டுவருவதன் மூலமாக ரணில் விக்கிரமசிங்கவைத் தனிமைப்படுத்தி அவருக்கு எதிராகச் சூழ்ச்சி செய்வதற்கான முயற்சியென்றே கருதவேண்டியுள்ளது - என்றார்.

குமராவெல்கம எம்.பி.

கடந்த காலத்தில் உண்மையைத்தான் கூறினேன். விமர்சனம்செய்யவில்லை. அதனைப் புரிந்துகொள்வதென்றால் புரிந்துகொள்ளலாம். இல்லாவிட்டால் என்னால் எதுவும் செய்ய முடியாது. தற்போது நாட்டின் பொருளாதாரம் முழுமையாகவீழ்ச்சிகண்டுவிட்டது. பன்னாட்டு நாணயநிதியம் எமக்கான நிதியை நிறுத்திவிட்டது. நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து பொருளாதாரத்தைச் சீர்தூக்காது விட்டால்நாடுகுட்டிச்சுவராகிவிடும்.

அம்மாவை மறப்பது கடினம்

நான் இன்னமும்சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்காரன்தான். முன்னணியில் உறுப்புரிமைஎடுக்கவில்லை. பொறுமையாக இருங்கள். அதற்கான நேரம் இன்னமும் வரவில்லை. அம்மாவை மறப்பதுகஷ்டம் அல்லவா! அதுபோன்றுதான்பண்டாரா நாயக்க அம்மாவையும் மறக்க காலம் எடுக்கும். உரிய நேரத்தில் முடிவெடுப்பேன். உரிய நேரத்தின் போதுதான்பொதுவேட்பாளராகமைத்திரிபால சிறிசேன வந்தார். அதுபோன்றுவெல்கமவும் உரிய நேரத்தில் வருவார் - என்றார்.

பொதுஜனபெரமுனவின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கான கூட்டம் மகிந்த ராஜபக்ச தலைமையில் நெலும் மாவத்தையில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்றிருந்தது. இக்கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குவெளியிடப்பட்டகருத்துக்கள் வருமாறு,

ஜோன்சன்பெர்னான்டோஎம்.பி.

நாடாளுமன்ற பெரும்பான்மை தொடர்பான பிரச்சினை எமக்கு இல்லை. முன்னர் ஒருமுறை ரணில் விக்கிரமசிங்க வுக்குத் தலைமை அமைச்சர் பதவி வழங்கப்பட்டது. அவருக்கு 42 உறுப்பினர்களே இருந்தார்கள். அன்று அதுசரியாக இருந்தது. அதுபோன்றே நாமும் நியமனம் செய்வதற்கு எதிர்பார்த்துள்ளோம். நாடாளுமன்றில் சபாநாயகர் கருஜெயசூரிய நீதிக்கு எதிராகசெயற்படுகின்றபோது யாரிடம்சென்றுமுறையிடச் சொல்கின்றீர்கள்? - என்றார்.

கீதா குமாரசிங்க

எனது இரட்டைப்பிரஜாவுரிமையை நீக்கம் செய்வற்கான சான்றிதழை பசில் ராஜபக்சவுக்குக் காட்டியுள்ளேன். அடுத்த தேர்தலில் பொதுமக்கள் முன்னணியின்சார்பில்காலிமாவட்டத்தில்களமிறங்குவேன் - என்றார்.

(4.31)



மேல்மாகாண சபையில் ஆபாசப்படங்கள்பார்த்தமைபற்றி விசாரிக்குமாறு செயலர் உத்தரவு

கொழும்பு, நவ. 22

மேல் மாகாண சபையின் வரவு செலவுத் திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், சில உறுப்பினர்கள் சபையில் இருந்த கணினியில் ஆபாசக் காட்சிகளை பார்வையிட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாகாணத்தின் தலைமைச் செயலர் பிரதீப் யசரத்ன இதனைத்தெரிவித்தார்.

"மேல்மாகாணமுதலமைச்சர் இசுரு தேவப்பிரியவின் பணிப்புரையின் கீழ் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மாகாண சபை உறுப்பினர்கள் குணசிறிஜெயநாத், சுமித்சொய்சா மற்றும் கீர்த்தி காரியவசம் ஆகிய மூவர் மீதே இந்த விசாரணைமுன்னெடுக்கப்படவுள்ளது. மாகாணசபைக்குள் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளமையை உறுதிப்படுத்தும் வகையில் சபைக்குஇணையத்தளவசதிகளை வழங்கும் அமைப்பிடம் அறிக்கையொன்று கோரப்பட்டுள்ளது. அந்த அறிக்கை கிடைத்தவுடன் அடுத்தகட்டநடவடிக்கைகள் எடுக்கப்படும்" என்றும்மேல் மாகாணதலைமைச்செயலர் பிரதீப்யசரத்னதெரிவித்தார். ஆறரைபில்லியன்ரூபாவுக்கும்அதிகபணம்செலவிட்டு, பத்தரமுல்ல - டென்சில் - கொப்பாகடுவமாவத்தையில் அமைக்கப்பட்டமேல்மாகாண சபையின் புதிய கட்டடத்தில் முதலாவது சபைக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அடுத்தவருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதே மாகாண சபை அமர்வின் முக்கிய நோக்கம். முதல்மைச்சர் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்த சந்தர்ப்பத்தில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மூவர் ஆபாசக் காட்சிகளைப்பார்வையிட்டனர்.

நவீனகட்டமைப்புக்களுடன் கூடியஇந்தக்கட்டடத்திலுள்ள மண்டபத்தில், அனைத்து உறுப்பினர்களுக்கும் இணையத்தள வசதிகளுடன் நவீன கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

2012ஆம் ஆண்டு இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் இவ்வாறானசம்பவமொன்று பதிவானது. தங்களின்தனிப்பட்ட கைபேசிகளிலேயே அவர்கள்சபைக்குள்இவ்வாறான காட்சிகளை பார்வையிட்டுள்ளனர். மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் அவர்கள் மூவரும் பதவி விலகியிருந்தனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(4)

அரச தலைவர் செயலகம்முன் நடந்தது ஞானசாரதேரரைவிடுவிக்கும்நாடகமே

நாடாளுன்ற உறுப்பினர் இம்ரான் கூறுகிறார்

மூதூர், நவ. 22

ஞானசார தேரரை விடுவிப்பதற்கான நாடகமே அரச தலைவர் செயலகத்துக்கு முன்பாக நடைபெற்றது என்றுநாடாளுமன்றஉறுப்பினர்இம்ரான்தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்று முன்தினம் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:.

மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் கண்டி திகன கலவரத்தின் சூத்திரதாரி விடுவிக்கப்பட்டார். இன்னும் சில தினங்களில் ஞானசார தேரரை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்வதாக அரசதலைவர்தெரிவித்துள்ளார். ஆகவே யார் திகன கலவரத்தின்பின்னணியில் இருந்தார்கள். யார் இனவாதிகளைப்பாதுகாத்துஇனவாதத்தை தூண்டினார்கள் என்பனவற்றைத் தற்போது பொதுமக்கள்புரிந்துகொள்ள முடியும்.

போராட்டம் நடத்திய பிக்குகளுக்குத் தாக்குதல் நடத்துவது போன்று மக்களுக்குக் காட்டிவிட்டுஅவர்களைஅரச தலைவர்உள்ளேஅழைத்து பேச்சு நடத்தி ஞானசார தேரரை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளித்துள்ளார்.

சட்டம் ஒழுங்கு அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு என்று சகல அதிகாரங்களையும் தன்னிடம் வைத்திருக்கும் அரச தலைவர், போராட்டம் நடத்தியவர்களுக்குத்தாக்குதல் நடத்தத் தான் உத்தரவிடவில்லை என்று கூறுவது சிறுபிள்ளைத்தனமாகஉள்ளது. இவ்வாறுதான்நல்லாட்சியிலும் எதிர்மறை விமர்சனங்களை ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் திருப்பிவிட்டுநல்லவர்போல்மக்கள் முன்நாடகமாடினார்.

ராஜபக்ச்களின் வழக்குகளை விசாரணை செய்துவந்த குற்றப்புலனாய்வுப் பிரிவுஅதிகாரிநிசாந்தசில்வா இடமாற்றம்செய்யப்பட்டார். இவர்களின்ஆட்சிநீடித்தால் வெள்ளைவாகனகலாசாரத்தையும்ஊடகஅடக்குமுறையையும் மீண்டும் நாம் எதிர்கொள்ள நேரிடும்.

திருடர்களைப்பிடிப்பதாகவும் இனவாதிகளை அழிப்பதாகவும்வாக்குறுதிஅளித்துவெற்றிபெற்ற அரச தலைவர் மைத்திரிதற்போதுதிருடர்களுக்கும் இனவாதிகளுக்கும்துணையாக நிற்பதுகவலையளிக்கிறது - என்றார்.

(4,40)

சம்பள முரண்பாடு பற்றி ஆணைக்குழுவின் அறிக்கை அடுத்தவாரம் மைத்திரியிடம்

அரசசேவையில் நிலவும் சம்பள முரண்பாடுகள் தொடர்பில் பரிசீலனை செய்து பரிந்துரைகளை முன்வைப்பது தொடர்பில் நியமிக்கப்பட்ட சிறப்பு ஆணைக்குழுவின் அறிக்கை அடுத்த வாரம் அரசதலைவரிடம் கையளிக்கப்படவுள்ளது.

அந்த ஆணைக்குழுவின் தலைவர் எஸ். ரனுக்கே இதைத் தெரிவித்தார். தொடருந்து சேவை மற்றும் தபால் சேவை உள்ளிட்ட அரச சேவைகளில் நிலவும் சம்பள முரண்பாடுகள் தொடர்பில், ஆணைக்குழு பரிசீலனை செய்துள்ளது. சம்பள முரண்பாடுகளைக் களைவதற்கான பரிந்துரைகள் பல வற்றை அறிக்கையினூடாகச் சமர்ப்பிக்கப்படும்" என்று மேலும் தெரிவித்தார்.

(4)

இராணுவ வாகனம் மோதியதால் உயரழுத்த மின்கம்பம் முறிந்தது

கிளிநொச்சி,நவ.22
கிளிநொச்சி ஏ-9 வீதியில் மத்திய கல்லூரிக்கு முன்பாக உள்ள உயரழுத்த மின் கம்பத்துடன் இராணுவத்தின் கனரக வாகனம் நேற்று மாலை மோதியதில் மின் கம்பம் முறிந்தது.
மின்சார சபை அலுவலகத்துக்கருகில் சம்பவம் இடம்பெற்றதால் கம்பம் உடனடியாக சீராக்கப்பட்டது.
பரந்தன் பகுதியில் இருந்து இரணைமடு நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவத்தின் கனரக வாகனம் கட்டுப் பாட்டை இழந்து வீதியை விட்டு விலகியதால் விபத்து ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (214)

சங்கிலியை அபகரித்த நபர்களை நீதிமன்றில் அடையாளம் காட்டிய பெண்

சாவகச்சேரி. நவ.22
உந்துருளியில் பயணித்த பெண்ணின் தங்கச் சங்கிலியை அபகரித்த இரு நபர்களையும் சங்கிலியைப் பறிகொடுத்த பெண் நீதிமன்றில் அடையாளம் காட்டினார்.
கடந்த ஒக்ரோபர் மாதம் 29 ஆம் திகதி. கடமையிலிருந்து வீடு திரும்பிய பெண் அலுவலரைப் பின் தொடர்ந்து சென்ற இருவர், நாவற்குழிப் பகுதியில் வைத்து கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளனர்.
சங்கிலி அறுத்தவர்கள் செலுத்திய உந்துருளியின் இலக்கத்தைக் குறித்துக் கொண்ட பெண் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.
விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் உந்துருளியின் உரிமையாளரைக் கைது செய்து அவர் கொடுத்த தகவல் மூலம் வேறு சிலரையும் கைது செய்தனர்.
திருடிய நகையை விற்பனை செய்த யாழ்ப்பாணம் நகை உற்பத்தி நிலையத்தின் உரிமையாளர், ஊழியர் என ஐந்து பேரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர்.
இந்த ஐந்து பேரையும் நீதிமன்றில் முற்படுத்தியபோது உந்துருளி உரிமையாளர் நகைக் கடை உரிமையாளர் ஊழியர் ஆகியோரைப் பிணையில் விடுவித்த நீதிவான், சங்கிலியைத் திருடிய இருவரையும் அடையாள அணிவகுப்பில் நிறுத்துமாறு உத்தரவிட்டு வழக்கை நேற்று வரை ஒத்தி வைத்தார். நேற்று மூடிய அறையில் அடையாள அணிவகுப்பு இடம்பெற்றபோது, சங்கிலியைப் பறிகொடுத்த பெண் சாட்சியாக அழைக்கப்பட்டிருந்தார்.
தனது சங்கிலியைத் திருடிய இருவரையும் பெண் அடையாளம் காட்டியுள்ளார். இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப் பட்டபோது முதலாவது சந்தேக நபருக்கு ஏற்கனவே பிறிதொரு வழக்கில் அடையாள அணிவகுப்பில் நிறுத்த வேண்டியதால் அவரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறும், இரண்டாவது சந்தேகநபரை நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர் மூலம் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்லவும் அனுமதித்தார்.
(9)

தெரிவுசெய்த வீதியை விட்டு வேறொரு வீதி சீரமைப்பு!

நானாட்டான் பிரதேச சபை அமர்வில் குழப்பம்

மன்னார், நவ.22
மாகாணத்துக்கு ஒக்கப்பட்ட நிதியில் 3.5 மில்லியன் ரூபா முருங்கன் பிட்டி கிராமத்து வீதி சீரமைப்புக்காக ஒதுக் கப்பட்டிருந்தது. இந்த வீதி சீர் செய்யப் படாமல் வேறு வீதி சீர் செய்யப்படுகிறது எனக் குற்றம் சுமத்தி உறுப்பினர் ஒருவர் குழப்பத் தில் ஈடுபட்டார்.

நானாட்டான் பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவு திட்ட சிறப்பு அமர்வு தவிசாளர் தி.பரஞ்சோதி தலைமையில் நேற்று இடம்பெற்றது.
சபையில் வீதி தொடர்பில் எழுந்த குழப் பத்துக்கு பின்னர் இனி அபிவிருத்தி தொடர்பான நிதிச் செயற்பாடுகள் அனைத்தும் சபையின் அனைத்து உறுப்பினர்களின் தீர்மானத்துட னேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்று எதிர்தரப்பு உறுப்பினர்களால் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.
தவிசாளர் தி.பரஞ்சோதி கருத்துத் தெரி விக்கையில்:
மாகாண குறித்தொதுக்கப்பட்ட 3.5 மில்லியன் ரூபா நிதியில், தெரிவு செய் யப்பட்ட சில வீதிகள் அடுத்த வருடம் அபிவிருத்தி செய்ய இருப்பதால், மாகா ணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் செய் யப்படவுள்ள வீதியில் மாற்றம் செய்ய வேண்டியிருந்தது. சீரற்ற காலநிலை என்பதாலும் பெறப்பட்ட நிதி திரும்பிச் சென்றுவிடக் கூடாது என்பதாலும் முருங்கன்பிட்டி கொல்லர் சிறுக்குளம் வீதி சீரமைப்பு செய்யப்பட்டது.
விவாதத்துக்கு உள்ளான சில வீதிகள் வேறு திணைக்களங்களுக்கு சொந்த மானதாக இருப்பதால் அந்த வீதிக ளுக்கு அவசர வேலைத்திட்டங்களை செய் வது பொருத்தமற்றது- என்றார். (213)

புத்தளம் மக்களுக்கு ஆதரவாக யாழ். பல்கலை மாணவர்கள் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம்,நவ.22
புத்தளம்- அருவக்காடு பகுதியில் நடை பெறும் குப்பை கொட்டும் செயற் பாட்டை எதிர்த்து. போராடி வருகின்ற மக்களுக்கு ஆதரவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவ மாண வர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.
யாழ்ப்பாணம் கைதடியிலுள்ள சித்த மருத்துவப்பிரிவுக்கு முன்னால் நேற்று மதியம் இந்தப் போராட்டம் நடைபெற் றது.
புத்தளம் மாவட்டத்தின் அருவக்காடு பகுதியில் வெளியிடங்களிலிருந்து கொண்டு வந்து கொட்டப்படும் குப்பை களால் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுவ தாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.
பாதிக்கப்படும் மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுத் தொடர்ச்சியாகப் போராட் டங்களை முன்னெடுத்து வருகின் றனர்.
அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து சித்த மருத்துவ மாணவர்களும் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். "எம் நிலத்தை தோண்டி விதை போடு விஷம் போடாதே". "இனியும் தூங்க மாட்டோம்", எம் எதிர்காலத்தை கறுப் பாக மாற்ற விடமாட்டோம். "இலங்கை சிங்கப்பூரின் குப்பை தொட்டியா" போன்ற வாசகங்கங்கள் எழுதப்பட்ட பதாகைகள் தாங்கிய வாறு போராட்டத் தில் ஈடுபட்டனர்.
இந்தக் குப்பை கொட்டும் திட்டத்துக்கு எதிராக புத்தளம் கொழும்பு காலி முகத் திடலில் 50 நாள்களைக் கடந்து தொடர் அறவழிப் போராட்டத்தில் ஈடுபடும் மக் களுக்கு ஆதரவு தெரிவித்து, பொது அமைப்புகள் மற்றும் சூழலியல் ஆர்வ லர்களினால் கவனவீர்ப்புப் போராட் டம் நாளை வெள்ளிக்கிழமை மதியம் 1.30 மணியளவில் யாழ்ப்பாணம் முதன்மை பேருந்து நிலையத்திற்கு முன்பாக இடம்பெறவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (7)

தென்னை செய்கையாளர்களுக்கு மானியக் காசோலை வழங்கல்

யாழ்ப்பாணம்,நவ.22
கிளிநொச்சி மாவட்ட தென்னை செய்கையார்கள் 250 பேருக்கு நடப்பு ஆண்டு மானியத்துக்கான காசோ லை அண்மையில் வழங் கப்பட்டன.
தென்னைப் பயிர் செய்கைச் சபையால் பயனாளிகளுக்கு பல்வேறு மானியங்கள் வழங்கப்பட்டு வருகிறது.
சேதன பசளையிடல், தொல மைற் பசளையிடல், நீர்ப் பாசனம் போன்ற பல்வேறு முறைகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. நடப்பு வரு டத்தில் கிளிநொச்சி மாவட்டத் தில் 250 பயனாளிகளுக்கு காசோலை வழங்கப்பட்டன. 1.2 மில்லியன் ரூபா இந்த மானியத்துக்காக ஒதுக்கப்பட் டது. கிளிநொச்சி பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத் தில் தென்னை பயிர் செய்கை சபையின் பிராந்திய முகா மையாளர் தே.வைகுந்தன் தலைமையில் நிகழ்வு நடை பெற்றது. (7)

ஆள்கள் இல்லாத வீடுகளில் பகல் திருட்டு

யாழ்ப்பாணம், நவ. 22
ஆள்களில்லாத வீடுகளில் ஓடு பிரித்து உள்ளிறங்கும் திருடர்கள் வீட்டில் உள்ள பொருள்களை திருடிச் சென்ற சம்பவம் கோப்பாய் தெற்கு மற்றும் கோப்பாய் மத்தி ஆகிய பகுதிகளில் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளதென கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.
கோப்பாய் மத்தியில் வீட்டின் கூரையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள், மூதாட்டி யொருவர் சத்தமிட அவரைத் தாக் கியதுடன், அவர் அணிந்திருந்த நகைகளை அபகரித்துச் சென்றுள் ளனர். கோப்பாய் தெற்குப் பகுதியி லும் ஆள்களில்லாத வீட்டினுள் ஓட்டினைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் அங்கிருந்த பணம் உட் பட பெறுமதியான பொருள்களை யும், மற்றொரு வீட்டில் உள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த கவரிங் நகைகளையும், திருடிச் சென்றுள்ளனர் என்று முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த திருட்டுச் சம்பவங்களையடுத்து பொலிஸாரும், இளைஞர்களும் இரவு பகலாக விழிப்பு குழு நட வடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.
(9)

பரிசளிப்பு விழாக்கள்

காசிப்பிள்ளை வித்தியாலயம்

யாழ்ப்பாணம் நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பிரான்சிஸ் சேவியர் அன்ரன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக விரிவுரையாளர் தி.நிசாங்கன் கலந்துகொண்டார். மதிப்புறு விருந்தினர்களாக வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் ந.கஜேந்திரகுமார்மற்றும்நல்லூர்பிரதேசசபைஉறுப்பினர் தெ.கிரிதரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அம்பன் அ.மி.த.க. பாடசாலை

யாழ்ப்பாணம் அம்பன் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் வே.பரமேஸ்வரன்தலைமையில்அண்மையில்நடைபெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக பாடசாலை பழைய மாணவனும் மருத்துவருமான பா. அரவிந்தன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்ட கல்வி அதிகாரி திரவியராசா, மதிப்புறு விருந்தினராக அம்பன் கிராம அலுவலர்தோ.யூட்ஆகியோர்கலந்துகொண்டனர். (ம-160)

தீவகம் – சாட்டி மாவீரர் துயிலுமில்லத்தில் செண்பகம், தமிழ் தேசிய செயற்பாட்டுக் குழுமத்தினரால் மாவீரர் தினத்துக்கான ஏற்பாடுகள்தொடர்ச்சியாகமுன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம– 154)

சிறப்புப் பூசை

யாழ்ப்பாணம், நவ. 22

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும்மாணவர்களின்வெற்றிக்கானவழிபாடும்ஆசீர்வாத நிகழ்வும்சண்டிலிப்பாய்வீணாகாணகுருபீடத்தில்எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை இடம் பெறவுள்ளன. (ம)

வலி.மேற்கு, தென்மேற்கில்

என்றுமில்லாதவாறான வகையில் நெற்பயிர்களை மூடிக் களைகள்

யாழ்ப்பாணம், நவ. 22

வலி.மேற்கிலும் வலி.தென்மேற்கிலும் களைகள் என்றுமில்லாதவாறான வகையில்நெற்பயிர்களைமூடிவளர்ந்துள்ளனஎன்றுவிவசாயிகள்கவலை தெரிவித்தனர். நெற்சப்பி, கோழிச்சூடன், நெற்பவனம், குதிரைவில் மற்றும் கோரை என பல களைகள் நெற்பயிர்களை மூடியுள்ளன.

மேற்படி களைகளை கடந்த காலங்களில் பிடுங்கி அழித்தது போன்று தற்போதும்பிடுங்கிஅழிப்பதற்குபொருத்தமான பெண் கூலிகளை விவசாயிகள் பெறமுடியாத நிலையேற்றபட்டுள்ளது.

வெவ்வேறு புதிய பெயர்களில் களை கொல்லிகள் வந்த போதிலும் மேற்படி களை கொல்லிகளால் களைகளைக் கட்டுப்படுத்தமுடியாதநிலையேற்றபட்டுள்ளதுஎன்றும்விவசாயிகள்கவலை தெரிவித்துள்ளனர். (ம-50)

ஆசிரிய ஆலோசகர் வெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 22

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் வடமாகாணகல்விவலயங்களில்நிலவும் ஆசிரிய ஆலோசகர் வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்தோரிடமிருந்துவிண்ணப்பங்கள்கோரப்பட்டுள்ளன.

தகைமைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பான அறிவுறுத்தல்களை வலயக் கல்வி பணிமனையிலும்மாகாண கல்வி திணைக்களத்தின் www.edudept.np.gov.lk எனும் இணையத் தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தியவிண்ணப்பங்களைவலயக் கல்விப் பணிப்பாளரூடாக எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வடமாகாண கல்வி பணிப்பாளர் செ.உதயகுமார்அறிவித்துள்ளார். (ம-422)

நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் நிதி ஒதுக்கீட்டில் மல்வம் றோ.க.த.க. பாடசாலைக்கு மடிக்கணினியும், மயிலங்காடு இளைஞர் நற்பணி மன்றத்துக்கு நிழற்படப் பிரதி இயந்திரமும் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டன. உடுவில் பிரதேச செயலகத்தில் நேற்றுக் காலை பிரதேச செயலர் ஜெயக்காந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தனின் சார்பில் வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டார். (ம– 8)

மாணவர்களிடையே ஊக்குவிப்பு நிகழ்வுகள் நடத்தப்படுவது மிகவும் இன்றியமையாததே

மருதங்கேணி பிரதேச செயலர் கனகேஸ்வரன் தெரிவிப்பு

சாவகச்சேரி, நவ. 22

மாணவர்களிடையேஊக்குவிப்புநிகழ்வுகள் நடத்தப்பட வேண்டும். இது விருது பெறும் மாணவர்களுக்கும், ஏனையமாணவர்களுக்கும்உந்துசக்தியைக்கொடுக்கும்என்றுதெரிவித்தார் மருதங்கேணி பிரதேச செயலர் க.கனகேஸ்வரன்.

தென்மராட்சிக்கல்விவலயத்தால்நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றியீட்டிய சாதனையாளர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் கடந்த 17ஆம் திகதி நடைபெற்றது. அந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

மாணவர்களுக்கு இணைப்பாட விதானச்செயற்றிட்டத்தின்கீழ்ஆரம்பப்பிரிவு, இடை நிலைப் பிரிவு, உயர் பிரிவு ஆகிய பிரிவுகளில் பல்வேறு வகையிலான போட்டிகள் நடத்தப்படுகின்றன. பங்குபற்றும் மாணவர்கள் தமது திறமைகளை வெளிக்கொணர்ந்துவெற்றிபெறுகின்றனர். அவர்களுக்கான மதிப்பளிப்பைப் பாடசாலை மட்டத்தில் மட்டும் மேற்கொள்ளாது அவற்றையும்தாண்டிபெரியளவில்முன்னெடுக்க

வேண்டும். இவ்வாறான நிகழ்வுகளை நடத்தும்போது நிகழ்வைக் காணவரும் மாணவர்களுக்கு தாமும் அடுத்த முறை மேடையில் ஏறி மதிப்பளிப்புப் பெற வேண்டும்என்ற எண்ணம்ஏற்படும்.

நிகழ்வைக் காணச் செல்லும் அதிபர்கள், ஆசிரியர்களுக்கும் இந்த நிகழ்வுகள் ஊக்கத்தையளிக்கக்கூடியதாகஅமையும்-என்றார். (ம-9)

மரநடுகை

யாழ்ப்பாணம், நவ. 22

மரநடுகைமாதத்தைமுன்னிட்டு நெடுந்தீவுப் பிரதேசத்தில் பயன்தரும் மரக்கன்றுகளை நடுகை செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்கும் முப்பது பலாக் கன்றுகள்படி ஆறு கிராம அலுவலர்கள் பிரிவுகளிலும்180வரையிலான பலாக் கன்றுகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளனஎன்று நெடுந்தீவுபிரதேசசெயலர் தெரிவித்தார். (ம-17)

குமாரால தீபம்

நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் நாளை வெள்ளிக்கிழமை குமாரால தீபத்தை முன்னிட்டு மாலை 6 மணிக்கு சொக்கப்பானை எரித்தல் இடம் பெறும்.

அன்றையதினம்காலை10 மணிக்கு விநாயக விரதம் ஆரம்பத்தை முன்னிட்டு சிறப்புப் பூசைகள் நடைபெறும். தொடர்ந்து திருக்கார்த்திகை உற்சவம் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். (ம-17)

சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் சாரண மாண வர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு பாட சாலை மண்டபத்தில் அதிபர் லலிதாமலர் முகுந்தன் தலைமையில் அண்மையில் நடை பெற்றது. மாணவர்களுக்கான சின்னங்களை பாடசாலை அதிபரும், உபஅதிபரும் சூட்டி னார்கள். (ம–159)

குருதிக்கொடை

யாழ்ப்பாணம், நவ. 22
யாழ்ப்பாண பிராந்திய மக்கள் வங்கியின் வருடாந்த குருதிக் கொடை நிகழ்வு எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.
மக்கள் வங்கியின் ஆண்டு நிறைவை முன்னிட்டு வருடாவரு டம் இந்த குருதிக் கொடை நிகழ்வு நடத்தப்படுகிறது.
'உயிர்தந்த தேசத்துக்கு உதிரம் கொடுப்போம்' என்னும் தொனிப்பொரு ளில் இந்த வருட நிகழ் வுகள் மக்கள் வங்கியின் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிக் கிளையில் எதிர் வரும் ஞாயிற்றுக்கி ழமை காலை 8 மணி முதல் இடம்பெறவுள் ளன. (ம)

விநாயகர் விரதம்

யாழ்ப்பாணம், நவ. 22
நீர்வேலி அரச கேசரிப் பிள்ளையார் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை விநாயகர் விரதாரம் பத்தை முன்னிட்டு நண்ப கல் 11 மணிக்கு சிறப்பு அபிசேகம் மற்றும் பூசை வழிபாடுகள் என்பன நடைபெறவுள்ளன.
தொடர்ந்து மாலை 6 மணிக்கு இலட்சார்ச் சனை மற்றும் பிள்ளை யார் கதை படிப்பு என்பன இடம்பெறும் என்றும் அறி விக்கப்பட்டுள்ளது. (ம-17)

பரிசளிப்பு நிகழ்வு

கொடிகாமம், நவ. 22
சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட வரணி பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாதத்தை முன் னிட்டு நடத்தப்பட்ட போட் டிகளுக்கு பரிசில் வழங் கும் நிகழ்வு இன்று வியா ழக்கிழமை காலை 9.30 மணிக்கு வரணிப் பொது நூலகத்தின் மண்டபத் தில் சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாம தேவன் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் முத ன்மை விருந்தினராக ஓய் வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே.பால சுப்பிரமணியம் கலந்து கொள்ளவுள்ளார்.
சிறப்பு விருந்தினர்களாக வரணி பிரதேச மருத்துவ மனையின் மருத்துவ அதிகாரி பீ.எஸ்.மதன், வரணி மத்திய கல்லூரி அதிபர் ப.செல்வவிநாய கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். மதிப் புறு விருந்தினர்களாக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக சனசமூக நிலைய அபிவிருத்தி உத் தியோகத்தர் திருமதி செ.ஜெகதீசன், நூலக அபி விருத்தி ஆலோசனை சபை உறுப்பினர் சி.அரு ணாசலம் ஆகியோர் கலந்து கொள்ளவுள் ளனர்.
(ம-159,122)

வரவைவிடச் செலவு அதிகம் என்பதால்

சுற்றுலாத் துறைக்கு எழுதாரகை மாற்றம்

யாழ்ப்பாணம், நவ. 22

எழுதாரகை படகுச் சேவையை சுற் றுலா நோக்கத்துக்காகப் பயன்ப டுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இத னால் அந்தப் படகு வேலணை பிரதேச சபையின் கீழ் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சபையின் தவிசாளர் தெரிவித் தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்தாவது:
சுமார் 6 கோடி ரூபா செலவில் எழுதா ரகை படகு அமைக்கப்பட்டது. ஊர்கா வற்றுறையில் இருந்து எழுவைதீவு மற்றும் அனலை தீவுக்கான பய ணத்தை மேற்கொள்ளப் பயன்பட்டது. அண்மைக்காலமாக அதன் சேவை நிறுத்தப்பட்டு காரைநகர் கடற்பரப்பில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. சுமார் 50 பேர் வரையில் பயணிக்கக் கூடிய இந்தப் படகில் நாளொன்றுக்கு சராசரி யாக 12 பயணிகள் வரையிலேயே பிரயாணம் செய்கின்றனர். ஆனால் பயணத்தில் கிடைக்கும் இலாபத்தை விட, படகின் பராமரிப்புக்கு அதிக செலவு ஏற்படுகிறது என்று யாழ்ப்பா ணம் மாவட்டச் செயலகத்தில் அண் மையில் நடைபெற்ற கூட்டத்தில் சுட் டிக்காட்டப்பட்டது. இந்தப் படகு போக் குவரத்துக்குப் பயன்படுத்துவத்துவது இலாபம் தரக்கூடியதாக இருக்காது என்றும் அந்தக் கூட்டத்தில் தெரிவிக் கப்பட்டது. இதையடுத்து வேலணை பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசத் தில் கடல் சார்ந்த பல சுற்றுலாத் தளங் கள் உள்ளன. இந்தப்படகை நாளாந்த பயணச் சேவைக்கு பயன்படுத்து வதை விட, சுற்றுலா சார்ந்த விடயங் களுக்குப் பயன்படுத்தலாம் என்ற நோக்கில் எழுதாரகை படகை வேலணைப் பிரதேச சபையின் ஆளு கையின் கீழ்ப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என் றார்.
(ம-7)

கஜாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிப்பொருள்கள் வழங்கப்பட்டன

சாவகச்சேரி, நவ. 22
மழை, வெள்ளம் மற்றும் கஜா புயலால் பாதிக்கப் பட்டு சாவகச்சேரி கோயிற் குடியிருப்பு இடைத்தங் கல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள குடும் பங்களுக்கு உணவுப் பண்டங்கள் அல்லாத பொருள்கள் நேற்றுமுன் தினம் வழங்கப்பட்டன.
யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாய கன் மேலதிக மாவட்டச் செயலாளர்களான திரு மதி சு.தெய்வேந்திரம், சு.முரளிதரன், யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவ திணைக்கள உதவிப் பணிப்பாளர் ச.ரவி, தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் மற்றும் அதிகாரி களுடன் இடைத்தங்கல் முகாமுக்குச் சென்று இந்தப் பொருள்களை வழங்கினார். இந்தப் பகுதியில் தங்கியுள்ள மக்கள் எதிர்நோக்கும் தற்காலிக, நிரந்தரப் பிரச்சினைகளுக்கு உட னடித் தீர்வுகளை வழங்குவதற்கான ஏற்பா டுகளை மேற்கொள்ளுமாறு மாவட்டச் செய லாளர் பிரதேச உதவிச் செயலருக்கு உத்தர விட்டார். மாவட்டச் செயலரின் உத்தரவை அடுத்து குடியிருப்புகள் உள்ள காணிகளுக்கு மணல் பறிப்பதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட் டது. (ம-9,159)

பழைய மாணவர் ஒன்றுகூடல்

கொடிகாமம், நவ. 22
சாவகச்சேரி மகளிர் கல்லூரி யின் பழைய மாணவர் ஒன்று கூடல் கடந்த 15ஆம் திகதி வியா ழக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி அதிபரும் பழைய மாணவர் சங்கத் தலைவருமான திருமதி ல.முகுந்தன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது.
கல்லூரியின் எதிர்கால வளர்ச் சித் திட்டங்கள் தொடர்பிலும் அரசின் நிதியுதவிகளைப் பெறு வது தொடர்பிலும் கலந்துரை யாடப்பட்டது. கல்லூரியின் பான்ட் வாத்தியக் குழுவுக்கான சீருடை களை புதுப்பிப்பதற்கு ஒரு லட்சத்து 50 ஆயி ரம் ரூபா தேவைப்படுகிறது என்றும் பிரான்ஸ் தென்மராட்சிக் கழகம் குறித்த விண்ணப்பம் தொடர்பில் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (ம-9,159)

பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

அளவெட்டி, நவ. 22
அளவெட்டி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்ட மும், புதிய நிர்வாகத் தெரி வும் நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மேற்படி சங்க மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் வை.சின்னப் புவின் தலைமையில் நடை பெறவுள்ளது.
வலி.வடக்குப் பிரதேச செய லக கிராம அபிவிருத்தி உத் தியோகத்தர், ஜெ/219 கிராம அலுவலர் ந.உமாகாந்தன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.சர் மிளா ஆகியோரும் இந்த நிகழ்வுகளில் கலந்து கொள் வார்கள் என்று கிராம அபி விருத்திச் சங்கத்தின் செய லாளர் மு.சக்திசேகரம் தெரி வித்துள்ளார். (ம-36)

வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கேசவன் சயந்தனால் பிரமாண அடிப்படையி லான அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டில் இருந்து சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் பூர்த்தி செய் யப்படாத குடியிருப்பு வேலைகளை நிறைவு செய்ய 70 ஆயிரம் ரூபா பெறுமதியான கட்ட மூலப் பொருள்கள் கடந்த 18ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை பயனாளியிடம் வழங்கப்பட்டன. சாவகச்சேரி நகர சபையின் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் மூலப் பொருள்களான சீமெந்து, கூரைத்தகடுகள், மரங்கள் போன்ற வற்றை பயனாளியிடம் கையளித்தார். (ம–9)

10 லீற்றர் கசிப்புடன் இருவர் கைது

முல்லைத்தீவு, நவ. 22
முள்ளியவளை 3 ஆம்வட்டாரத்தில் வீடு ஒன்றைச் சோதனை செய்தபோது 10 லீற்றர் கசிப்புடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
சட்டவிரோதக் கசிப்பு வியாபாரம்மேற்கொள்ளும்வீடு ஒன்றுக்குச் சென்ற பொலிஸார் அங்கு சோதனை மேற்கொண்டபோது10லீற்றர் கசிப்பு இருந்தமை தெரியவந்துள்ளது.
இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவரைக் கைது செய்துள்ளதுடன், வீட்டின் உரிமையாளர் தப்பிஓடியுள்ளார்.
கைதுசெய்யப்பட்ட இருவரையும் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ரி3)

பூநகரிப் பிரதேச செயலகமும், பூநகரி கலாசார பேரவையும் இணைந்து நடத்திய பிரதேச பண்பாட்டு நிகழ்வு கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்றது. முதன்மை விருந்தினராகக் கிளி. மாவட்டச் செயலர் சு.அருமைநாயகமும், சி.சத்தியசீலன், ப.தேவரதன், கந்தசாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

பூநகரி இரணைதீவுமக்கள் அடிப்படைவசதியின்றி அவதி

கிளிநொச்சி, நவ.22
பூநகரி இரணைதீவு மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 6 மாதங்கள் கடந்துள்ள நிலையில் அடிப்படை வசதிகள் இன்றி சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப்பிரதேசசெயலர்பிரிவுக்கு உட்பட்ட இரணைதீவு மக்கள் 1992 ஆம் ஆண்டு போர்ச் சூழல் காரணமாக இடம்பெயர்ந்து, இரணைமாதாநகர் பகுதியில் வசித்து வந்தனர்.
போர் நிறைவடைந்ததன் பின்னர் இரணைமாதா நகர் பகுதியில் தங்கியிருந்தனர்.
தமதுசொந்தஇடத்துக்கு மீள்குடியேறுமாறு வலியுறுத்தி கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.போராட்டம்கொழும்பு வரைநீண்டுசென்றது.
போராட்டங்கள் பல ஆண்டுகளைக்கடந்தபோதும்மீள்குடியேற்றம் செய்வதற்கான வாய்ப்புக்கள் காணப்படாத காரணத்தால்மக்கள்படகுகள் மூலம் தமது சொந்த இடத்தில் தாமே சென்று குடியமர்ந்து கொண்டனர்.
நாளடைவில் மீள்குடியேற்ற அமைச்சின்செயலரால்அந்தப் பகுதி மீள்குடியேற்றத் துக்காக விடுவிக்கப்படுவதாகஅறிவிக்கப்பட்டது.
தற்போது மக்கள் தங்களால் அமைக்கப்பட்ட குடிசைகளையும்,தேவாலயத்தையும்தமது இருப்பிடங்களாகப் பயன்படுத்திவருகின்றனர்.
பொதுவான மூன்று மலசலகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்காலிக வீடுகளோ, அடிப்படை வசதிகளோ இதுவரை ஏற்படுத்தித் தரப்படவில்லைஎனமக்கள்தெரிவிக்கின்றனர்.
இதுதொடர்பாகப்பிரதேசசெயலரிடம்கேட்டபோது,
"இவர்கள் தாமாகவே அங்கு சென்று குடியேறியவர்கள், அவர்களுக்குத் தற்காலிகவீடுகள் வழங்கப்படும் என எந்த அறிவித்தலும் வழங்கப்படவில்லை.
அங்குஅரசசார்பற்றநிறுவனம் ஒன்று இறங்குதுறை மற்றும் நீர்வழங்கல் தொடர்பான திட்டம் ஒன்றை மேற் கொள்ள உள்ளது. அங்கு காணப்பட்ட பாடசாலைக் கட்டடம் தங்குவதற்குஏதுவாகதிருத்திவழங்கப்பட்டுள்ளது. பொதுமலசலகூடம் அமைத்து வழங்கப்பட்டுள்ளது.
இந்த ஆண்டு நிரந்தர வீடுகள் எவையும் வழங்கப்படவில்லை. அத்தோடு இரணைமாதா நகரில் இவர்களில் அநேக மானவர்கள் வீடுகளைப் பெற்றுள்ளனர்" எனத் தெரிவித்தார். (6)

உலக மீனவர் தினம் பூநகரியில் கடைப்பிடிப்பு

உலக மீனவர் தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் 'எமது எதிர்காலம் எமது கையில்' எனும் தொனிப்பொருளில் உலக மீனவர் தினம் நேற்று முன்தினம் பூநகரியில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.
மன்னார், கிளிநொச்சி, யாழ்பாணம் ஆகிய மாவட்டத்தில் மீன்பிடி தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட குடும்பங்களை மையப்படுத்தி, அவர்களுடையவாழ்வாதாரவளர்ச்சிதொடர்பானவிழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், ஒழுங்கமைக்கப்பட்டது. நிகழ்வுக்குச் சிறப்பு விருந்தினராக வடமாகாண நீரியல் வளத்துறை உதவி இயக்குனர் நிருபராஜ்,யாழ். மாவட்டகடற்தொழில்பரிசோதகர் திருமதி. சுரேஸ்புளோரிடா, மன்னார்சமூகப்பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்தின் அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலகர்பொதுமக்கள்எனப்பலரும்கலந்துகொண்டனர். கடலை அடிப்படையாகக் கொண்ட அட்டை பிடித்தல், இறால், நண்டு, கரவலை, வீச்சு வலை போன்ற தொழில்களில் ஈடுபட்டு குழுக்களாகச் சிறப்பாக இயங்கிவரும்ஆண்மற்றும்பெண்களுக்கும், மீனவர் குழுக்களுக்கும் நினைவுச் சின்னம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டன. (56)

கற்றல் உபகரணங்கள் வழங்கல்

கொடிகாமம், நவ. 22
புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள்வழங்கும்நிகழ்வு ஸ்கந்தபுரம் இல. 2 அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் திருமதி வ.விமலேஸ்வரன் தலைமையில்நடைபெற்றது.
ஸ்கந்தபுரம்இல.2அரசினர் தமிழ்க்கலவன்பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை ஊக்குவிக்கவும் வன்னிவிழிப்புலனற்றோர் சங்கத்தால் பரிசில்கள் வழங்கப்பட்டன. (159)

பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உதவிகள்

வவுனியா, நவ.22
வவுனியா தோணிக்கல் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட தேக்கவத்தைப் பகுதியில், பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு ஆடைகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.
மகளிருக்கான ஆடைகளை நேற்று முன்தினம் தமிழ்த் தாய் இளைஞர் கழகத்தின் வேண்டுகோளுக்கிணங்க வன்னி மண் நற்பணி மன்றத்தால் 25 குடும்பத்துக்கு வழங்கிவைக்கப்பட்டன.
மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழ்த் தாய் கழகத்தின் தலைவர் வ.பிரதீபன், வன்னி மண் நற்பணி மன்றத்தின் தலைவர் மயூரன் ,செயலர் அஜந்தன், பொருளாளர் ஜனார்தனன், மாதர் கிராம அபிவிருத்திச்செயலரும்நகரசபைஉறுப்பினருமாகிய சமந்தா ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

வவுனியாவில் முதியோர் மதிப்பளிப்பு

வவுனியா பனிக்கர்புளியங்குளம் கிராம முதியோர்கள் மதிப்பளிப்பும் பன்னாட்டு முதியோர் தினமும் நேற்று முன்தினம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் கிராம அபிவிருத்திச்சங்கம், கிராம முதியோர் சங்கம், சனசமூக நிலையம், ஆலய நிர்வாகத்தினர் ஆகியோரின் அனுசரணையில் இடம்பெற்றது. பனிக்கர்புளியங்குளம் அரசினம் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் திருமதி. கு. அருந்தவராணி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பனிக்கர்புளியங்குளம்கிராமத்திலுள்ளஅதிகூடியவயதுடைய இருவருக்குப் பென்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டது. அந்தப் பகுதியிலுள்ள 50 ற்கும் மேற்பட்ட முதியோர்களுக்கு நினைவுப் பரிசில்களும் வழங்கிவைக்கப்பட்டன.

தேங்காய்த்திருடர்கள் மாட்டிக் கொண்டனர்

முல்லைத்தீவு, நவ. 22
முல்லைத்தீவு முள்ளியவளைப் பிரதேசத்தில் தேங்காய் வியாபாரம் செய்பவர் வீட்டில் இருந்த தேங்காய்களைத் திருடியவர்கள் பிடிக்கப்பட்டுள்ளனர்.
தனது வீட்டில் தேங்காய்களை வாங்கி குவித்துவைத்து, வியாபாரம்செய்துவந்தவரின்வீட்டில்இருந்து, அண்மை நாள்களாகத் தொடர்ச்சியாகத் தேங்காய்கள் களவு போயுள்ளன.
இவரின் வீட்டுப் பசுக்கன்று ஒன்றும் களவு போயுள்ளது.
சம்பவம் அறிந்த முள்ளியவளைப் பிரதேசத்தில் உள்ள கரைதுறைப்பற்றுப்பிரதேசசபைஉறுப்பினர்சி.லோகேஸ்வரன், திருடர்களைப் பிடிக்க வேண்டும் என்று திட்டம் போட்டுள்ளார். கடந்ததிங்கட்கிழமைஇரவுதேங்காய்கள் களவாடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.
இந்தச்சம்பவம்குறித்துமுள்ளியவளைப்பொலிஸ்நிலையத்துக்குத் தகவல் கொடுக்கப்பட்டுள்ளதுடன், பிரதேச இளைஞர்கள் பகுதியின் வீதிகளில் சந்திகளில் கண்காணிப்பில்ஈடுபட்டுள்ளனர். முள்ளியவளைப் பொலிஸார் சிறுவீதிகள், குறுக்கு வீதிகளில் சோதனை செய்தபோது தேங்காய்களைக் களவாடிகொண்டுசென்றஇருஇளைஞர்களைக் கைதுசெய்துள்ளார்கள். முள்ளியவளை, பொன்னகர் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களே தேங்காய்களைத் திருடியமை தெரியவந்துள்ளது.
கைதானவர்களைபொலிஸ்நிலையத்தில்தடுத்துவைத்து விசாரணை மேற்கொண்டுடன் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த முள்ளியவளைப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ரி3)

கரிசனை அமைப்பால் உதவி வழங்கல்

கொடிகாமம், நவ. 22

அற்புத குடும்ப கரிசனை அமைப்பால் ஒளிரும் வாழ்வு அமைப்பின் அலுவலகத்தில் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அமைப்பின் தலைவர் ப.ராஜகுமார் தலைமையில் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றது.

அற்புதகுடும்பகரிசனைஅமைப்பின்இயக்குநர், ஒளிரும் வாழ்வு அமைப்பின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்

ஒளிரும் வாழ்வு அமைப்பினுடைய அறிவுச்சோலை கல்விப்பிரிவின் அங்கத்துவப் பிள்ளைகள் 65 பேருக்குக் கற்றல் உபகரணங்களும் விளையாட்டு உபகரணங்களும் மாற்றுத் திறனாளிகளுக்கான ஆதார உபகரணங்களும் (ஊன்றுகோல்) வழங்கப்பட்டன. (159)

ஈருருளியும் வீட்டுப் பாவனை பொருள்களும் வழங்கல்

கொடிகாமம், நவ. 22

வறிய மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் ஈருருளியும் வீட்டுப் பாவனை பொருள்களும் வழங்கப் பட்டுள்ளன.

சுன்னாகத்தைச் சேர்ந்த அமரர் பத்மநாதன் கிசோக்கின் பிறந்தநாள் நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று முன் தினம் இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

முகமாலைப் பிரதேச பாடசாலைகளில் வறுமையில் உள்ள கற்றல் தேவையுடைய, தெரிவு செய்யப்பட்ட 15 மாணவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களும், வறுமைக்கோட்டின் கீழ் புளியம்பொக்கணை யில் வசிக்கும் குடும்பத்துக்கு அன்றாட வீட்டுப் பாவனைப் பொருள்களும் வழங்கிவைக்கப்பட்டன. (159)

வவுனியாவில் வாள்வெட்டு இருவர் மருத்துவமனையில் மூவர் கைது

வவுனியா, நவ. 22

வவுனியா தாலிக்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் மதியம் ஒரு மணியளவில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இருவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மூவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா, தாலிக்குளம் பகுதியில் இரு இளைஞர் குழுக்களுக்கிடையே இடம்பெற்ற கருத்து முரண்பாடு, வாள்வெட்டுத் தாக்குதலாக மாறியது. வாரிக்குட்டியூர் பகுதியைச் சேர்ந்த 20 வயது மதிக்கத்தக்க இரு இளைஞர்கள் வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட பூவரசங்குளம் பொலிஸார் நேற்று மாலை மூன்று இளைஞர்களைக் கைதுசெய்து பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (110,222)

வலயக் கல்விப் பணிமனை முன்பாக

தந்தையை விடுதலை செய்யக்கோரி பிள்ளைகள் கவனவீர்ப்புப் போராட்டம்

வவுனியா, நவ. 22

வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிமனைக்கு முன்பாகத் தந்தையை விடுதலை செய்யக்கோரிப் பிள்ளைகள் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் பாடசாலை அதிபர் பாடசாலைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதாகத் தெரிவித்துப் பாடசாலை மாணவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் மேற்கொண்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தின்போது பாடசாலை மாணவனைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் குடும்பத் தலைவர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு 14 நாள்கள் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கைதுசெய்யபட்டவரின் மனைவி, கைக்குழந்தை மற்றும் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் கல்விகற்கும் அவருடைய இரண்டு மகள்களும் இணைந்து, வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிமனை முன்பாகப் பாடசாலைச் சீருடையுடன் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

"பொலிஸாரே எமது முறைப்பாட்டை ஏற்காதது ஏன்?", "எங்களைப் பலவந்தமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுத்திய முஸ்லிம் மகாவித்தியாலய அதிபருக்குச் சட்ட நடவடிக்கை எடு", "அதிபரின் பலவந்தமான ஆர்ப்பாட்டத்தில் இருந்து எங்களை மீட்க வந்த எங்கள் தந்தையைக் கைது செய்தது ஏன்?" போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை ஏந்தியவாறும், தலையில் கறுப்பு பட்டியை அணிந்தவாறும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது,

"கடந்த வெள்ளிக்கிழமை எமது பாடசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. எங்களது தந்தை எம்மைப் பாடசாலைக்கு உள்ளே போகச்சொல்வதற்காக வந்தார்.

அப்போது அதிபரின் தம்பியும் அவரது நண்பர்களும் எமது தந்தையைத் தாக்குவதற்கு முயன்றனர். அந்த நேரம் அங்கு நின்ற போக்குவரத்துப் பொலிஸார் அப்பாவை அதில் இருந்து வெளியேற்றி அனுப்பிவைத்தனர்.

அதன் பின்னர் பாடசாலையில் கல்விகற்கும் அதிபரின் சகோதரியின் மகனை மருத்துவமனையில் அனுமதித்துடன், எங்களது அப்பா மாணவனை அடித்ததாகக் கூறிப் பொலிஸில் முறைப்பாடும் செய்தனர்.

பொலிஸ் அப்பாவைக் கைதுசெய்துள்ளது. எனது அப்பாவை விடுதலை செய்தால் தான் நாங்கள் சாப்பிடுவோம், பாடசாலைக்குச் செல்வோம், பரீட்சை எழுதுவோம்" என்று தெரிவித்தார்கள். (110)

புதுக்குடியிருப்பில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை

புதுக்குடியிருப்பு, நவ. 22

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் இரவு நேரங்களில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாகப் புதுக்குடியிருப்பு மேம்பாட்டுப் பேரவையால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்புப் பகுதியில் உள்ள கால்நடைகளை கட்டுப்படுத்துவதற்காகப் பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ள போதும், ஒருநாள் மட்டும் மாடுகளைப் பிடித்துவிட்டுப் பின்னர் பிடிக்காமல் விட்டுள்ளார்கள் எனத்தெரிவித்தனர்.

பகல் மற்றும் இரவு வேளைகளில் புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியில் கால்நடைகளைக் காணக்கூடியதாக இருக்கின்றது என்று கூறப்படுகின்றது.

இதுதொடர்பில் புதுக்குடியிருப்புப் பிரதேச சபை தவிசாளரிடம் தொடர்பு கொண்டுகேட்டபோது, "நேற்று முன்தினமும் 33 கால்நடைகள் சபையால் பிடிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, பெருமளவான கால்நடைகள் மக்களின் வாழ்வாதாரத்துக்காக வழங்கப்பட்டுள்ளவையாகக் காணப்படுகின்றன.

அவற்றைச் சரியான முறையில் கவனிப்பது அவர்களின் கடமை. எனவே கால்நடைகளைக் கட்டாக்காலிகளாக விடாது கவனமாகப் பாதுகாக்க வேண்டும் - என்றார். (113)

மாற்றுத்திறனாளிகளுக்கான கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுப் போட்டி

கொடிகாமம், நவ. 22

வடமாகாணசமூகசேவைகள்திணைக்களத்தின் கிளிநொச்சிமாவட்டஅலுவலகத்தின்ஏற்பாட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்ட மட்ட விளையாட்டுப்போட்டிகள்நாளைஇடம்பெறவுள்ளன. காலை 9 மணிக்குக் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவாளர் மண்டப வளாகத்தில் மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் தலைமையில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

பிரதேசமட்டப்போட்டிகளில்வெற்றிபெற்றுமுதல் 3 இடங்களைப் பெற்றோர் மாவட்ட மட்டப் போட்டிகளில் பங்குபற்ற உள்ளனர்.

ஆண், பெண் இரு பாலருக்கும் தனித் தனியாக முச்சக்கர வண்டி ஓட்டம், பலூன் ஊதி உடைத்தல், வேகநடை, 100 மீற்றர் ஓட்டம், நீர் நிரப்புதல் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

மாவட்ட மட்டப் போட்டிகளில் முதல் 3 இடங்களைப்பெறுவோர்டிசெம்பர்11ஆம்திகதியாழ்ப்பாணத்தில் நடைபெற உள்ள பன்னாட்டு மாற்றுத் திறனாளிகள்தினநிகழ்வில்வைத்துப்பரிசளித்து மதிப்பளிக்கப்பட உள்ளனர். (159,9)

பல்கலைக் கழகங்களில்கூட தமிழ் வளர்ச்சி திருப்தியில்லை

அழிந்துவரும் மொழியாகிவிட்டது என்று கலாநிதி தமிழ்மணி அகளங்கன் கவலை

சாவகச்சேரி, நவ. 22

திண்ணைப்பள்ளிக்காலத்தில்தமிழின் வளர்ச்சி நிறைந்து காணப்பட்டது. காலப்போக்கில் பல்கலைக் கழகங்களில் கூட அவ்வாறான தமிழ் வளர்ச்சி போது மானதாகக்காணப்படவில்லை. அதனால் உலகில்அழிந்துவரும்300மொழிகளுள் தமிழும் ஒன்றாகக் காணப்படுகிறது.

இவ்வாறு வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் தலைவர் கலா நிதி தமிழ்மணி அகளங்கன் தெரிவித் தார்.

தமிழ்மொழித் தினப் போட்டிகளில் வலய, மாகாண, தேசிய நிலைகளில் வெற்றியீட்டிய தென்மராட்சிக் கல்வி வலயமாணவர்களுக்குமதிப்பளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற் றது. சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக்கலந்துகொண்டுஉரை யாற்றுகையில் அவர் மேலும் தெரிவித் ததாவது:

அந்தக் காலத்தில் வாழ்ந்த அரசனாக இருந்தாலும் புலவனாக இருந்தாலும் ஒவ்வொரு செயற்பாட்டையும் கவிதை வடிவிலேயேஉரையாடியுள்ளனர்என் பதைநூல்கள்மூலமாகஅறியமுடிகிறது. தற்போதைய காலத்தில் கவிதை என் றால் என்னவென்று தெரியாத அள வுக்கு தமிழ் வளர்ச்சி காணப்படுகிறது. புலவர்களின் கவிதைகளில் காணப்ப டும் பொருள் நயங்களை அடுத்தவர் புரிந்துகொள்ளும் அளவுக்கு அமைத் தார்கள். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன்னர் உருவான தமிழ் மொழியின்பாவனைதற்போதுஅனை வரிடத்திலும் குறைந்து வருகின்றது.

குமரக் கடவுளால் உருவாக்கப்பட்டு தமிழ்ச் சங்கம் உட்பட அனைத்து கவி ஞர்கள், புலவர்களால் கட்டிக் காத்த தமிழ்மொழி இன்று உலகத்தில் அழி யும் 300 மொழிகளுள் ஒன்றாகக் காணப்படும் நிலை தோன்றியுள்ளது.

உலக மொழிகளில் ஒன்றான தமிழ் மொழியிலிருந்துஉருவானதிருக்குறள் தொடக்கம்பல்வேறுகாவியங்கள், புரா ணக் கதைகள் பல்வேறு மொழிகளில் உருவாக்கப்பட்டுஅந்தந்தமொழிபேசு பவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அந்தக்கதைகள்பிறமொழிபேசுபவர்க ளால்இன்றும்உதாரணத்துக்குப்பேசப் படுகிறது.

இந்திய அரசதலைவராக இருந்த இராதா கிருஷ்ணன்சேவையிலிருந்துவிலகிய போது, இந்தியாவின் அதி உயர் பதவி யான அரசதலைவர் பதவியை விட்டுச் செல்லும்நீங்கள்அடுத்துஎன்னசெய்யப் போகிறீர்கள்என்றுஊடகவியலாளர்கள் கேட்டனர். எதுவித தயக்கமுமின்றி தான் ஒரு ஆசிரியனாகப் பணியாற் றவே விரும்புகிறேன் என்று அவர் கூறி னார். ஆசிரியத் தொழிலை ஏன் விரும் புகிறீர்கள் என்றுகேட்டபோது, ஆசிரிய ரால்தான் அரசதலைவரை உருவாக்க முடியும். அரசதலைவரால் ஆசிரியரை உருவாக்கமுடியாதுஎனக்கூறியுள்ளார். தமிழ்மொழியில் மட்டுமே ஒரு சொல் லில்பலபொருள்கள்உள்ளதைக்காண முடியும். இது வேறு எந்த மொழியிலும் காணப்படுவதில்லை.

ஒரு பாடசாலையின் மாணவன் விபத் துக்குள்ளாகி தலைமயிரை மொட்டை யாக வழிக்க நேரிட்டது. அதனால் பாட சாலைக்குச் செல்வதற்கு மாணவன் தன்னை மொட்டையன் எனக் கேலி செய்வார்களென்ற அச்சத்தில் செல்லா மல் வீட்டில் இருந்துள்ளான். பெற்றோர் ஆசிரியர்களின் வற்புறுத்தலின் பேரில் தனது வகுப்பறைக்குச் சென்ற அந்த மாணவன்அங்குள்ளமாணவர்களைப் பார்த்துஅதிர்ச்சியடைந்தான். வகுப்பில் காணப்பட்ட அனைத்து மாணவர்க ளும்மொட்டைத்தலையுடன்காணப்பட் டனர். அது அன்றைய மாணவர்களின் ஒற்றுமைத்தன்மையைவெளிப்படுத்தி யுள்ளது - என்றார். (4,9,159)

நந்திக்கடல் நீரேரியின் அணைக்கட்டு உடைப்பெடுப்பு

முல்லைத்தீவு, நவ. 22

முல்லைத்தீவு மாவட்டத்தில் நந்திக்கடல் நீரேரி நிறைந்து அணைக்கட்டு உடைப்பெ டுத்துள்ளது என்று தெரிவிக் கப்பட்டது.

கடந்த மூன்று நாள்கள் பெய்த கடும் மழை பெய்த நிலையில்நந்திக்கடல்நீரேரி நிரம்பி நேற்றிரவு அதன் அ ணைக்கட்டு உடைப் பெடுத்துள்ளது. நீரேரி முல் லைத்தீவுப்பெருங்கடலுடன் சங்கமித்துள்ளது.

வட்டுவாகல்கடல்நீர்ஏரியை நம்பியமீனவக்குடும்பங்கள் மகிழ்ச்சியடைந்துள்ளன. மீனின் பெருக்கம் அதிகரிக் கும்என்றும்தெரிவித்தஅவர் கள் தற்போது வலை வீசித் தொழில் செய்து வருகின் றார்கள்.

அதேநேரம், வட்டுவாகல் ஆற்றை ஆழப்படுத்தித் தரு மா று ம் மீ ன வ ர் க ள் கோரிக்கைவிடுத்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகப்பெரிய நீர் ஏரியாக நந் திக்கடல்காணப்படுகின்றது. கடும்மழையால்4ஆயிரத்து 141 ஹெக்ரேயர் பரப்புடைய நந்திக்கடல் நீர் ஏரியின் நீர் மட்டம் சடுதியாக அதிகரித்தி ருந்தது.

கடும் வறட்சியால் நந்திக்க டல்வற்றியிருந்தது.

நந்திக்கடல் நீர் ஏரியைப் பெருங்கடலுடன்இணைப்ப தானால் மீனவர் மற்றும் விவசாயிகளின் சம்மதத்து டன் மாவட்டச் செயலரின் அனுமதியுடனேயேஅணைக் கட்டு வெட்டிவிடுவது வழக் கம். (4,ri3)

இரணைமடுக்குள வான்கதவுகளை தற்போது திறக்கத்தேவையில்லை

திறக்க முன்னர் அறிவிக்கப்படுமென நீர்ப்பாசனப் பிரதிப்பணிப்பாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, நவ. 22

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின்வான்கதவுகளைத் தற்போதைக்குத் திறக்க வேண்டிய அவசியம் இல்லைஎன்றுகிளிநொச்சிப் பிராந்திய நீர்ப்பாசனத் திணைக்களப்பிரதிப்பணிப் பணிப்பாளர் ந. சுதாகரன் தெரிவித்தார்.

இரணைமடுக்குளம்இன்று திறக்கப்படும், நாளை திறக் கப்படும்என்றுபொதுமக்கள் மத்தியில் கருத்துகள் தெரி விக்கப்பட்டு வருகின்றன. ஆனால் நிலைமை அவ்வா றில்லை. குளத்தில் இன்று (நேற்று) 33அடிஉயரத்துக் குத் தண்ணீர் காணப்படுகி றது. தற்போதுமழைவீழ்ச்சி குறைவடைந்துள் ளது. குளத்துக்கான நீர் வரத்தும் குறைந்துள்ளது.

குளத்தின் சீரமைப்பின்பின் னர் நீர் மட்டத்தை 36 அடி வரை தேக்கி வைப்பதற்குத் தீர்மானித்துள்ளோம். அதன் பின்னரே இரணைமடுக் குளத்தின் வான்கதவுக ளைத் திறப்பது தொடர்பில் ஆராயப்படும். இன்று (நேற்று) தொடக்கம்பிற்பகல் வேளைகளில்குறைந்தளவு மழைவீழ்ச்சிகிடைப்பெறும் சாத்தியங்கள் காணப்படு கின்றன என்று காலநிலைத் தகவல்கள் எதிர்வுகூறியுள் ளன. அடுத்த மாதம் மழை பெய்வதற்கான வாய்ப்புகள் இல்லை. அதனால் குளத் துக்கு நீர் வரத்து இருக்காது. ஆனால் காலநிலையில் மாற்றம் ஏற்பட்டு தாழமுக் கம் ஏற்பட்டால் அதிகளவு மழை வீழ்ச்சி பதிவாகும். குளத்துக்கு நீர்வரத்து அதிக ரித்தால் நிலைமைகளில் மாற்றம் ஏற்படும்.

இரணைமடுக் குளம் 24 மணிநேர தொடர் கண்கா ணிப்பில் உள்ளது. 14 வான் கதவுகள் காணப்படுகிறன. வான்கதவுகள்திறக்கப்படும் எனின் அது தொடர்பில் மாவட்டத்தின் அனைத்துத் தரப்பினர்களுக்கும்முன்ன றிவித்தல் வழங்கப்படும் - என்று சுதாகரன் மேலும் தெரிவித்தார்.

(4,6,35)

நாட்டின் ஜனநாயகத்தை எம்.பிக்களே சீர்செய்யுங்கள்

யாழ். கிறிஸ்தவ வாலிபர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 22

தற்போதைய தேசியப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும், நாடாளுமன்றில் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையைக் காப்பாற்றும் பொருட்டும், நாட்டில் ஜன நாயகம் பேணப்படுவதை உறுதி செய் யுங்கள்.

மக்களால்ஜனநாயகமுறைப்படிதெரிவு செய்யப்பட்ட அனைத்துநாடாளுமன்ற உறுப்பினர்களிடமும், யாழ்ப்பாண கிறிஸ்தவ வாலிபர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பில் சங்கம் அனுப்பிய செய் திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது,

யாழ்ப்பாண கிறிஸ்தவ வாலிபர் சங்கத் தின் ஆளுநர் சபைக்கூட்டம் கடந்த 17ஆம் திகதி நடைபெற்றது. தற்போ தைய நிலை குறித்துக் கவலை வெளி யிட்டது.

நாட்டின்மீயுயர்சட்டவாக்கல்சபையான நாடாளுமன்றம் மக்களால் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நாட் டின் சட்டம், ஒழுங்கு மற்றும் ஜனநாய கத்தைப்பேணிப்பாதுகாக்கும்தன்மை போன்றன பெரிதும் எதிர்பார்க்கப்படு கின்றன.

இன்றைய நிலை இலங்கையில் அர சின்நிலையற்றதன்மையையும்இலங் கையில் பொருளாதார நெருக்கடியை யும் ஏற்படுத்தியுள்ளது.

நாட்டை ஆளுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களில்ஒருபகுதியினர்குழப் பங்களைஏற்படுத்திநாட்டுக்குஅபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் செயற்படுகின்ற னர். இதை நாட்டு மக்கள் விரும்ப வில்லை.

வடக்கு - கிழக்கில்வாழும்தமிழ்மக்கள் நாடாளுமன்றில் பெரும் எதிர்பார்ப்புட னும்,மிகுந்தநம்பிக்கையுடனும்நீண்ட நாள்களாக பேசும் பொருளாக இருந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் தமது உறவுகள் மீளவும் சேரும் அல்லது இணைக்கும் செயற் பாட்டுக்குப்பாதகமானநிலைஏற்படுவது போல் ஏமாற்றங்களைக் கொடுத்துள் ளது. இவர்களுக்கு நியாயமான நீதி கிடைக்க வேண்டியது அவசியம் - என் றுள்ளது. (4)

புத்தளம் போராட்டத்துக்கு ஆதரவாக நாளை கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், நவ. 22

புத்தளத்தில் குப்பை கொட்டும் திட்டத் தைக் கைவிட வலியுறுத்தியும் அந் தத் திட்டத்துக்கு எதிராகவும் புத்தளம் கொழும்பு முகத்திடலில் 50 நாள்க ளைக் கடந்து தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபடும் மக்களுக்கு ஆதரவு தெரிவித்தும் யாழ்ப்பாணத் தில் கவனவீர்ப்பு இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம்முதன்மைப்பேருந்து நிலையத்துக்கு முன்பாக நாளை வெள்ளிக்கிழமை மதியம் 1.30 அள வில்கவனவீர்ப்புஇடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகமாண வர்ஒன்றியம், சமூகநீதிக்கானவெகு ஜன அமைப்பு, யாழ்., கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனம் ஆகிய அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

புத்தளம் நகரிலிருந்து 20 கிலோமீற் றர் தூரத்திலுள்ள வண்ணாத்தி வில்லுபிரதேசசபைக்குட்பட்டசேராக் குழியிலுள்ள அருவக்காடுபகுதியில் சுமார் 64 ஏக்கர்கள் நிலப்பரப்பில் கொழும்பிலிருந்து குப்பைகளைக் கொண்டு வந்து கொட்டத் தீர்மானிக்கப்பட்டு,வேலைகள்ஆரம் பிக்கப்பட்டுள்ளன. (4)

வவுனியாவில் அநாமதேய துண்டுப்பிரசுரங்கள்

வவுனியாபூங்காவீதியின்சிலஇடங்களில் அநாமதேய துண்டுப் பிரசுரங்கள் வீசப் பட்டுள்ளன. பொதுமக்கள்நலன்பேணும் அமைப்பு என்று அவற்றுக்கு உரிமை கோரப்பட்டுள்ளது. நகரசபைக்குஉட்பட்ட வர்த்தக நிலையப் பகுதியில் முறைப் படி யானஅனுமதியின்றிவியாபாரம்நடத்தச் சிலருக்கு நகர சபையினர் அனுமதி வழங்கியது தவறு என்ற சாரப்பட அதில் கருத்திடப்பட்டுள்ளது. (4,110)

மாவீரர் நினைவேந்தல் தினத்தை மாற்றச் சதி!

அதற்கு இடமளிக்கப்படாது என்று வவுனியா பொதுமக்கள் குழு அறிக்கை

வவுனியா, நவ. 22

தமிழீழ தேசிய மாவீரர் நாள் நவம்பர் 21 தொடக்கம் 27 வரையான 'நினைவேந்தல் வாரத்தை' இல்லாமல் செய்து, பிறிதொரு நாளை நினைவு கூருதலுக்கான பொதுநாளாகத் தேர்ந்தெடுக்கும் விசமத்தனமான நடவடிக்கையில் கயமைக்கூட்டம் ஈடுபட்டிருக்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தநிலையில், 'தமிழ்த் தேசிய இனத்தின் வீரஆத்மாக்களை' நெஞ்சத்தில் இருத்தி விசுவாசமாகவும், நன்றியுணர்வாகவும் நினைந்துருகி, கர்வத்தோடும் பெருமையோடும் அஞ்சலித்து 'வீரவணக்கம்' செலுத்துமாறு தமிழீழ மக்களிடம் வலியுறுத்திக் கூறியுள்ளது வவுனியா மாவட்ட பொதுமக்கள் குழு.

நினைவேந்தல் எழுச்சி தொடர்பாக, பொதுமக்கள் குழுவின் தலைவர் கோ.ராஜ்குமார், செயலர் தி.நவராஜ், ஊடகப்பேச்சாளர் அ.ஈழம் சேகுவேரா ஆகியோர் ஒப்பமிட்டு அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கார்த்திகை 27ஆம் திகதியான எதிர்வரும் செவ்வாய்க்கிழமை, வவுனியா மாவட்ட பொதுமக்கள் குழுவின் ஒழுங்கமைப்பில் நினைவேந்தல் இடம்பெறும். வவுனியா நகரசபை உள்ளக மண்டபத்தில் மாவீரர் தெய்வங்களுக்காகப் பிரத்தியேகமாக அமைக்கப்படும் திருக்கோவிலில் ஆலய மணியோசை மூன்று முறை ஒலிக்கவிடப்பட்டு, மாவீரர் உறுதியுரைக் கீதம் இசைக்கப்படும். மாலை 6 மணி 5 நிமிடத்துக்கு மாதிரிக் கல்லறைகளுக்கு முன்பாகப் பொதுச்சுடர் ஏற்றலுடன் மண்டப நிகழ்ச்சியாக மாவீரர் நாள் நினைவேந்தல் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

'எங்களின் சாவு உங்களின் வாழ்வு' எனச் சொல்லி வீழ்ந்தவர்களை, விசுவாசமாகவும் நன்றியுணர்வாகவும் நினைந்துருகிவழிபடும்உயர்குலப்பண்பாட்டின் செல்நெறிநின்று, மாவீரத்தெய்வங்களை வீரவணக்கம் செலுத்த வேண்டும்.

கார்த்திகை மாதம் பிறந்து விட்டாலே போதும், தாயகம், தமிழகம், புலம்பெயர் தேசங்கள் எங்கும் சுயமாகவே எழுச்சி கொண்டு 'விடுதலைக்கான வேட்கையோடு' தமிழர்கள் நிற்பர்.

தமிழீழ தேசிய மாவீரர் நாள் நவம்பர் 21 தொடக்கம் 27 வரையான 'நினைவேந்தல் வாரத்தை' இல்லாமல் செய்து, பிறிதொரு நாளை 'நினைவு கூருதலுக்கான பொதுநாளாக' தேர்ந்தெடுத்து, அந்த நாளில் இந்திய மற்றும் இலங்கை அரசபயங்கரவாதத்தோடு கூட்டுச்சேர்ந்து தமிழ் இனப்படுகொலைகளை நிகழ்த்திய 'புளொட், ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ்,·ரெலோ' போன்ற ஆயுதக் குழுக்களில் இருந்து உயிரிழந்தவர்களையும் இணைத்து அஞ்சலிக்க செய்தல் வேண்டும் என்று, தமது அரசியல் பதவி, அதிகாரங்களைப் பயன்படுத்தி கடுமையான பிரயத்தனங்களை எடுத்து வருகின்றது ஒரு கயமைக்கூட்டம்.

தமிழ் இனத்துரோகிகளான கருணா, பிள்ளையான் உள்ளிட்டவர்களும் இணைந்து கொண்டு, தமிழீழ தேசிய மாவீரர் நாள் நவம்பர் 21 தொடக்கம் 27 வரையான 'நினைவேந்தல் வாரத்தை' மாற்றி அமைத்தே ஆக வேண்டும் என்றும், தேர்ந்தெடுக்கும் 'நினைவு கூருதலுக்கான அந்தப் பொது நாளில்' தமது குழுக்களில் இருந்து 'தேசவள துரோகத்துக் காக' சாவுத் தண்டனை வழங்கப்பட்டவர்களையும் தமிழ் சமூகம் அஞ்சலிக்க வேண்டும் என்றும் வரிந்து கட்டிக்கொண்டு நிற்கிறார்கள்.

இதில் புளொட் கட்சியின் பொருளாளர் சிவநேசன் (பவான்) இன்னும் ஒருபடி மேலே சென்று, வடக்கு மாகாண சபையால் மரநடுகை மாதமாக அறிவிக்கப்பட்டு 'கார்த்திகை' மாதத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மரநடுகையை, ஜூலை மாதத்துக்கு மாற்ற வேண்டும் என்று துடிக்கிறார். தனது புளொட் கட்சியிலிருந்து ஜூலையில் உயிரிழந்த தோழர்களை நினைவுகூரும் முகமாகவே ஜூலையில் அதனை நடத்த முற்படுகின்றனர்.

ஈழத்தமிழர்களின் தேசிய இன விடுதலைக்கான போராட்டம், மலைபோன்ற மக்கள் சக்தியால் மானசீகமாக பொத்திப்பொத்தி பெருநெருப்பாக வளர்த்தெடுக்கப்பட்டது. அதன் பல்வேறுபட்ட காலகட்டங்களிலும் வரலாற்றின் அத்தியாயங்களை அசைத்துப்பார்த்தே கடந்து வந்திருக்கிறது. இத்தகைய சர்வ வல்லமை பொருந்திய மக்கள் போராட்டத்திலே, (எண்ணிக்கையில் ஆகக்கூடிய) பல ஆயிரம் அக்கினிக்குஞ்சுகளை பிரசவித்து, இனமானப்போருக்கு உவந்தளித்து, உலகெல்லாம் வியாபித்திருக்கும் தமிழ் மக்கள் குழுமம், தமிழீழ தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரனால் நெறிப்படுத்தப்பட்ட மரபுகளுக்கு அமைய வழிந்தொழுகி, உணர்வுபூர்வமாக கடைப் பிடித்து வரும் 'மாவீரர் நாள் எழுச்சி வாரத்தை' இல்லாமல் செய்து வரலாற்றை திரிபுபடுத்த முனையும் இந்தக் கயமைகளுக்கு, வலிமையான எதிர்ப்பை தெரிவிக்கிறது.

'தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம், தரகர்கள் அல்ல. அவர்கள் போராளிகள்!' அவர்கள் இந்திய மனோநிலையைப் பிரதிபலிக்காமல், தமிழ் மக்களின் மனோநிலையைப் பிரதிபலித்தவர்கள். யார் எம்மை நிர்ப்பந்திப்பினும் வல்வளைப்பு செய்யினும், 'பணிந்தும் குனிந்தும் கொடாமல், சேவகம் செய்து கெடாமல், நம்மால் முடிந்ததை செய்கின்றோம். முடியவில்லை என்கிறபோது செத்து மடிகின்றோம்' என்று தாம் வரித்துக்கொண்ட உயரிய கொள்கைக்காகவே வாழ்ந்தவர்கள், வீழ்ந்தவர்கள். ஈழதேசத்திலே 'மக்களுக்காக மக்கள்' நடத்திய, தமிழ்த்தேசிய இனத்தின் வாழ்வுரிமைக்கான போராட்டத்தின் நியாயத்தின்பால் உள்ளீர்க்கப்பட்டு, 'விடுதலை' எனும் மகாவிருட்சத்துக்காக தமது உடல்களை இலட்சிய விதையாக்கிய போராளிகளையும், அந்த விதைகளுக்காக தமது குருதி, கண்ணீர், தசை, உயிர்களை உரமாக்கிய அனைத்து உறவுகளையும், ஈகையர்களையும், கொடையாளர்களையும், நாட்டுப்பற்றாளர்களையும், மாமனிதர்களையும் நெஞ்சத்தில் இன்னும் உயர உயர ஏந்திப் பிடித்து விசுவாசமாகவும், நன்றியுணர்வாகவும் நினைந்துருகி அஞ்சலித்து 'வீரவணக்கம்' செலுத்துவோமாக!

மாவீர ஆத்மாக்களின் வீரம் செறிந்த கதைகளை ஆவணமாக்கி பத்திரப்படுத்தி அடுத்ததலைமுறைபிள்ளைகளுக்கும் எடுத்தியம்பும் தேசியப் பெரும் பணியை - தேசியக்கடமையை, 'தரம் தாழ்ந்துபோகாது சிரம் உயர்த்தி நிறை வேற்றுவோம் என்று உறுதி ஏற்குமாறும், கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (4)

மாவீரர் நினைவேந்தலில் அரசியல் பேச்சு வேண்டாம்

மாவீரர் துயிலுமில்லப் பணிக்குழு தெரிவிப்பு

மாவீரர்களுக்காக நினைவு கூரப்படுகின்ற நாளில் அரசியல் மேடைப்பேச்சுக்கு இடமில்லை என்று அம்பாறை கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலுமில்லப் பணிக் குழுவின் தலைவர் நாகமணி கிருஸ்ணபிள்ளை தெரிவித்தார்.



எதிர்வரும் 27 ஆம் திகதி வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மாவீரர் துயிலுமில்லங்களில் நினை வேந்தல் ஏற்பாடுகள் பரவலாக இடம்பெற்றுவருகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் பெயர் போன கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலுமில்லத்தில் முன்னேற்பாடுகள் மற்றும் நிகழ்வுகள் தொடர்பாக பணிக்குழுவினரின் கலந்துரையாடல் திருக்கோவில் வாகீஸ்டர் வீதியில் அமைந்துள்ள வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்க அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கலந்துரையாடல் தீர்மானிக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்ட கஞ்சிகுடிச்சாறு துயிலுமில்லம் பெயர்பெற்ற துயிலுமில்லம். எண்ணூறுக்கும் மேற்பட்ட மாவீரர்களின் வித்துடல்கள் அங்கு விதைக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெற ஏற்பாடு செய்திருக்கின்ற மாவீரர் தினத்தை இன,மத கட்சி பேதமின்றி அனைவரும் வருகை தந்து தேசத்துக்காகவும் எமது மண்ணுக்காகவும் உயிர்நீத்த மாவீரர் செல்வங்களுக்கு மலரஞ்சலி செலுத்தி அகவணக்கம் செய்யுமாறு சகலரையும் அழைப்பு விடுக்கின்றோம் - என்றார். (4)

உருளைக் கிழங்கு விதைகள் 2,000 பேருக்கு வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், நவ. 22

யாழ்ப்பாண மாவட்டத்தில் 2 ஆயிரம் பேருக்கு உருளைக்கிழங்கு விதைகள் வழங்கப்பட்டுள்ளன.

புத்தூர் கமநல சேவை நிலையத்தில்வைத்துநேற்று முன்தினம் இவை வழங்கப்பட்டன.

விவசாய பிரதி அமைச்சர் இ.அங்கஜனின் ஏற்பாட்டில் உருளைக்கிழங்கு உற்பத்திச் செய்கையாளர்களுக்கு விதை உருளைக்கிழங்குகள் வழங்கப்பட்டன.

76 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் 50 சத வீத மானியத்துடன்,1000 ரூபா மானிய உரமும் செய்கையாளர்களுக்கு ஊக்குவிப்பாக வழங்கப்பட்டன என்று அங்கயனின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (4,17)

இராணுவத்தால் கொல்லப்பட்ட 8 பேருக்கு நினைவுத்தூபி

யாழ்ப்பாணம், நவ. 22

முல்லைத்தீவு மாவட்டம் ஐயங்கன்குளம் பகுதியில் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் படையணியின் கிளைமோர்த் தாக்குதலில் கொல்லப்பட்ட 8பேருக்கும் நினைவிடம் அமைக்கும் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டன.

முல்லைத்தீவு ஐயங்கன்குளம் பகுதியில் 2007ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27ஆம் திகதி மாலை தாக்குதல் நடத்தப்பட்டது. அதே இடத்தைச் சேர்ந்த பாடசாலைச் சிறுமிகள் 4 போ் உட்பட 8 பேர் கொல்லப்பட்டனர். அவர்களது சடலங்கள் அந்தப் பகுதி குளக்கரையில் அடக்கம் செய்யப்பட்டன.

அந்த இடத்திலேயே நினைவுத் தூபி அமைத்து நினைவேந்தல் கடைப்பிடிக்க, கொல்லப்பட்டவர்களின் திகதியைக் காரணம் காட்டி கடந்த காலங்களில் அனுமதி கிடைக்கவில்லை. அவர்களது நினைவாக நினைவுத் தூபி அமைக்க வேண்டும் என்று துணுக்காய் பிரதேச சபையில் கடந்த 15ஆம் திகதி தீர்மானம் முன்மொழியப்பட்டிருந்தது. அதற்கு ஐ.தே. உறுப்பினர் எதிர்ப்புத் தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பகுதி நேற்றுமுன்தினம் துப்புரவு செய்யப்பட்டது. நினைவேந்தலுக்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்படுகின்றன.

அடுத்த வருட ஆரம்பத்தில் நினைவுத் தூபி அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இராணுவத்தினரின் ஆழஊடுருவும் பிரிவினரின் தாக்குதலில், நாகரத்தினம் மதிகரன் (வயது -16), நா. பிரதீபா (வயது -16), கருணாகரன் கௌசிகா (வயது -15), நித்தியானந்தன் நிதர்சன் (வயது -13), சந்திரசேகரம் டிரோயா (வயது - 16), அற்புதராயா அஜித்நாத் (வயது - 16), சண்முகவடிவேல் சகுந்தலாதேவி (வயது - 18), வைரமுத்து கிருஸ்ணவேணி (வயது - 26) ஆகியோரே கொல்லப்பட்டனர். (4,105)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

உறவுகளை நினைவுகூரும் உரிமைக்கு அனுமதி உண்டா?

இலங்கையில் யார் ஆட்சியாளர்கள்? நாடாளுமன்றத் தின்மதிப்புஎன்ன?அரசமைப்புப்படிஅரசதலைவர் நடக்கிறாரா இல்லையா? பதவியில் இருக்கிறார் என்று அறிவிக்கப்பட்டதலைமைஅமைச்சர்மகிந்தமீதுநம்பிக் கையில்லைஎன்றுநாடாளுமன்றத்தின்பெரும்பான்மை யான உறுப்பினர்கள் தெரிவித்துவிட்ட பின்னரும் அவர் பதவியில் தொடர்வது சட்டப்படியானதா? என்கிற சர்ச் சைகள் தெற்கில் சூடுகிளப்பிக் கொண்டிருக்கையில் வடக்கு, கிழக்கில் அமைதியாகத் தொடங்கியிருக்கிறது மாவீரர்கள் வாரம்.

வழக்கமாக மாவீரர்கள்தினத்தையொட்டிக்கிளம்பும்பர பரப்புகள்எல்லாம்கொழும்புச்சர்ச்சைகளின்பால்குவிந் திருப்பதால் தெற்கு ஊடகங்களின் கவனம் இம்முறை மாவீரர் தினத்தின் மீதும் அது சார்ந்த செய்திகளின் மீதும் திரும்பவில்லை. எனினும் இம்முறை மாவீரர் தினத்தை தடைகள் ஏதுமின்றி, கடந்த வருடம் போன்று முன்னெ டுக்க முடியுமா என்கிற பெரும் சோதனை காத்திருக்கின் றது. அடுத்துவரப்போகும்காலங்களில்தமிழர்விவகாரம் கொழும்பால்எப்படிக்கையாளப்படப்போகின்றது என் பதற்கான முன்னுதாரணமாகவும் இது இருக்கலாம்.

தமிழர்கள், விடுதலைப்புலிகள்இயக்கத்தில்இருதவர்கள் உள்ளிட்ட உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூர்வ தற்கான உரிமை ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்று 2009ஆம்ஆண்டுமுதல்போராடிவருகின்றனர். ஆனால் மகிந்த ராஜபக்சவின் முன்னைய ஆட்சியில் அதற்கான அனுமதிமறுக்கப்பட்டதோடுபடைகளின்அடக்குமுறை யும் கட்டவிழ்த்துவிடப்பட்டது. மாவீரர் தினத்தன்று அஞ்சலி செலுத்துவது அதற்கான நிகழ்வுகளை ஒழுங்கு படுத்துவது என்பன குற்றங்களாக நோக்கப்பட்டன. இத் தகைய செயல்களில் ஈடுபடுவோர் சிறைகளுக்குச் செல் லும் நிலையே இருந்தது.

2015ஆம்ஆண்டில்ஆட்சிமாற்றம்ஏற்பட்டபோதுஇந்த நெருக்கடிநிலையில்சற்று நெகிழ்ச்சித்தன்மைபுலப்பட் டது. ஆனால், இத்தகையநிகழ்வுகளைநடத்துவதற்கான வெளிப்படையான அனுமதியேதும் வழங்கப்பட்டிருக் கவில்லை. எனினும் மக்கள் தமது உரிமையை நிலை நிறுத்தும் பரிசோதனையில் சுயமாகவே இறங்கினர். அத னைத் தடுத்து நிறுத்துவதற்கான தீவிர நடவடிக்கையை எடுக்காமல் ஆட்சித் தரப்பு ஒதுங்கிக்கொண்டது. இத னால்கடந்த இரண்டு வருடங்களாக மாவீரர்நாள்நிகழ்வு கள் பெரியளவில் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வீரியம் பெற்றன. அதிலும்கடந்த வருடத்தில்சிறப்பானஒழுங்க மைப்புடன் அவை நடந்தேறின.

இந்த வருடம் யாரும் எதிர்பார்க்காத வகையில் மகிந்த ராஜபக்சவுடன் கைகோர்த்துக்கொண்டு ஆட்சியைத் தம் வசமாக்கிக் கொண்டுள்ளார் மைத்திரி. மகிந்த மீண்டும் ஆட்சிக்கட்டில்ஏறியதுமுதற்கொண்டேவடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் அச்சத்துடனேயே வாழ வேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளனர். இந்தநிலையில்மாவீரர் நாள் நிகழ்வுகள் ஒரு பரிசோதனைக் களமாகியுள்ளன.

மாவீரர் நாள் நிகழ்வுகளைத் தடுக்க வேண்டும் என்று கேட்டுக் கோப்பாய் பொலிஸார் யாழ். நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல்செய்துள்ளனர். ஆட்சியாளர்களின்ஆசீர் வாதம், வழிப்படுத்தல்கிடைக்காதுஎன்றுநம்பிப்பொலி ஸார் இத்தகைய காரியத்தில் இறங்கியிருக்கப்போவ தில்லை. இதன் பின்னணியில் அதிகாரக் கரங்கள் உறுதி யாக இருக்கும் என்று நம்பலாம். இந்த வழக்கு மீதான கட்டளை நாளைக்கு நீதிமன்றத்தால் ஒத்திவைக்கப்பட் டுள்ள நிலையில் இறந்த தமது உறவினர்களை நினைவு கூர்வதற்கானதமதுஉரிமைஅனுமதிக்கப்படும்மாஅல்லது மீண்டும்அடக்கப்படுமாஎன்கிறகுழப்பத்துக்குள்தமிழர் கள் தள்ளப்பட்டுள்ளனர். அண்மைக் காலமாகக் கட்ட விழ்ந்துவரும் காட்சிகளைப் பார்க்கும்போது எதுவும் தலைகீழாக மாறலாம் என்பதால் அவதானத்துடன் நடக் கவேண்டியது எல்லோரதும் கடமை.

மகிந்தவோ? ரணிலோ?

சந்தர்ப்பத்தை சரிவர பயன்படுத்துவதே திறன்

ப்ரியமதா பயஸ்

இலங்கை அரசியல் வரலாற்றில் அர சியல் குழப்பங்கள் ஏராளமாக வந்து போயிருக்கின்றன. ஆனால் முக்கிய அரசியல் புள்ளிகள் இருவர் பதவிக்காக அடிபடும் நிகழ்வு கடந்த ஒக்ரோபர் 26ஆம் திகதியில் இருந்து ஆரம்பமாகியுள்ளது. இலங்கை வரலாற்றில் நாடாளுமன்றம் காணாத பல அரிய வீர தீரச் செயல்களும் அரங் கேற்றப்பட்டுள்ளன. நாடாளுமன்றில் இடம் பெற்ற அடி தடிகளை நாம் சாதாரணமாகக் கடந்து போய்விடமுடியாது. ஒரு நாட்டின் மிக முக்கிய, உயர்ந்த சபையில் இடம்பெறும் அடித டிகள் பார்த்துவிட்டும், சிரித்துவிட்டும் கடந்து போய்விடக்கூடிய காரியங்கள் அன்று.

பெரும்பான்மையினரும், சிறுபான்மையினரும் இருவேறு கோணங்களில் வித்தியாசப்பட்டு நிற் பதற்கு ஆதாரமக இந்த நாடாளுமன்ற அடிதடி களை நாம் கவனத்தில் கொள்ளலாம். மிக உயர்ந்த சபை ஒன்றில் எதேச்சாதிகாரமாக நடந்திருக்கின்ற பெரும்பான்மையினத்தவர்க ளின் அத்துமீறிய, நாகரிமற்ற செயற்பாடு, தாமே இந்த நாட்டின் முக்கிய குடிமக்கள், தாமே இந்த நாட்டை ஆளும் அதிகாரத்தை முற்றிலுமாகக் கொண்டவர்கள் என்ற அவர்களின் போக் கையே காட்டுகின்றது.

இந்தச் செயற்பாடுகள் இலங்கையிலுள்ள மற் றைய இனத்தவர்களோடு ஒப்பிடுகையில் சிங் களச் சமூகத்தில் செறிந்திருப்பதும் வெளிப்படை யானதுவே. அந்தச் செயற்பாட்டை அவர்கள் நாடாளுமன்றிலும் சாதாரணமாக அரங்கேற்றி யுள்ளனர். அவர்களின் அடிதடிகளை அரசியல் திருப்பு முனையாகக் கொள்ளவேண்டும் அன்றி அதுகுறித்து விவாதித்து நிற்பது பயனற்றதாகவே இருக்கும். இதிலிருந்து அடுத்த கட்டம் பற்றிச் சிந்திப்பது தமிழ்த் தலைவர்களின் முக்கிய பங் காக்கும்.

மகிந்தவின் ஆட்சி முடிவும் ரணிலின் ஆட்சியும்

2009ஆம் ஆண்டில் போர் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் தமிழர் அரசிய லிலும், அவர்தம் வாழ்வியலிலும் நெருக்கடிகள் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. அப்போது பதவியில் இருந்த மகிந்த அரசால் தமிழ் மக் களை அழிக்க முடிந்ததே அன்றி, போர் முடிந் தும்கூட அவர்களுக்கு எதையும் ஆக்கபூர்வமா கச் செய்ய முடியவில்லை. இதை வெளிப்படை யாக உணர்ந்திருப்பினும் மகிந்த ராஜபக்ச ஆட்சிப்பீடம் ஏறவேண்டும் என ஒரு சில தமிழ் அரசியல்வாதிகள் கங்கணம் கட்டுவது ஆச்சரி யப்பட வைப்பதாக உள்ளது. 2015ஆம் ஆண்டு ரணில் - மைத்திரி கூட்டு அரசு தமிழ் மக்களிள் ஏகோபித்த ஆதரவுடன் ஆட்சிக்கு வந்தமை, வரலாற்றில் மிகப் பெரும் திருப்புமுனை. ஆனா லும், ரணில் ஆட்சி என்றே இந்த ஆட்சியை நாம் விளிக்க வேண்டும். மைத்திரிபால சிறிசேன அரச தலைவர் என்ற பெயருடன் இருப்பது மட் டுமே இந்த ஆட்சியில் நடந்தது. ரணிலின் பிடி யில் ஆட்சி இருந்தது என்பதை மைத்திரி எடுத்த அதிருப்தியான தீடீர் முடிவில் இருந்து நாம் உணர்ந்து கொள்ள முடியும்.

மகிந்தவின் ஆட்சியில் அபிவிருத்தி

போருக்குப் பின்னர் அரச அதிகாரத்தில் தொடர்ந்த மகிந்த போருக்குப் பின்னான அபிவி ருத்திக்காக உலக நாடுகள் தனக்குக் கீழுள்ள அரசுக்குக் கோடி கோடியாகக் கொட்டிய நிதி முழுவதையும் கொள்ளை அடித்திருந்தார் என் றுதான் சொல்லவேண்டும். வடக்குக் கிழக்கின் அபிவிருத்தி என்ற போர்வையில் பெருமளவுநிதி மூலம் மகிந்தவால் பதுக்கப்பட்டது. வடக்குக் கிழக்கில் செய்யப்பட்ட அபிவிருத்திகள் அனைத் தும் இன்னொரு போருக்கான ஆயத்தம் என்ப தையே கட்டியம் கூறுகின்றன. போர் ஒன்று தொடங்குமாக இருந்தால் அதற்கான விநியோ கங்களைத் தரை, கடல் வழிகள் உட்பட்ட போக் குவரத்து, செய்திப் பரிமாற்றம், பாதுகாப்பு நட வடிக்கை என்பனவற்றின் மூலம் தாம் திறம்படக் காரியமாற்றுவதற்காகவே அபிவிருத்தி என்ற போர்வையில் மகிந்த அரசு முன்னாயத்தங்க ளைச் செய்து வைத்துள்ளது. அத்தோடு வடக் கின் வீதிகள் பல வடக்கு மக்களை முன்னேற்று வதற்காக அமைக்கப்படவில்லை என்பதும் வெளிப்படை. உதாரணத்துக்குக் கிளிநொச்சி மாவட்டத்தை ஊடறுக்கின்ற ஏ9 முதன்மை வீதியை விட்டு அந்த மாவட்டத்தில் வேறு வீதிக ளில் கால்பதிக்க முடியாது. முகத்துக்கு மாத்திரம் பூச்சுப் பூசியதைப்போல கிளிநொச்சி நகரும் அதை ஊடறுக்கின்ற வீதியும் பொலிவு பெற்றி ருக்க கிளிநொச்சியின் கிளை வீதிகள் மற்றும் நகர் தவிர்ந்த உட் புறங்கள் அனைத்துமே மிக வும் மோசமான நிலையிலிருக்கின்றன.

இப்படியாகக் கொழும்பு - யாழ்ப்பாணம் நோக் கிய பெரு வியாபார எண்ணத்துடன் தான் வடக் கில் பெருமளவான அபிவிருத்திகள் மேற்கொள் ளப்பட்டிருக்கின்றனவே தவிர, அவை எவையும் அடித்தர மக்களின் அபிவிருத்தியை மேம்படுத் தத் தவறியவை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். வீதிகள் ஒவ்வொன்றின்

சீரமைப்பும் அடுத்த போருக்கான ஆயத்தமே என்பதை அவ்வளவு கச்சிதமாக எடுத்தியம்புகின்றன.

ரணிலின் ஆட்சியும்
தமிழ் அரசுக் கட்சியும்

இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டிருந்த தமிழர் நிலங்களின் பெரும்பகுதி ரணிலின் ஆட்சியில் ஆர்ப்பாட்டம் இல்லாமல் விடுவிக்கப்பட்டிருப்பதை நாம் சூட்சுமமாக நோக்க வேண்டும். ரணிலின் ஆட்சிப் போக்கில் மகிந்த அரசால் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் ஒழிக்கப்பட்டன.

அதாவது கடத்தல், காணாமல்போகச் செய்யப்படுதல், தமிழர்கள் சுட்டுக் கொல்லப்படுதல் என்பன இல்லாதொழிக்கப்பட்டதை நாம் யாரும் மறுத்துவிட முடியாது. தமிழ் அரசுக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி இந்த இரண்டுகட்சிகளும்கடந்துவந்தபாதையை நாம் பார்க்க வேண்டும். ஒன்றுக்கொன்று ஒற்றுமைப்பட்டே இரண்டு கட்சிகளும் அரசியல் வரலாற்றில் செயற்பட்டிருந்ததை யாராலும் மறுத்துக் கூறிவிட முடியாது. ஐ.தே.கவுக்குக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கும் என்பது அனைத்துச் சிங்கள மூத்த அரசியல்வாதிகளுக்கும் தெளிவாகத் தெரிந்த உண்மை. கொழும்பு அரசைத் தீர்மானிப்பதில் குறிப்பிடத்தக்க அளவு செல்வாக்கைச் செலுத்தக்கூடியதாகக் கூட்டமைப்பு இருக்கின்ற நிலையில், அந்தச் செல்வாக்குச் சுழலை மழுங்கடிக்கும் விதமான உத்திகளின் மூலம் ஆட்சிப் பீடத்துக்கு வரத் துடிக்கும் மகிந்தவின் செய்கைகள் நகைப்புக்கு உரியன அல்ல. தமிழர் தரப்பு ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய விடயம் அது.

ரணிலின் ஆட்சியில் தமிழர்கள்
மாற்றமடைவதை உணர்ந்த மைத்திரி

தமிழர் வரலாற்றில் எதிர்க்கட்சி என்ற பலத்தையும் எதிர்க்கட்சி ஆசனத்தையும் ரணிலின் ஆட்சியிலேயே தமிழர்கள் பெற்றிருக்கிறார்கள். மகிந்தவின் காலில் விழுந்தும் பெற முடியாத சில விடயங்களைக் குறைந்தளவு அழுத்தங்களுடனாவது ரணிலிடம் பெற்றுக் கொள்ளும் அரசியல் பலத்தை ரணிலின் அரசில் தமிழர்கள் அடைந்து வருகிறார்கள் என்ற போக்கை அந்த அரசில் கைப்பொம்மையாக இருந்த மைத்திரியின் காதில் இடை விடாமல் மகிந்த ஓதியதன் விளைவே 26ஆம் திகதி நடந்த ஆட்சி மாற்றம். இதுவே இந்த ஆட்சி மாற்றத்தில் முக்கிய பங்களிக்கின்றது. இனவாதியாகவும் இனவாதம் கக்கும் அரசியல் மூர்க்கச் செயற்பாட்டிலும் புகழ் பெற்ற மகிந்த, ஆட்சிப் பீடம் ஏறுவது தமிழ் மக்களின் தலைவிதியில் ஓங்கி அடிக்கப் படும் சாவு ஆணி என்பதைத் தமிழ்த் தலைமைகள் உணர்ந்தே காய் நகர்த்துகின்றனர் என்பது யாவரும் அறிய வேண்டிய உண்மை. தூர நோக்கின்றிச் செயற்படுகின்ற புதிய தமிழ்க்கட்சிகள்தமதுதூரநோக்கற்ற, மலினப்படுத்தப்பட்ட அரசியல் சிந்தனைகளை மக்களுக்குத் திணிப்பதைத்தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

தமிழர் அரசியலின் பலவீனம்

தமிழர் அரசியல், தமிழர் அரசு என்பவற்றை நாம் போராடித்தான் பெற வேண்டும் என்றிருந்த காலம் கடந்துவிட்டது. இப்போது தமிழருக்குக் கிடைக்கும் அற்ப சலுகையையும் கிடைக்க விடக் கூடாது என்ற இனவாதச் சிந்தனையுடன் பெரும்பான்மை அரசியல் தலைவர்கள் முயல்வதை நாம் யாரும் மறுத்தோ, மறந்தோ விடக் கூடாது. தமது சில்லறைத்தனமான அரசியலைத் தமிழ்க் கட்சிகள் தூக்கி எறிவதற்குத் தயாராக இல்லை என்பதைத் தமிழரின் அண்மைய அரசியல் போக்கு வெளிப்படையாகக் காட்டுகிறது. ஒரு கட்சியில் போட்டியிட்டு வெற்றி பெறுவது பின்னர் கட்சி மாறுவது அல்லது ஆளுக்கு ஒரு கட்சியை அமைத்து அரசியலில் களமிறங்குவது என்பதாகத் தமிழர்களின் அரசியல் அமைந்துவிட்டது. இந்தப் பிரிவும் பதவிப் போட்டித் தன்மையும் தமிழர் அரசியல் வாழ்வின் ஓர் அருவருப்பான பாகம்.

இனவாதம் நம்மை ஒடுக்குவதற்காக ஒன்று சேரும்போது எமது பலமற்ற தனி நபர்கள் மக்களின் பலமான வாக்குகளைச் சிதறடிப்பதற்கு முயல்வது முட்டாள்தனமான விடயம். பதவியும் பண ஆசையும் கொண்ட அற்பமான செயற்பாடு.

அண்மையில் இடம்பெற்றிருந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் கூடப் பல கட்சிக



ளின் ஆக்கிரமிப்பால் தமிழர் வாக்குகள் சிதறடிக்கப்பட்டுச் சபை ஆட்சிகள் விடயத்தில் உணரப்பட்ட அரசியல் தளம்பலை நாம் மறந்துவிடக் கூடாது.

தமிழரின் பலவீனத்தைப்
பயன்படுத்த விளைகின்றனர்

தமிழரின் ஒற்றுமையைச் சிதைத்து தமக்கான பலமான அரசியலை உருவாக்குவதற்கே ஆட்சித் தரப்பினர் விளைகின்றனர் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. மகிந்தவின் கையைப் பலப்படுத்துவதற்காகப் பேரினவாத சக்திகள் கூட்டாகக் களேபரங்களைச்செய்யத்தொடங்கிவிட்டன. ரணிலின் ஆட்சியில் மைத்திரி கைப்பொம்மையாக இருந்தார் என்ற பேரினவாத அதிர்வுகள் மகிந்தவைத் தலைமை அமைச்சராக்கி இருக்கின்றன.

ஆனால், மைத்திரி என்ற கைப்பொம்மை சில விடயங்களைத் தானாக உணராத வரை பல கைகளை நோக்கி எறியப்பட்டுச் சின்னாபின்னமாக வேண்டியது விதி ஆகிவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ரணில் அரசுக்கு வழங்கும் ஆதரவு பற்றி வெளிநாட்டு ஊடகங்களோ, அல்லது அரசியல் இராஜதந்திரிகளோ, ஏன் இந்தியத் தரப்போ வாய் திறக்காது இருப்பதாகத் தான் பன்னாடுகளின் இலங்கை மீதான அரசியல் பார்வை இருக்கிறது. இங்கே தமிழர் தரப்பு பலமான ஓர் ஆட்சிப்பீடத்தைத் தீர்மானிக்கும் முக்கிய அரசியல் பிரிவாக மாறி இருப்பது நோக்கத்தக்கது. மகிந்த அரசுக்கோ ரணில் அரசுக்கோ ஆதரவு வழங்கு, அல்லது வழங்காதே என்ற ஆலோசனையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குச் சொல்லும் அருகதையை இழந்து நிற்கிறது பன்னாட்டுச் சமூகம் என்பது தமிழருக்கு ஏற்பட்டுள்ள அரசியல் பலமாக நாம் கொள்ள வேண்டும்.

இந்த அரிய பலத்தைப் பயன்படுத்தும் விதத்தில்தான் தமிழர்களின் அரசியல் வரலாற்றின் வெற்றி இருக்கிறது. இந்த முக்கியமான பக்கங்களை எப்படி எழுதப் போகிறோம் என்பது தமிழ்த் தலைமைகளைப் பொறுத்தவரை பெரும் சவாலாகவே உள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

மேலோட்டமான சிந்தனைகளை விடுத்து அரசியல் உறுதித்தன்மையை ,நிதானமாக அத்தோடு முடிவாக எடுப்பதற்குத் தமிழ்த்தலைமைகள் தம்மை தயாராக்கிக் கொள்ள வேண்டும். ரணிலின் அரசியல் நிலையைப் பலப்படுத்துவதற்கு ஆதரவு வழங்குவதாயின் தமிழர் தரப்பு அடுத்த கட்ட அரசியல் காய் நகர்த்தல்கள் பற்றியும் மிக மிகத் தெளிவாகச் சிந்தித்து முடிவெடுக்கவேண்டும். இதுவேபெரும்பான்மைத் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகவும் இருக்கும். ■





ஆசிரியருக்கான கடிதம்

பாதுகாப்பு ஊழியர் வங்கியின் நிர்வாக ஊழியர் அல்ல

சுன்னாகம் நகரத்தில் அந்தப் பகுதி மக்கள் அனைவரும் வங்கிப் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தகுந்த, வசதியான இடத்தில் அமைந்திருக்கிறது சுன்னாகம் மக்கள் வங்கி. 13 கருமபீடங்கள், நகை அடகு வைக்கும் பிரிவு எனப் போதியளவு இடவசதியுடன் கூடியகிளை அது. ஆனால் இந்த வங்கியில் ஊழியர் பற்றாக்குறை காணப்படுகின்றது இதனால், வங்கிகளின் பாதுகாப்புக் கேள்விக்குறியாக உள்ளது.

பணக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்காக வங்கிக்கு வருகின்ற வாடிக்கையாளர்கள், பயனாளர்கள் வரிசையில் நிற்கின்ற பகுதியிலேயே அங்குள்ள துப்பாக்கி ஏந்திய பாதுகாப்பு ஊழியரும் கடமையில் ஈடுபடுகிறார். அந்த வாடிக்கையாளர்களிடம் கையெழுத்திட்டாயா? தொகை போட்டாயா? அதை அப்படிச் செய்யாதே, இப்படிச் செய்யாதே எனத் தனது கடமை என்னவென்று தெரியாமல் ஒரு வங்கி ஊழியராக மாறிச் செயற்படுகிறார்.

இது விடயத்தில் வங்கி முகாமையாளரும் எதுவும் சொல்வதாக இல்லை. பாதுகாப்பு ஊழியர் மக்கள் வங்கியின் ஊழியர் அல்ல. அவர் நிற்க வேண்டிய இடம் வாயிற் பகுதி அல்லது துப்பாக்கிப் பாதுகாப்புத் தேவையான பகுதியே ஆகும். அதைவிடுத்துத் துப்பாக்கியுடன் மக்கள் மத்தியில் வந்து நிற்கிறார். அத்தகைய வேளையில் தற்செயலாகப் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏதாவது ஏற்பட்டால் அவருடைய கையில் உள்ள துப்பாக்கியால் வாடிக்கையாளர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை.

பாதுகாப்பு ஊழியர்கள் பதுகாப்புக் கடமையில் அதாவது தமக்கு ஒதுக்கபட்ட வேலையில் மட்டும் கவனம் செலுத்தினால் போதுமானது. இந்த விடயத்தில் குறிப்பிட்ட பாதுகாப்பு உத்தியோகத்தரின் தலைமையகமும் தம்மால் நியமிக்கப்பட்டுள்ள ஊழியர்கள் எத்தகைய வேலைகளில் ஈடுபடுகின்றார்கள் என்பதைக் கவனிப்பது அவசியம். வங்கி ஊழியரல்லாத ஒருவரை வங்கிக்கு வருகின்ற வாடிக்கையாளருடன் பேச அனுமதிப்பது வங்கியின் எதிர்கால நடவடிக்கைகளைப் பாதிக்கும்.

முக்கியமாக பாதுகாப்பு ஊழியர் எந்த இடத்தில் நின்று தனது கடமைகளைச் செய்ய வேண்டும் என வங்கி முகாமையாளர் அறிவுறுத்துவது நல்லது. வங்கி நடவடிக்கைகளில் பயிற்றப்பட்ட வங்கி ஊழியர்களே மக்களுக்கு இத்தகைய அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும். இதன் மூலம் வாடிக்கையாளர்கள் எதிர்கொள்ளுகின்ற தேவையற்ற அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.

நலன் விரும்பி

வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்க! ஆனால், மேற்குறித்த விடயங்களைத் தவறாது இணைத்து அனுப்பவும். எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச்சூழல் அமைப்புத் தலைவர் பதவி விலகல்!

ஜெனீவா.நவ.22

ஐக்கிய நாடுகள் சபையின் நெறி முறைகளுக்கு மாறாகப் பயணத்திட் டங்களுக்குஅதிகசெலவுசெய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ள ஐக்கிய நாடு கள் சுற்றுச்சூழல் அமைப்பின் தலை வர் எரிக் சோல்ஹிம் தன்னுடைய பதவியிலிருந்துதானாகவேவிலகியி ருக்கிறார். அவரதுவிலகலைஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலா ளர் ஏற்றுக்கொண்டதை ஐக்கியநாடு கள்சபைக்கானசெய்தித்தொடர்பாளர் உறுதிப்படுத்திஉள்ளார். ஐ.நாசுற்றுச் சூழல் அமைப்புக்குப் புதிய தலைவர் தெரிவுசெய்யப்படும்வரை சுற்றுச்சூ ழல் துணை இயக்குநர் ஜாய்ஸ் எம் ஸ்யோதற்காலிகமாகத்தலைவராகப் பொறுப்புவகிப்பார்என்றுதெரிவிக்கப் பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுச் சூழல் அமைப்பு கென்யாவின் நைரோபிநகரைத்தலைமையிடமா கக்கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்த அமைப்பின் தலைவராகப் பதவி வகித்துவந்த எரிக்சோல்ஹிம் தனதுஅதிகாரப்பூர்வபயணங்களுக் காக5இலட்சம்அமெரிக்கடொலர்கள் செலவிட்டமை, அந்த அமைப்பின் அறிக்கையில் கண்டறியப்பட்டுள் ளது. மேலும், தனது பயணங்களுக் கானசெலவுத்தொகையைப்பெறுவ தில்,அவர்நெறிமுறைகளுக்குமாறா கச்செயல்பட்டதாகவும்அறிக்கையில் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. ஐ.நா. சுற் றுச்சூழல் அமைப்பு, நிதிப் பற்றாக்கு றையில் தவிக்கும் நிலையில், எரிக் கின்செயல்பாடுகள்சர்ச்சையைஏற்ப டுத்தின.

மேலும், சுற்றுச்சூழல் நடவடிக்கை களில் அவர் போதிய கவனம் செலுத் தவில்லைஎன்றகுற்றச்சாட்டும்முன் வைக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து, அவர் பதவி விலகியுள்ளார். பதவி விலகியுள்ள எரிக் சோல்ஹிம் நார்வேநாட்டைச்சேர்ந்தமுன்னாள் சுற்றுச்சூழல் அமைச்சர் ஆவார். தனது பதவி விலகல் குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள எரிக், தனதுசெயல்கள்அனைத்தும்சுற்றுச் சூழல் நலனுக்காகவே இருந்தாகக் குறிப்பிட்டுள்ளார்.

பாரீஸ் பருவநிலை மாற்ற ஒப்பந் தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பானமுக்கியபேச்சுவார்த்தை கள், போலாந்தில் அடுத்த மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள நிலை யில்,ஐ.நா.சுற்றுச்சூழல்அமைப்பின் தலைவர்பதவிவிலகியிருப்பதுகுறிப் பிடத்தக்கது.

மேன்முறையீடுசெய்வதற்கு செய்தியாளர்களுக்கு அனுமதி

யங்கொன்நவ. 22

மியன்மார் அரசால் சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்ற 'ரெய் டர்ஸ்' செய்தியாளர்கள் இருவரும் மேன் முறையீடு செய்வதற்கு மியன்மார் அரசு அனுமதி அளித் துள்ளது. ஆயினும்இந்தவழக்குச் சம்பந்தமான வேறு எந்த விவரங் களையும் நீதிமன்றதில் இருந்து பெற முடியவில்லை என 'ரெய் டர்ஸ்' செய்தியாளர் கூறியுள்ளார். 8 மாதங்களுக்கு முன்னர் 'ரெய் டர்ஸ்' செய்திச் சேவையின் செய்தி யாளர்கான வன் லோன் மற்றும் சியா சோவோ ஆகிய இருவரும் மியன்மார் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர். பாதுகாப்புப்படை யினராலும் அங்கு பெரும்பான் மையினராகஇருக்கின்றபௌத்தர் களாளும்ரோகிங்கியமுஸ்லிம்கள் சித்திரவதைக்குஉள்ளாக்கப்பட்டுச்



சாவடிக்கப்பட்டனர். இந்த விவகா ரத்தைப் பற்றிய ஆதாரத்தைத் திரட்டவும், செய்தி சேகரிக்கவும் சென்றுஅந்தக்கொலைகள்பற்றிய ஆய்வுகளைமேற்கொண்டபோது இந்த ஊடகவியளாளர்கள் இருவ ரும் கைது செய்யப்பட்டிருந்தனர். இப்போதுமேன்முறையீடுசெய்வ தற்குஅவர்களுக்குஅனுமதிஅளிக் கப்பட்டுள்ளது.

ஆப்கான் தலைநகர்காபூலில்மதத்தலைவர்கள் கூட்டத்தில்குண்டுத் தாக்குதல் 50 பேர் சாவு

காபூல்.நவ.22

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் மதத் தலைவர்கள் பங்கேற்ற ஒரு கூட் டத்தில்நடந்ததற்கொ லைக்குண்டுத் தாக் குதலில் 50 பேர் சாவடைந்தனர். என்று செய்திகள் தெரிவிக்கின்றன. அத்துடன் 83 பேர் இந்தத் தாக்குதலில் காயமடைந்துள்ள னர். காபூலில் நடந்த மிகமோசமான தாக் குதல்களில் ஒன்று இது என்று கூறப்படுகின்றது. இந்த தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. ஆனால், சமீப காலங்களில்நடந்ததாக்குதல்களுக்குஐ.எஸ்.அமைப்பே

பொறுப்பேற்று வருகிறது. தாலிபன்களும் அங்கு தாக் குதல்நடாத்திவருகிறார்கள். நூற்றுக்கணக்கான இஸ் லாமிய அறிஞர்களும், அவர்களைப் பின்பற்று வோரும்மிலாதுநபிபண்டி கையை ஒட்டி ஓர் அரங்கத் தில்கூடிஇஸ்லாமியப்புனித நூலான குரானில் இருந்து சிலபகுதிகளைஓதிக்கொண் டிருந்தபோது இந்தத் தாக்கு தல்நடந்ததாககாபூல்பொலி சாரின்செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார். இந்தத் தாக்குதலில் காயமடைந்த வர்களில் 24 பேர் மோச மான நிலையில் இருப்பதாக மருத்துவமனைத் தகவல் களை மேற்கோள் காட்டி ஒரு தொலைக்காட்சி செய்தி வெளியிட்டுள்ளது

ஊதியம் வழங்கப்
நாடாளுமன்றுக்

பப்புவா நியூகினியாவில்

போர்ட் மோரஸ்பி.நவ.22

பப்புவாநியூகினியாநாட்டின்நாடாளுமன் றக்கட்டடத்துக்குள் ஆயுதப்படையினர், பொலிசார், சிறை அதிகாரிகள் அதிரடியாக நுழைந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். நாடா ளுமன்றக்கட்டடத்துக்குள்இருந்தமேசைகள், கதிரைகள், ஐன்னல் கண்ணாடிகளை உடைத்தெறிந்துள்ளனர். இந்த தாக்குதலில் நூற்றுக்கணக்கானோர்ஈடுட்டிருந்ததாகஉள் ளூர் ஊடகங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

பப்புவா நியூகினியா நாட்டின் நாடாளு மன்றக் கட்டடத்துக்குள் நுழைந்த ஆயு தப்படையினர், பொலிசார், சிறைஅதிகா ரிகள் என அனைவரும் நுழைந்து கண்ணில் பட்டதையெல்லாம் அடித்து நொருக்கியுள்ளார்கள். இந்தத்தாக்குதல் அங்குபெரும்பரபரப்பைஏற்படுத்திஉள் ளது.

வறுமையில்வாடும்பப்புவாநியூகினியா நாட்டின் தலைநகரான போர்ட் மோரஸ் பியில், அண்மையில் 'அபெக்' என்று அழைக்கப்படுகிற ஆசிய பசிபிக் பொரு ளாதார ஒத்துழைப்பு அமைப்பின் மாநாடுநடைபெற்றது. இந்தமாநாட்டில் சீன அதிபர் ஜின்பிங், அமெரிக்கத் துணைஅதிபர்மைக்பென்ஸ்உள்ளிட்ட 21 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த உச்சி மாநாட்டின்போது பாதுகாப் புப்பணியில்ஈடுபட்ட பொலிசார்மற்றும் பாதுகாப்புப் படையினருக்குத் துணை யாகஆஸ்திரேலியா, அமெரிக்கா, நியூசி

ஊட்டச்சத்துக் குறைபாட்டால் ஏமனில் 85ஆயிரம் குழந்தைகள் சாவடைந்தனர்!

சனா.நவ.22

ஏமனில்கடந்தமூன்றாண்டுகளாக நடந்துவரும்உள்நாட்டுப்போரின் போதான காலத்தில் மட்டும், கடு மையான ஊட்டச்சத்து குறை பாட் டின் காரணமாக ஐந்து வயதுக்கு உட்பட்ட சுமார் 85ஆயிரம் குழந் தைகள் உயிரிழந்திருக்கலாம் என்று மதிப்பீடுகள் தெரிவிப்பதாக முன்னணித் தொண்டு நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. ஏமனில் உயிரிழந்துள்ள குழந்தைகளின் எண்ணிக்கை, பிரிட்டனின்இரண் டாவது மிகப் பெரிய நகரமான பர் மிங்ஹாமிலுள்ளஐந்துவயதுக்குட் பட்டஒட்டுமொத்தக்குழந்தைகளின் எண்ணிக்கைக்குச் சமம் என்று 'சிறுவர்களுக்கான பாதுகாப்பு அமையம்' அமைப்புத் தெரிவித் துள்ளது. ஏமனில் அதிகபட்சம் 14 மில்லியன் மக்கள் வறுமையின் பிடியில் சிக்கியுள்ளதாகக் கடந்த மாதம்ஐக்கியநாடுகள்சபைஎச்சரித் திருந்தது.

உலகிலேயேமோசமானமனிதாபி மான நெருக்கடியாகக் கருதப்படும் ஏமனின் உள்நாட்டுப் போரை முடி வுக்குக்கொண்டுவருவதற்குஐ.நா. பெரும் முயற்சித்து செய்து வருவ தும் குறிப்பிடத்தக்கது.

கப்படாததால் ஆக்ரோஷம்
க்குள் புகுந்து தாக்குதல்

ில் பெரும் பதற்றம்

பாரு லாந்து உள்ளிட்ட நாடுகளில் இருந்து
பின் பாதுகாப்புப் படையினர் வந்திருந்தனர்.
ட்டில் இந்த நிலையில், உள்நாட்டு படையின
க்கத் ருக்கும், பொலிசாருக்கும் உரிய ஒதுக்
ளிட்ட கீட்டை (படி) அந்த நாட்டு அரசு வழங்க
ந்து வில்லைஎனக்கூறப்படுகிறது. இதனால்,
காப் கோபம் அடைந்த அவர்கள், போர்ட்
றும் மோரஸ்பி நகரில் உள்ள அந்த நாட்டின்
ணை நாடாளுமன்ற கட்டடத்துக்குள் அதிரடி
யுசி யாக நுழைந்து தாக்குதல் நடத்தியுள்ள
னர் என்று கூறப்படுகின்றது.

அந்தமான் தீவில் அமெரிக்க சுற்றுலாப் பயணி சாவு

அந்தமான். நவ. 22
அமெரிக்காவைச் சேர்ந்த சுற்றுலாப் பயணி ஒருவர் அந்தமான் நிக்கோபார் தீவில் சாவடைந்தார். இந்த வழக்குடன் தொடர்புட்டவர்களாகச் சந்தேகத்தின்பேரில் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சுற்றுலா நிமித்தம் அந்தமான் நிகோபார் தீவுகளுக்குப் பயணமாகியிருந்த அமெரிக்காவைச் சேர்ந்த ஜோன் ஆலன் சாவ் (வயது 27) என்பவர் கடந்த சனிக்கிழமையன்று உள்ளூர் மீனவர் ஒருவருடன் வடக்கு சென்டினல் தீவுக்குச் சென்றிருக்கிறார்.
பின்னர் அவர் அடித்து சாவடிக்கப்பட்டுள்ளார். அவரை அங்குள்ள பழங்குடியினமக்கள்சாவடித்திருக்கலாம்எனச்சந்தேகம்தெரிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு சென்டினல் தீவில் பாதுகாக்கப்பட்ட சென்டினலிஸ் பழங்குடியின மக்கள் வசிக்கின்றனர். அவர்கள்வெளியுலகம் அறியாதவர்கள் என்பதால், அன்னியர்கள்யாராவதுவந்தால்அவர்களைத்தாக்குகிறார்கள். குறிப்பாக வில் அம்புகள் மூலம் நெருப்பைப் பற்ற வைத்து வெளி நபர்களைத் தாக்கிக் சாவடித்துவிடுவார்கள். அதனால்அங்குசெல்வதற்குஅந்த நாட்டு அரசு தடை விதித்துள்ளது. ஆனால், தடையை மீறி உள்ளூர் மீனவர்களின் உதவியுடன் ஜோன் ஆலன் அங்கு சென்ற போது தாக்கப்பட்டிருக்கலாம் என விசாரணையில் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக வழக்குப்பதிவு செய்த பொலிசார், ஜோன் ஆலன் அந்தத் தீவுக்குச் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்துகொடுத்த மீனவர்கள் 7 பேரைக்கைதுசெய்துள்ளனர்.



ஜமால் கொலை விவகாரம்

"கண்டனங்கள் இருந்தாலும் சவூதியுடன் உறவு தொடரும்" ட்ரம்ப்

வோஷிங்டன் நவ. 22
சவூதியைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஜமால் கஷோக்ஜி கொல்லப்பட்ட விவகாரத்தில்உலகநாடுகளிடமிருந்து கடும் கண்டனங்களைச் சவூதி அரேபியா பெற்றபோதும், அந்த நாட்டுக்குத்தொடர்ந்துஆதரவு வழங்குவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் 'வரலாறு காணாத அளவு முதலீடு செய்வதற்குஒப்புக்கொண்டுள்ள' சவூதிஅரேபியாதங்களது 'திடமான கூட்டாளி' என்று அவர் வெளியிட்ட அறிக்கையொன்றில்குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், ஜமால் கொல்லப்பட்டது குறித்துசவூதியின்பட்டத்து இளவரசர்முகமதுபின்சல்மானுக்கு "நன்றாகத்தெரிந்திருக்கும்" என்றும் ட்ரம்ப் அதில் ஒப்புக்கொண்டுள்ளார். "அந்த நிலையிலும், சவூதி அரேபியாவுடனானஅமெரிக்காவின் உறவு தொடரும்" என்று அவர் தெரிவித்திருக்கிறார்.



சவூதியைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஜமால்கஷோக்ஜிதுருக்கியில்உள்ள சவூதியின் தூதரகத்தில் ஒக்டோபர் 2ஆம்திகதிகொல்லப்பட்டார். அந்தக் கொலை தொடர்பான ஒலிப் பதிவு குறித்து தனக்கு விவரிக்கப்பட்டதாகவும், ஆனால் தான் அதை கேட்கப் போவதில்லை என்றும் ஏற்கனவே ட்ரம்ப்கூறியிருந்தார்.

பத்திரிகையாளர் ஜமால் கஷோக்ஜியை கொலை செய்வதற்கான உத்தரவைச் சவூதியின் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான்தான் அளித்தார் என அமெரிக்காவின்மத்தியபுலனாய்வு நிறுவனமான சி.ஐ.ஏ. நம்புவதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. இது தொடர்பானஆதாரங்களின் விரிவான மதிப்பீட்டை சி.ஐ.ஏ. செய்துள்ளதாகவும் அதன் நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. பத்திரிகையாளர்ஜமால்கஷோக்ஜியின் கொலையை விசாரிப்பதில்ட்ரம்ப்நேர்மையாகச் செயல்படவில்லை என்று குற்றஞ்சாட்டியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. இந்த சம்பவத்தால் சவூதி அரேபியாவுக்கும் அமெரிக்காவுக்கும் உள்ள உறவில் சிக்கல் ஏற்பட்டதாகக் கூறப்பட்டது. இந்த நிலையில்தான் கண்டனங்கள்இருந்தாலும்சவூதியுடனான உறவு தொடரும் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா–கனடாவை அச்சுறுத்தும்'இகோலி'

வோஷிங்டன், நவ. 22
'இகோலி'வகைப்பாக்கீரியாவால் பாதிக்கப்பட்ட அமெரிக்காவைச் சேர்ந்த 32 பேரில் 13 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், கனடாவில் 18 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அமெரிக்கா மற்றும் கனடாவில் பரவிவரும் இந்த 'இகோலி' பாக்கீரியாவுக்கும் 'ரோமெய்ன்' எனப்படுகின்ற கோவாவுக்கும்தொடர்புள்ளதாகச் சுகாதாரத்துறைஅதிகாரிகள்தெரிவித்துள்ளனர்.
அதனால், நுகர்வோர்கள், வியாபாரிகள், உணவகங்கள் உள்ளிட்டவை தங்களிடமுள்ள இந்தக் கோவாவை உணவாக்க வேண்டாம் என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தப் பாக்கீரியாவால் அமெரிக்காவில் கடந்த 6 மாதங்களுக்குள் ஐந்து பேர் சாவடைந்துள்ளதாகவும், அவர்களின் சாவுக்கும் இந்தக் கீரைக்கும் தொடர்பு உள்ளதாகவும்தெரியவந்ததைஅடுத்துஇந்த வகைக்கோவாவைப்புறமொதுக்குகின்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.



இருள் நீங்கி இன்ப ஒளி பரவட்டும்!

இன்று கார்த்திகைத் தீபத் திருநாள்

காரை எம்.பி.அருளானந்தன்

ஐப்பசி மாதம் முடிவுற்றதும் கார்த்திகை மாதம் ஆரம்பமாகிறது. இந்த மாதத்தில் வருகின்ற கிருத்திகை நட்சத்திரத் தினத்துக்கு முதல்நாளை பரணி தீபத் திருநாளாகவும், மறுநாளை கார்த்திகைத் தீபத் திருநாளாகவும் இந்துக்கள் கடைப்பிடித்து வருகின்றனர்.

அந்தவகையிலே கார்த்திகை மாதக் கிருத்திகை தீபம் இந்துக் களிடையே தனித்துவம் வாய்ந்த தீபத் திருவிழாப் பண்டிகையாக ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆம், பிரகாசமாக இருக்கும் இடத்தில் திருமகள் இடைவிடாமல் வாசம் செய்வாள் என்பதும், தீபம் இருளை விலக்கி ஒளியைப் பெருக்கி பொருள் விளக்கம் செய்யும் என்பதும் ஐதீகம். இந்தத் திருநாள் மாவலி மாமன்னன் முக்தியடைந்த நாளாகவும் கருதப்படுகிறது.

கார்த்திகை மாதத்தில் நெல்லைப் பெரித்து அரிசிப் பொரியை இறைவனுக்கு நைவேத்தியம் செய்வர். முக்தி பெற்றவருக்கு மறுபிறவி இல்லை என்பதை வெளிப்படுத்தும் விதமாக நெற் பொரி நைவேத்தியம் செய்யும் நடைமுறை மரபாக இருந்து வருகிறது.



திருவண்ணாமலை

பஞ்சபூதங்களுள் ஒன்று நெருப்பு. அதற்குரிய தலம் திருவண்ணாமலை. இங்கு கார்த்திகைத் தீபத் திருவிழா ஒவ்வோர் ஆண்டும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

இங்கு சுடர்விடும் திருவண்ணாமலைத் தீபம் தனிச்சிறப்பானது. இதைக் காண நாட்டின் பல பாகங்களில் இருந்தும் இலட்சக்கணக்கான அடியவர்கள் வருகை தருகின்றனர்.

கார்த்திகைத் தீபத் திருவிழா!

படைத்தற் கடவுளான பிரம்மாவுக்கும், காத்தல் கடவுளரான திருமாலுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இருவருள்ளும் யார் பெரியவர் என்று வாதிட்டனர். ஒரு சந்தர்ப்பத்திலே இருவரிடையேயான வாக்குவாதமும் உச்சநிலையை அடைந்தது. இந்த நிலையிலேயே சிவப் பரம்பொருள் ஒளி வடிவிலே தோன்றி திருவடியும் திருமுடியும் இன்றி எங்கும் பிரவாகித்து நின்றார். பிரம்மனும் திருமாலும் இயல்பு நிலையை அடைந்தவர்களாக அந்த ஒளிமயமான நெருப்புப் பிழம்பின் திருவடியையும் திருமுடியையும் கண்டறிய ஆவல் கொண்டனர். அதன் திருவடி, திருமுடி ஆகிய இரண்டினுள் ஒன்றை எவர் முன்னதாகக் கண்டறிந்து வருகிறாரோ அவரே பெரிய கடவுள் என முடிவு செய்தனர். அதற்கு இணங்கியவர்களாக திருமால் வராக (பன்றி) வடிவம் தரித்து ஜோதியின் திருவடியைக் காணப் புறப்பட்டார். பூமியை அகழ்ந்து சென்றார். பிரம்மா அன்னப் பறவையாக மாறி ஜோதியின் திருமுடியைக் காணப் புறப்பட்டார். உயரப் பறந்து சென்றார். ஆனாலும் அந்த ஜோதியின் திருவடியையும் திருமுடியையும் கண்டுகொள்ளமுடியவில்லை. இருவரும்செய்வதறியாதுஜோதியை வணங்கி நின்றனர்.தேவர்கள் அனைவரும் போற்றி வழிபாடு இயற்றிட, அந்த ஜோதியின் மையத்தில் இருந்து மான், மழு,அபய மற்றும் வரத முத்திரை தாங்கியவராக திருக்காட்சி தந்தார் சிவப் பரம்பொருள்.அங்கு கூடியிருந்த அனைவருக்கும் திரு வருள்பாலித்தார்.இந்தத் தத்துவத்தை விளக்கும் விதமாக திருவண்ணாமலையில் இடம்பெறுகின்ற கார்த்திகைத் திருவிழா சிறப்புறுகிறது.

திருவிளக்கு!

மணப் பெண்களுக்கு வழங்கப்படும் சீர்களுள் முதல் இடத்தைப் பெறுவது திருவிளக்கேயாகும். திருமணமான தம்பதியர் முதலாவது ஆண்டில் அமையும் கார்த்திகையைத் தலைக் கார்த்திகையாகக் கொண்டாடுவர்.

கார்த்திகை மாதத்தின் வளர்பிறை கிருத்திகை என்று சொல்லப்படும். அன்றைய தினம் அடியவர்கள் விரதமிருந்து மாவிளக்கு ஏற்றுவர். சிலர் அன்றைய தினமே பண்டிகை கொண்டாடுவர். இந்தக் கார்த்திகைத் திருநாளைய 'சிவன் கார்த்திகை' என்றும் மறுநாள் வருகின்ற கார்த்திகைத் திருநாளை 'விஷ்ணு கார்த்திகை' என்றும் ஆன்றோர் குறிப்பிடுகின்றனர்.

மாவிளக்கு!

மாக்கோலம் இடுதல், மாவிளக்கு ஏற்றுதல் போன்ற வழக்கங்கள் இந்துக்களின் வழிபாட்டில் பழமையானவை. மாக்கோலம் இடும் வழிபாடு அரிதாகி விட்டாலும், மாவிளக்கு வழிபாடு இன்றும் தொடர்கிறது. நோயில் இருந்து நிரந்தரமான தீர்வைப் பெற்றுக் கொள்ளும் விதமாகப் பெண்தெய்வங்களுக்கு இதை நேர்த்திக்கடனாகச் செய்வர்.

ஆறு மற்றும் குளங்கள் உள்ள ஊரில் கோயில்கொண்டுஎழுந்தருளி இருக்கும் பார்வதி தேவிக்கு மாவிளக்கு ஏற்றுவது இரட்டிப்புப் பலன் தரும். இங்குள்ள ஆறு, குளத்தில் நீராடிய பின்பு மனத்தூய்மையுடன் ஊற வைத்த அரிசியை இடித்து மாவாக்குவர். அதில் இளநீரும், வெல்லமும் சேர்த்துப் பிசைந்து இரண்டு உருண்டையாகப் பிடித்து, அம்மன் சந்நிதி முன் வாழை இலைவிரித்து, மாவுருண்டையில் குங்குமம் இட்டு விளக்கேற்றுவர்.

அம்பிகையே! எங்கள் நோய் நொடியைப்போக்கி, ஆரோக்கியத்தை தந்தருள வேண்டும். உன் அருளால் குடும்பத்தில் அனைவரும் நல் வாழ்வு பெற வேண்டும் என வேண்டிக் கொள்வர்.

இத்தகு சிறப்புடைய கார்த்திகைத் திருநாளிலே தீபங்களின் திருக்காட்சி எங்கும் இருண்மைகளைப் போக்கட்டும். எல்லோர் வாழ்விலும் தீமைகள் விலகி நற்பேறுகள் நிலையாகி ஒளிவீச இந்தப் பண்டிகை வழிகாட்டட்டும்.

திருக் கார்த்திகை!

இருள் விலகி இன்பம் பொங்க
தீபம் ஒளிர்ந்து இல்லம் சிறக்க
இனிய நாள் ஒளிரட்டும்!
இல்லங்களில் விளக்கேற்றி
தீமைகள் அகன்றிட
வணங்கிடுவோம்!

இறைவன் திருப்பெருஞ்
சோதியாய் எழுந்தருளிய
திருநாள்
இனிதாய் அமையட்டும்!
அகங்காரம் அழியட்டும்!
அன்பு எங்கும் நிலைத்திருக்கட்டும்!

ஒளி சூடி இருண்மைகள் நீங்கிய
மகிமைகள் பொருந்திய
இறை அருள்கூறும் திருநாளை
வணங்கிடுவோம்!

கார்த்திகை மாதம் சிறப்புற
திருக் கார்த்திகை தீபம் ஏற்றிடுவோம்!

சிவரம்யா



இருளும் ஒளியும்

இரவுவேளை. நாரையொன்று காற்றில் பறந்து சென்று கொண்டிருந்தது. எங்கும் பட்டப் பகல் போல ஒளிபரவியிருந்தது. அந்த ஒளியில் வெப்பம் இல்லை. குளிர்ச்சி நிறைந்த அந்த இன்ப ஒளி எங்கிருந்து வருகிறது என்று தேடியே அந்த நாரை பறந்து கொண்டிருந்தது.

நாரை இப்போது வானை நோக்கி நிமிர்ந்தது. உயரத்தில் ஒளித்தகடு போல வட்டநிலா அழகுடன் ஒளிவீசிக் கொண்டிருந்தது. நாரை அதன் அழகில் மயங்கி அதனையே உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றது. அப்போது அந்த நாரைக்கு நிலவின் ஒளிப்பகுதியினூடே ஒரு இருட்டுப் பகுதி ஒன்று ஒரு கறைபோலத் தெரிந்தது.

"ஆ... இவ்வளவு அழகான நிலவின் இடையில் இப்படி ஒரு கறை இருக்கிறதே" என்று வருந்தியது நாரை. "நிலவு தன்னிடம் உள்ள கறையை நீக்கிக் கொள்ளாமல் உலகைச் சூழ்ந்துள்ள இருளை ஓட்டப் புறப்பட்டு விட்டதே. இதன் கருத்து என்னவாக இருக்கும்" என்று அறிய ஆசைப்பட்டது. அதை அறிய அது நிலா இருந்த பக்கமாகப் பறந்தது. எவ்வளவு உயரம் பறந்தும் அதனால் நிலாவை அடைய முடியவில்லை. போகப் போக நிலா மேலும் மேலும் தொலைவில் தான் இருந்து கொண்டிருந்தது.

நிலாவை நெருங்க முடியாது என்று கண்டுகொண்ட நாரை தனதருகில் காற்றில் தவழ்ந்து கொண்டிருந்த ஒரு மேகத்தைப் பார்த்தது. "மேகமே இந்த நிலாவிடம் பிரகாசமான ஒளியினுள்ளும் ஒரு இருளான கறை உள்ளதே. அது தன்னிடமிருக்கும் கறையைப் போக்கிக் கொள்ளாமல் உலகில் உள்ள இருளைப் போக்குகிறதே. இதன் நோக்கம் எனக்குப் புரியவில்லையே" என்று கேட்டது.

அதற்கு மேகம் "நாரையே குணத்தில் உயர்ந்த பெரியோர்கள் தங்களிடத்தில் அல்லது தங்கள் குடும்பத்தில் வறுமை, துன்ப துயரங்கள் இருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாது பிறர் துயர் துடைப்பதும் குறைகளை நீக்குவதையும் தம் முதற்கடமையாகக் கொள்வார்கள்.

அது போன்றதுதான் இந்த நிலவின் இயல்பும். தனக்குள் ஒரு பகுதியில் மாறாத இருள் இருந்த போதிலும் அதைப் பொிதாகக் கொள்ளாமல் தன்னால் இயன்ற அளவில் இரவில் ஜீவராசிகளுக்கெல்லாம் ஒளி கொடுக்கிறது. ஏன்மனிதருள் சிபிச்சக்கரவர்த்தி என்ற அரசன் தன் தசையை அரிந்து கொடுத்து புறாவின் உயிர் காத்தான்.

கர்ணன் என்ற ஒரு வள்ளல் தன் உயிர் பிரியும் வேளையிலும் தன் தர்மங்களைத் தாரை வார்த்து தன்னிடம் பொருள் வேண்டி வந்த அந்தணருக்குக் கொடுத்தான் என்பதையெல்லாம் நீ கேள்விப்பட்டதில்லையா? நல்லோர் இயல்பு தன் துன்பத்தைக் காட்டிலும் பிறர் துன்பத்தைப் பெரிதாக நினைத்து அதைப் போக்குவதாகும்" என்றது முகில். நிலாவின் இந்த உயர்ந்த தன்மையை முகிலூடாகக் கேட்டு அறிந்து கொண்ட நாரை நிலவை வியந்து பாராட்டிக் கொண்டு பூமியை நோக்கி இறங்கி வந்தது.

வழிகாட்டுவோம்



பெருந்தன்மையான விஞ்ஞானி

நிறைகுடம் போன்ற நிறைந்த அறிவும் நிறைவான மனமும் உடைய விஞ்ஞானி ஒருவர் தம்மால் செய்ய முடியாத சாதனையொன்றைச் செய்து முடித்த, தம்மைவிட இளையவரான விஞ்ஞானி ஒருவரை வீடு தேடிச் சென்று பாராட்டிய பெருந்தன்மைக் குணத்துக்கு விஞ்ஞான வரலாற்றில் சான்றுகள் உள்ளன.

லூயி பாஸ்டியர் என்ற விஞ்ஞானி டார்டாரிக் அமிலம் பற்றிய பல உண்மைகளைக் கண்டறிந்து வெளியிட்டார். இதேவேளை உலகப் புகழ் பெற்ற பிரெஞ்சு விஞ்ஞானியான பையட் என்பவர் அதே டார்டாரிக் அமிலத்தைப் பற்றி அதற்கு முன்னர் பல ஆண்டுகளாக ஆராய்ந்து வெற்றி பெறாமல் இருந்தார். லூயி பாஸ்டியரின் வெற்றியும் அவர் கண்டுபிடித்த உண்மைகளும் அவரை வியப்பில் ஆழ்த்தின. நிறைகுடமான அவர் தன்னால் முடியாததை இன்னோர் இளைஞர் செய்து விட்டாரே எனப் பொறாமை கொள்ளவில்லை. மாறாக மகிழ்ச்சியே அடைந்தார்.

லூயி பாஸ்டியரைத் தாமே நேரில் சென்று சந்தித்து கட்டித் தழுவி தன் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார். என்னால் கண்டுபிடிக்க முடியாதிருந்த அறிவியல் உண்மைகளை நீங்கள் கண்டுபிடித்திருப்பது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியளிக்கிறது. "உங்களுடைய இந்த வெற்றி விஞ்ஞான உலகுக்கும், மனித குலத்துக்கும் கிடைத்த பெரிய வெற்றியாகும்" என்று பாராட்டினார். அந்த முதுபெரும் விஞ்ஞானியான பையட் என்ற புகழ்பெற்ற விஞ்ஞானி தன்னை நேரில் வந்து பாராட்டியதால் உள்ளம் உருகிப் போன லூயி பாஸ்டியர், "தங்களைப் போன்ற பேரறிஞர்கள் காட்டிய பாதையில் தான் இளைஞர்களாகிய நாங்கள் செல்கிறோம். எப்பொழுதும் தங்கள் வழிகாட்டுதலும் வாழ்த்துக்களும் எங்களுக்குத் தேவை" என்றார்.

வாழ்வின் படிகள்

மிக மிக நல்ல நாள்- இன்று
மிகப் பெரிய வெகுமதி - மன்னிப்பு
மிகவும் வேண்டியது- பணிவு
மிகவும் வேண்டாதது- வெறுப்பு
மிகப் பெரிய தேவை- சமயோசிதபுத்தி
மிகக் கொடியநோய்- பேராசை
மிகவும் சுலபமானது - குற்றம் காணல்
மிகவும் கீழ்த்தரமானது- பொறாமை
நம்பக் கூடாதது- வதந்தி
ஆபத்தை விளைவிப்பது- அதிக பேச்சு
செய்ய வேண்டியது- உதவி
விலக்க வேண்டியது- விவாதம்
உயர்வுக்கு வழி- உழைப்பு
நழுவ விடக் கூடாதது - வாய்ப்பு
பிரியக் கூடாதது- நட்பு
மறக்கக் கூடாதது- நன்றி

தாமரை

தாமரை குளத்தில் மலர்ந்திருக்கு
தண்ணீரின் மேலே மிதந்திருக்கு
நாமதை நேரில் பார்த்திடலாம்
நண்பர்கள் சேர்ந்து வாருங்கள்

ஆயிரக்கணக்கில் மலர்க்குவியல்
அழகு மிளிர மலர்ந்திருக்கு
பூவோடு மொட்டும் மலர்ந்திருக்கு
கண்டு களித்திட வாருங்கள்!

இலைகள் மேலே நீர்த்துளிகள்
இங்கும் அங்கும் வெண்முத்துக்களாய்
மிதப்பது பார்த்துச் சிரித்திடலாம்
அனைவரும் சேர்ந்து வாருங்களே

தாமரைக் கிழங்கில் கறி சமைத்து
தாமரை இலையில் பரிமாறி
தாமரைப் பூக்களைச் சாமிக்கு
சாத்தி நாங்கள் வணங்கிடலாம்!

வித்திலும் தாமரை முளைக்கிறது
கிழங்கிலும் அதுவே வளர்கிறது
அசுத்த நீரில் அது வளர்ந்தாலும்
அதிக மதிப்பு அதற்குண்டு!

எற்றொரு எக்குடிப் பிறந்தாலும்
ஏழ்மைப் பிடியினுள் வளர்ந்தாலும்
பன்னூல் கற்ற சான்றோரை
பன்னாட்டவரும் போற்றுவரே



வித்தியாசங்களைக் கண்டுபிடிப்போம்



தேசிய கல்வி நிறுவகத்தின் வணிகக் கல்விப் பாடத்தின் தமிழ்மொழி மூலமான புதிய ஆசிரியர் வழிகாட்டி நூலில் காணப்படும் குழப்பங்கள், தவறுகள் மற்றும் பாதிப்புக்கள்

வடிவேல்முருகன் தர்மதாசன்

Make or Buy ஆகிய ஆங்கிலப் பதங்கள் குழப்பகரமான முறையில் அர்த்தங்கள் எவையுமின்றி தேர்ச்சி மட்டம் 10.4 இன் 221 ஆம் பக்கத்தில் Make or By எனப் பிழையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

Factor என்பதற்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொல் **காரணிகர்** என்பதாகும். ஆனால், இதற்கானதமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 11.1 இன் 225 ஆம் பக்கத்தில் **காரணி** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

BarCodeஎன்ற ஆங்கிலப்பதத்துக்குப்பயன்படுத்தக்கூடிய தமிழ் சொல் **பட்டைக் குறியீடு** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 11.2 இன் 228 ஆம் பக்கத்தில் **நீரல் குறியீட்டு முறை** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Order, Indent ஆகிய ஆங்கிலப் பதங்களுக்கு வழமையாகப்பயன்படுத்தும்தமிழ்சொற்கள் **கட்டளை** எனஉள்நாட்டு வியாபாரத்திலும், **கட்டளை அட்டவணை** மற்றும் **தரவாணை** என வெளிநாட்டு வியாபாரத்திலும் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் இவற்றுக்கானதமிழ்சொற்களாகத்தேர்ச்சி மட்டம் 11.5 இன் 237, 238 ஆகிய பக்கங்களில் **கட்டளை** மற்றும் **இன்டென்ட்** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Trade bloc என்பதற்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொல் **வியாபாரக் கூட்டணி** என்பதாகும். ஆனால் இதற்கானதமிழ்சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 11.6 இன் 242, 243, 247, 248 ஆம் பக்கங்களில் **வியாபாரச் சங்கங்கள்** எனவும் **வியாபார வலயங்கள்** எனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

Made in USA, Made in Canada, Made inMexico ஆகிய ஆங்கிலப் பதங்கள் குழப்பகரமான முறையில் அர்த்தங்கள் எவையுமின்றித் தேர்ச்சி மட்டம் 11.6 இன் 245 ஆம் பக்கத்தில் Mading USA, Mading Canada, Mading Mexico எனப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

Electronic Commerce என்ற ஆங்கிலப் பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொல் **இலத்திரனியல் வர்த்தகம்** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சிமட்டம்11.7இன்249ஆம்பக்கத்தில் **இலத்திரனியல் வர்த்தகம்** எனவரவேண்டிய இடத்தில் இலத்திரனியல்வணிகம்எனப்பிழையானகருத்துடன்பயன்படுத்தப்பட்டுள்ளது.

தரம் 13இக்கான வணிகக் கல்விப் பாடத்தின் புதிய ஆசிரியர் வழிகாட்டிக் கைநூலில் காணப்படும் குழப்பங்கள், தவறுகள் மற்றும் கருத்துப் பிழைகள்

Productivity என்ற ஆங்கிலப் பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ் சொல் **உற்பத்தித்திறன்** என்பதாகும். ஆனால்தேர்ச்சிமட்டம்12.1இன்xiii ஆம்பக்கத்தில் **விளைதிறன்** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Monitor, Monitoring ஆகிய ஆங்கிலப் பதங்களுக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ் சொல் **கண்காணிப்பாளர், கண்காணித்தல்** என்பனவாகும். ஆனால் இவற்றுக்கான தமிழ் சொற்களாகத் தேர்ச்சி மட்டம் 12.2 இன் 10, 12 ஆம் பக்கங்களில் **மேற்பார்வையாளர், மேற்பார்வை** எனப்பிழையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Spokes person என்பதற்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ் சொல் **சார்பாகப் பேசவல்ல நபர்** அல்லது **ஊடகப் பேச்சாளர்** என்பவையாகும். ஆனால் இதற்கான தமிழ் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 12.2 இன் 10 ஆம் பக்கத்தில் **பேச்சாளர்** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Negotiator என்ற ஆங்கிலப் பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும்தமிழ்சொல் **சமரசம்** செய்பவர்என்பதாகும். ஆனால்இதற்கானதமிழ்சொல்லாகத்தேர்ச்சிமட்டம்12.2 இன் 10, 12 ஆம் பக்கங்களில் **கருத்துக்களைப் பரிமாறிக் கொள்பவர்** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Performance Evaluation, Performance ஆகிய ஆங்கிலப் பதங்களுக்குப் பயன்படுத்தும் தமிழ்ச் சொற்கள் **செயற்றிறன் மதிப்பீடு, செயற்றிறன்** என்பவையாகும். ஆனால், இவற்றுக்கான தமிழ் சொற்களாகத் தேர்ச்சி மட்டங்கள் 12.2, 15.9, 16.1, 16.7, 18.1, d xxxii, xxxvi, 12, 201, 208, 298 ஆம்பக்கங்களில் **செயலடைவு மதிப்பீடு** எனவும் **செயலடைவு** எனவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Foreman என்ற ஆங்கிலப்பதத்துக்கு வழமையாகப்பயன்படுத்தும் தமிழ் சொல் **முகாரி** அல்லது **மேஸ்திரி** என்பவையாகும். ஆனால் இதற்கான தமிழ் சொற்களாகத் தேர்ச்சி மட்டம்12.3 இன்15 ஆம்பக்கத்தில் **வேலைத்தலைவர்** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Gap Analysis என்ற ஆங்கிலப்பதத்துக்குரியதமிழ்சொல் **இடைவெளிப்பகுப்பாய்வு** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 12.6 இன் 30, 31 ஆம் பக்கங்களில் பிழையாக **ஆளிடைப் பகுப்பாய்வு** எனவும் **ஆயிடைப் பகுப்பாய்வு** எனவும் குழப்பகரமாகவும் அர்த்தமில்லாமலும் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது.

Unity of Command என்ற ஆங்கிலப் பதத்துக்குரிய தமிழ்ச் சொல் **கட்டளையின் ஒரினத்தன்மை** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 12.8 இன் xvi, 41, 43 ஆம்பக்கங்களில் **கட்டளையிடல் ஒழுங்குமுறை** எனவும் **கட்டளையிடலின் ஒருமைப்பாடு** எனவும் பிழையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Span of Control என்பதற்குரிய தமிழ்ச்சொல் **கட்டுப்பாட்டு விசாலம்** அல்லது **கட்டுப்பாட்டு வீச்செல்லை** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 12.8 இன் xvi, 39, 41, 43 ஆம் பக்கங்களில் **கட்டுப்பாட்டு ஒழுங்குமுறை** எனவும் **கட்டுப்பாட்டு வெளி** எனவும் கட்டளையிடல் வெளி எனவும் பிழையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.



Informal Organization என்ற ஆங்கிலப் பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொல் **முறைசாரா அமைப்பு** அல்லது **முறைசாரா ஒழுங்கமைப்பு** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 12.8 இன் xvi, 39, 44 ஆம் பக்கங்களில் **முறையற்ற ஒழுங்கமைப்பு** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Expert Power என்பதற்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொல் **சிறப்பாற்றல் வலு** அல்லது **நிபுணத்துவ வலு** என்பவையாகும். ஆனால் இதற்கானதமிழ்சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 12.8 இன் 41 ஆம் பக்கத்தில் **சிறப்புப் பலம்** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Reward Power என்ற ஆங்கிலப் பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ் சொல் **வெகுமதியளிக்கும் வலு** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 12.8 இன் 41, 42 ஆம் பக்கங்களில் **பரிசுகளை வழங்குவதற்குள்ள பலம்** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Coercive Power என்பதற்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொல் **கட்டாயப்படுத்தும் வலு** அல்லது **நிர்ப்பந்திக்கும் வலு** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 12.8 இன் 41, 42 ஆம் பக்கங்களில் **தண்டனை வழங்குவதற்குள்ள பலம்** எனப் பயன்படுத்தப் பட்டுள்ளது.

Personality Power என்ற ஆங்கிலப்பதத்துக்கு வழமையாகப்பயன்படுத்தும்தமிழ்ச்சொல் **ஆளுமைவலு** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 12.8 இன் 41 ஆம் பக்கத்தில் **ஆளுமைப் பலம்** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Informational Power என்ற ஆங்கிலப் பதத்துக்குரிய தமிழ்ச் சொல் **தகவலளிக்கும் வலு** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 12.8 இன் 41 ஆம் பக்கத்தில் **தகவல் பலம்** எனப் பயன்படுத்தப் பட்டுள்ளது.

Dominance Power என்பதற்கு வழமையாகப்பயன்படுத்தும்தமிழ்ச் சொல் **செல்வாக்குச் செலுத்தும் வலு** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சிமட்டம்12.8இன் 41 ஆம் பக்கத்தில் **செல்வாக்குச் செலுத்தக்கூடிய பலம்** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள், மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிய பார்வை

நேற்றைய தொடர்ச்சி...

Job Hierarchy என்ற ஆங்கிலப்பதத்துக்குரிய தமிழ்ச்சொல் **பதவி அதிகாரவரிசை** அல்லது **பதவி அதிகாரப்படிநிலை** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 12.8 இன் 43 ஆம் பக்கத்தில் **பதவிப் படிமுறை** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Situational Leadership என்பதற்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ் சொல் **சூழ்நிலைத் தலைமைத்துவம்** என்பதாகும். ஆனால் இதற்கானதமிழ்சொல்லாகத்தேர்ச்சிமட்டம் 12.9 இன் 50 ஆம் பக்கத்தில் **சந்தர்ப்பவாதத் தலைமைத்துவம்** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Informal Communication என்ற ஆங்கிலப் பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொல் **முறைசாராத் தொடர்பாடல்** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச்சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 12.11 இன் xviii, 55, 58, 59 ஆம் பக்கங்களில் **முறைமையற்ற தொடர்பாடல்** எனவும் **முறையற்ற தொடர்பாடல்** எனவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Formal Communication என்ற இந்தப் பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொல் **முறை சார்ந்த தொடர்பாடல்** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 12.11 இன் xviii, 55 ஆம் பக்கங்களில் **முறைமையான தொடர்பாடல்** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Layout Plan என்ற ஆங்கிலப்பதத்துக்கு வழமையாகப்பயன்படுத்தும்தமிழ்சொல் **தளஅமைப்புத் திட்டம்** என்பதாகும். ஆனால் இதற்கானதமிழ்சொல்லாகத் தேர்ச்சி மட்டங்கள் 13.2, 18.3 இன் xix, xlvi, 70, 71 ஆம்பக்கங்களில் **இடஅமைவுத்திட்டம்** எனவும் **நிலஅமைவுத்திட்டம்** எனவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Product Range என்ற ஆங்கிலப் பதத்துக்குரிய சரியான தமிழ்ச் சொல் **உற்பத்திப்பொருள் வீச்சு** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ் சொல்லாகத் தேர்ச்சி மட்டம் 13.2 இன் 73 ஆம் பக்கத்தில் **பொருள் உற்பத்தி** எனக் கருத்துப் பிழையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Product Layout என்பதற்குரிய தமிழ்ச் சொல் **உற்பத்திப் பொருள் தளஅமைப்பு** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச்சொல்லாகத்தேர்ச்சிமட்டம்13.2இன்74, 75 ஆம் பக்கங்களில் **உற்பத்தித் தளஅமைப்பு** எனவும் **பொருள் உற்பத்தித் தளஅமைப்பு** எனவும் **உற்பத்தி மாதிரி அமைப்பு** எனவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Cellular Layout என்ற ஆங்கிலப்பதத்துக்கு வழமையாகப் பயன்படுத்தும் தமிழ்ச் சொல் **கலத் தளஅமைப்பு** என்பதாகும். ஆனால்இதற்கானதமிழ்சொல்லாகத்தேர்ச்சிமட்டம் 13.2 இன் 74, 75 ஆம் பக்கங்களில் **சிறு அலகுத் தளஅமைப்பு** எனவும் **அலகுத் தளஅமைப்பு** எனவும் **கல அமைப்பு** எனவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

Fixed Position Layout என்ற ஆங்கிலப்பதத்துக்கு வழமையாகப்பயன்படுத்தும்தமிழ்சொல் **நிலையான இடநிலைத் தளஅமைப்பு** என்பதாகும். ஆனால் இதற்கான தமிழ்ச் சொல்லாகத்தேர்ச்சிமட்டம்13.2இன்74, 75 ஆம்பக்கங்களில் **நிலையான இடத் தளஅமைப்பு** எனப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் Fixed Position Layout என இடம்பெறவேண்டிய ஆங்கிலச் சொல்லானது Fixed Process Layout எனப் பிழையாக தேர்ச்சி மட்டம் 13.2 இன் 74 ஆம் பக்கத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கட்டுரையாளர்,
முதுநிலை விரிவுரையாளர், துறைத் தலைவர்
முகாமைத்துவக் கற்கைகள் துறை
முகாமைத்துவ பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

(தொடரும்)

வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை ஒப்பந்தகாரர்களையும், வழங்குனர்களையும் பதிவு செய்தல் - 2019

சபையானது 2019 ஆம் ஆண்டுக்கான கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் சேவைகளை வழங்குவதற்குத் தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குனர் கள், ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

1. பொருள்கள்

01. காகிதாதிகள் எழுதுபொருள்கள்
02. அலுவலக உபகரணங்கள்
03. நூலகங்களுக்கான நூல்கள்
04. கட்டடப் பொருள்கள்
05. கற்கள், மணல், கிரவல்
06. தீந்தைவகைகள் (Paints) நிறந்தீட்டும் பொருள்கள்
07. நீர் வழங்கும் குழாய்கள், கியூம்பைகள் மற்றும் ஏனைய பொருள்கள்
08. வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருள்கள்
09. மின்வழங்கும் பொருள்கள், மின் பாவனைப் பொருள்கள்
10. எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள்
11. இரும்புப்பொருள்கள்
12. தீராந்திகள், பலகைகள், சட்டங்கள்
13. வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் மின் கலங்கள்
14. கணினி, பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
15. சுத்திகரிப்பு பொருள்கள், கிருமிநாசினிகள்
16. பாதணிகள், தோற்பொருள்கள்
17. இலத்திரனியல் பொருள்கள்
18. வாகன சுத்திகரிப்பு பொருள்கள்
19. இறப்பர் முத்திரை தயாரித்தல்

2.சேவைகள்

01. அச்சிடுதல்
02. மோட்டார் வாகனம், உழவு இயந்திரம் திருத்தல்
03. வாகனங்களுக்கான ரியூப் ஒட்டுதல்
04. ஒட்டுவேலைகள், உலோக வேலைகள்
05. மீளமின் வலுவூட்டல்
06. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல்
07. வாகனங்கள் சுத்திகரிப்பு
08. கணினி, பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு (Service)

3.ஒப்பந்தவேலைகள் (ICTAD பதிவு உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்)

01. கட்டட நிர்மாண வேலை
02. கிணறு அமைத்தல்
03. வீதி நிர்மாண / திருத்த வேலைகள்

பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை அலுவலக நாட்களில் மு.ப.8.30 - பி.ப. 3.00 மணிவரையும் பிரதேசசபை வெங்கலச் செட்டிகுளம் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்துக்கும் விண்ணப்பக் கட்டணமாக ரூபா 1000.00 உம் பதிவுக்கட்டனமாக ரூபா 1000.00 செலுத்தப் படல் வேண்டும்.

விண்ணப்பபடிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் - 2019 எனக்குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் தவிசா-ளர், வெங்கலசெட்டிகுளம் பிரதேசசபை, மன்னார் - மதவாச்சி வீதி, செட்டிகுளம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் 20.12.2018 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விவரங்களுக்கு 024-2260060 அல்லது 024-2260914 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தவிசாளர்,
பிரதேசசபை,
வெங்கலச்செட்டிகுளம்,
22.11.2018

விளம்பர தொடர்புகளுக்கு
உதயன் advt@uthayan.com,
021493 1111

காணி விற்பனைக்கு

உரும்பிராய் சந்திக்கு அருகில் பிரதேசசபை உப அலுவல கத்திற்கு முன்பாக 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு - 076 697 2287

சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து) சகல கிளை அங்கத்தவர்களுக்குமான அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் கிளைரீதியான அங்கத்தவரின் முகவரி இடப்பட்ட அங்கத்தவர் பட்டியல் கிளைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலின் பிரகாரம் தங்களது அங்கத்தவர் இலக்கம், பெயர் முதலெழுத்து முகவரியில் திருத்தம் இருப்பின் அல்லது மாற்றம் இருப்பின் குறித்த கிளைமுகாமையாளர் ஊடாகவோ, கிளைக்குமுச் செயலாளர் ஊடாகவோ அல்லது தலைமைக்காரியாலயத்துடனோ தொடர்பு கொண்டு 06.12.2018ம் திகதிக்கு முன் சரியான திருத்தங்களை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். இத்திகதிக்கு முன் முகவரியில் மாற்றங்கள் தெரிவிக்காதவிடத்து பட்டியலில் உள்ள முகவரியே தங்களது முகவரியாக கருதப்பட்டு எதிர்காலத்தில் சங்க நடவடிக்கைகள் தொடர்பான அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம். தற்போது இயங்காமல் இருக்கும் கிளைநிலையங்களின் அங்கத்தவர் பட்டியல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடங்கள் பின்வருமாறு

கிளை இலக்கமும் பெயரும்	தற்போது காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடங்கள்
கிளை இல 02 சாவகச்சேரி தெற்கு	நுணாவில் கிழக்கு கல்லடிமூட்டுவீதியில் உள்ள J/306 பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகம்
கிளை இல 03 நுணாவில் கிழக்கு	நுணாவில் மத்தி J/307 கிராமசேவையாளர் அலுவலகம்
கிளை இல 04 நுணாவில் ஜோதி	நுணாவில் மேற்கு பொதுநோக்கு மண்டபத்தில் உள்ள J/308 கிராமசேவையாளர் அலுவலகம்
கிளை இல 06 மீசாலை கிழக்கு	மீசாலை மேற்கு கிளை 19 இலும் மீசாலை கிழக்கு J/318 கிராமசேவையாளர் அலுவலகத்திலும்
கிளை இல 07 வேரற்கேணி	இலுப்பையடி வீதியிலுள்ள கலைவாணி சனசமூகநிலையம்
கிளை இல 08 மலர்மகள்	மட்டுவில் தெற்கில் உள்ள செல்வராசா பல்பொருள் வாணிபம் (சசி கடை)
கிளை இல 10 மட்டுவில் வடக்கு	சரசாலை மட்டுவில் கிளை 11 இலும் மட்டுவில் வடக்கு J/313 கிராமசேவையாளர் அலுவலகத்திலும்
கிளை இல 12 சரசாலை தெற்கு	சரசாலை J/316 கிராமசேவையாளர் அலுவலகம்
கிளை இல 16 சாவகச்சேரி வடக்கு	ஆசிரியர்வீதி சங்கத்தானையில் உள்ள J/303 கிராமசேவையாளர் அலுவலகம்
கிளை இல 17 வேம்பிராய்	மீசாலை வடக்கு கிளை இல 18
கிளை இல 20 சாவகச்சேரி வடகிழக்கு	சங்கத்தானை கிளை இல 21

(IN 8459) (14.17)

சகல கிளைகளினதும் வாக்காளர் இடாப்புக்களை தலைமைக்காரியாலயத்திலும் பார்வையிடலாம்

தலைவர் **செயலாளர்**

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்
கண்டிவீதி, சாவகச்சேரி

விலை கோரல் அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

இலங்கை மத்திய வங்கிக்கு ஓட்டுநர்களுடன் சேர்த்து மோட்டார் வாகனங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளுதல்

அநுராதபுரம், மாத்தளை, மாத்தறை, திருகோணமலை, நுவரெலியா மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களில் அமைந்துள்ள இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களில் பயன்படுத்துவதற்கு 2019.01.01 தொடக்கம் 2020.12.31 வரை இரண்டு வருட காலப்பகுதிக்காக மோட்டார் வாகனங்களை ஓட்டுநர்களுடன் சேர்த்து வாடகைக்கு வழங்க ஆர்வமுடைய விலைக்குறிப்பீட்டாளர்களிடமிருந்து விலைக்கோரல்கள் கோரப்படுகின்றன.

ஒவ்வொரு பிரதேச அலுவலகத்திற்குமான வாகனத் தேவைப்பாட்டின் விபரம் பின்வருமாறு;

1. குறைந்தபட்சம் 5 பயணிகளுக்கான இருக்கைக் கொள்ளளவு, பெயரளவு அல்லது உயர்ந்த 2400 சி.சி எந்திர இயலாற்றலைக் கொண்ட கடுவழிப் பயண வாகனங்கள் (SUV ரக வாகனங்கள்)

   அல்லது

2. குறைந்தபட்சம் 9 பயணிகளுக்கான இருக்கைக் கொள்ளளவு, பெயரளவு அல்லது உயர்ந்த 2000 சி.சி எந்திர இயலாற்றலைக் கொண்ட வேன்கள்

வாகனங்கள் 2018.11.01ஆம் திகதியில் ஐந்து ஆண்டுகளுக்கு குறைவான தயாரிப்புத் திகதியுடன் நிறைவான அம்சங்களைக் கொண்டதாகவிருத்தல் வேண்டும். விலைக்கோரல்கள் 2,500 கி.மீற்றர்களுக்கான மாதாந்த வாடகையினையும் மேலதிகக் கி.மீற்றர்களுக்கான விலையினையும் உள்ளடக்குதல் வேண்டும்.

வாகனத்துடன் தொடர்புடைய அனைத்து இயக்க மற்றும் பராமரிப்பு செலவினை போக்குவரத்து வழங்குநர் ஏற்றுக்கொள்ள வேண்டும். மாதாந்த வாடகையானது ஓட்டுநர்களின் கோரல்களுக்கான செலவினையும் (மேலதிக நேரம், வாழ்க்கைப்படி போன்றவையும்) ஓட்டுநருக்கான தங்குமிடத்தினை வழங்குவதற்கான செலவினை உள்ளடக்குதல் வேண்டும்.

விலைக்குறிப்பீட்டு ஆவணங்களின் முழுமையான தொகுதியை வழமையான வங்கி வேலைநாட்களில் 2018.11.30 வரை மு.ப 10.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரை கொழும்பு-1, இலங்கை மத்திய வங்கி, வசதிகள் முகாமைத்துவத் திணைக்களத்திலும் கீழ் குறிப்பிடப்பட்ட பிரதேச அலுவலங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

i. பிரதேச அலுவலகம் - அநுராதபுரம், கட்டடம் 1, அநுராதபுரம்.
ii. பிரதேச அலுவலகம் - மாத்தளை, இல.805, திருகோணமலை வீதி, மண்டன்டாவல, மாத்தளை.
iii. பிரதேச அலுவலகம் - மாத்தறை, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை.
iv. பிரதேச அலுவலகம் - திருகோணமலை, இல.103, அஞ்சல் அலுவலக வீதி, திருகோணமலை.
v. பிரதேச அலுவலகம் - கிளிநொச்சி, அறிவியல் நகர், கிளிநொச்சி.
vi. பிரதேச அலுவலகம் - நுவரெலியா, இல.84, பதுளை வீதி, நுவரெலியா.

விலைக்கோரல்களை ஒன்றில் 2018.12.05ஆம் திகதி பி.ப 2.30 மணிக்குப் பிந்தாமல் பணிப்பாளர், வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, கொழும்பு-01 என்ற முகவரிக்கு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் அல்லது 2018.12.05ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு பிந்தாமல் இலங்கை மத்திய வங்கியின் தலைமை அலுவலகத்தின் தரை மாடியிலுள்ள அஞ்சல் அறையில் வைக்கப்பட்டிருக்கும் விலைக்கோரல் பெட்டிக்குள் போடப்படுதல் வேண்டும்.

விலைக்கோரல்கள் மூடப்படும் நேரத்தின் பின்னர் உடனடியாக மத்திய வங்கியின் தரை மாடியில் விலைக்குறிப்பீட்டாளர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

மேலதிகத் தகவல்கள் தேவைப்படுமாயின் 0112 477346 ஊடாக வசதிகள் முகாமைத்துவத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்/போக்குவரத்து, தொடர்புகொள்ள முடியும்.

பணிப்பாளர் - வசதிகள் முகாமைத்துவ திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

ஓராண்டு நினைவலைகள்



A.S.தம்பிஜயா
(கட்டட ஒப்பந்தக்காரர் – Pushpa Group)

மண்ணுலக பிரவேசம்
27.07.1948

மண்ணுலக அகல்வு
02.12.2017

சுன்னாக மண்ணின் மைந்தனாம்,
பொன்னகத்தை தன்னகத்தே கொண்ட மானிடமாம்.
கரம் ஈனும் பண்பாளர் நற்குணம் கொண்ட அன்பாளர்,
அனைவரின் மனம் கவர்ந்த மாமனிதர். கடின உழைப்பினால் சிகரம் தொட்டவரே.
சிகரத்தில் எமை நிறுத்தி நீர் மறைந்த மாயமென்ன? வெற்றிப்படிகளை காட்டியவரே.
வாழ்வில் நீங்களில்லா வெற்றிடம் நிரப்ப யாராலும் முடியாது!
தங்கள் பெருமையும் புகழும் உலகம் மட்டுமல்ல.
கட்டடங்கள் கூட பேசுதப்பா!!! காலனவன் காவு கொண்டு காலமது கடந்து
ஓராண்டு சென்றதனை மனமது தாங்க மறுக்கின்றது.
தெய்வம்போல எம்மை காத்தீரே. தினம்
கண்ணீரில் அபிஷேகம் செய்கின்றோம். நம் தெய்வமே அப்பா...

இல.81, குட்செட் வீதி,
கோண்டாவில்.

நீங்கா நினைவுகளுடன்....
மனைவி, பிள்ளைகள்.

(CS 21353 (13.17)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 20 . 08 . 1955

மறைவு 03 . 12 . 2017

அமரர் வல்லி மகேந்திரன் J.P

(முன்னாள் தலைவர் - கலிகைக் கந்தன் ஆலய பரிபாலன சபை
முன்னாள் எழுதுவினைஞர் - விவசாயத்திணைக்களம்)

எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு ஆனதோ .....
மாறுமோ உங்கள் நினைவலைகள் .....
ஓயுமோ உங்கள் அன்பலைகள் .....
நித்தமும் நினைப்போம் உம்மை .....
என்றும் எங்கள் இதயத்தில் இருத்தித் தொழுவோம் .....
எம்மை விட்டுப் பிரிந்து முருகனடி சேர்ந்தீரோ .....
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

காந்தி வீதி,
துன்னாலை மேற்கு, கரவெட்டி.

குடும்பத்தினர்.

021 226 3807/ 077 707 8628

(AG 858) (14.7)

31 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 . 11 . 1936

மறைவு 04 . 12 . 1987

அமரர் இராசதுரை பஞ்சாட்சரம்

(ஸ்தாபகர் - அருள்முருகன் நகைமாடம். கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்)

திதி: பூரணை (22.11.2018)

அன்புக்கு இலக்கணமாய்
பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்தீர்கள்
எங்களையும் வாழவைத்தீர்கள் அப்பா!
கண்கவரும் கம்பீரத் தோற்றமும்
கணீரென்ற கனிவான பேச்சுரையும்
அன்பே உருவான வட்ட முகம்தனிலே
இன்பமாய் உதிர்க்கும் உதட்டோர சிரிப்பும்
இன்றும் மறக்க முடியவில்லை
ஆண்டுகள் பல ஓடிமறைந்தாலும் அப்பா!
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு அகலாது
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

483, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
சாரங்கா நகைமாடம் யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரி.

(CS 21449) (13.17)

மரண அறிவித்தல்

திருமதி சரஸ்வதி நாகலிங்கம் (சத்திரந்தை, காரைநகர்)

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும், இல.46, அம்பலவாணர் வீதி, அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி நாகலிங்கம் கடந்த (20.11.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் கனகம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான கனகசபை நல்லம்மா தம்பதியரின் அன்புமருமகளும் நாகலிங்கத்தின் அன்பு மனைவியும் புவனேஸ்வரி, பார்வதி, சின்னப்பிள்ளை, காலஞ்சென்ற அம்பலவாணர் ஆகியோரின் அன்புச்சகோதரியும் சாந்தினிதேவி, சாரதாதேவி (காலி), பிரபாகரன் (கண்ணன்ஸ்ரோர்ஸ்268, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்), தர்சினிதேவி (கனடா), ஜெயதேவி (ஆசிரியை, இளையதம்பி இந்து மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்), கமலதாசன் (NPK Traders (Pvt) Ltd No.62, Colombo Gold Centre Colombo 11, Srilanka) ஆகியோரின் அன்புத்தாயாரும் சிவஞானசுந்தரம் (ஞானம் ஸ்ரோர்ஸ் வைத்தீஸ்வரா சந்தி, யாழ்ப்பாணம்), சிவானந்தராஜா (மாணிக்கம் ஸ்ரோர்ஸ், காலி), தர்சிகா (யாழ்ப்பாணம்), ஆனந்தராஜா (கனடா), சிவசோதி (சித்தி விநாயகர் களஞ்சியம் 117, கண்டி வீதி, சாவகச்சேரி SVS), யசோதர்னி (கொழும்பு) ஆகியோரின் அன்புமாமியும் சிவானுஜா, தனுஜா, ஜெகஜீவன், நிதிஸ்ரீ, ஷாருகன், கிரிஷிகேஷ், கீர்த்திகன், தன்ஷிகா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2018) வியாழக் கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 46, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

கோப்பாயில்...

ளது. நாளை மறுதினம் வெள்ளிக்கிழமைக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் தற்போது தரைப்படையினரின் முகாமாக உள்ளது. இதனால் கடந்த ஆண்டு இந்த முகாமின் முன்பாக உள்ள தனியார் காணியில் மாவீரர் தினத்தை அரசியல்வாதிகள் சிலர் கடைப்பிடித்தனர். இந்த ஆண்டும் அது போன்று நிகழ்வுகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவித்தே அவற்றுக்குத் தடை விதிக்குமாறு பொலிஸார் கேட்டனர். பொலிஸாரின் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையிலும் உலக நாடுகள் பலவற்றிலும் தடைசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் பிலிகள் அமைப்பில் இருந்த உறுப்பினர்களை நினைவுகூரும் மாவீரர் தினத்தின் போது கோப்பாய் இராச வீதியில் 512ஆவது படையணியின் தலைமையகத்தின் முன்னாள் வீரசிங்கம் சிறிதரன் என்ற தனியாருக்குச் சொந்தமான காணியில் நிகழ்வு நடத்த ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

குறித்த செயலானது குற்றவியல்கோவை 120இன் கீழும் 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டத்தின் 27ஆம் சரத்தின் கீழும் குற்றமாகக் கருதப்படுவதோடு குறித்த நிகழ்வு இடம்பெறுவது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் என்பதனால் நிகழ்வைத் தடுக்க தடை விதிப்பதோடு நிகழ்விற்காக அந்த இடத்தினைக் கொடுப்பதற்கு வீரசிங்கம் சிறிதரனிற்கு தடை விதிக்க வேண்டும்" என்றனர் பொலிசார்

குறித்த வழக்கினை ஆராய்ந்த நீதிபதி மேற்படி வழக்கிற்கான கட்டளை எதிர்வரும் 23ம் திகதி நாளைய தினம் வழங்கப்படும். எனத் தெரிவித்து வழக்கினை ஒத்தி வைத்தார்.

இதற்கிடையே இந்த வழக்கில் நீதிவான் தீர்ப்பு ஒன்றை அளித்துள்ளார் என்று தெரிவிக்கும் போலியான அறிக்கைகள் நேற்றுப் பிற்பகலில் விசமிகளால் வெளியிடப்பட்டிருந்தன. சமூக வலைத்தளங்கள் ஊடாக இது கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியிருந்தது. (உ. 8,26,37,105)

வடிவேல்...

ளவில்லையென ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

அமைச்சரவையின் நேற்றைய கூட்டத்தொடரில் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் கலந்து கொண்டார் என வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது. வடிவேல் சுரேஸ் ஐ.தே.கவுடன் இணைந்துள்ளார். அவர் எந்த ஒரு கூட்டத்திலும் கலந்து கொள்ளவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் சமர்பிக்கப்பட்டபோது கட்சி தாவிய வசந்த சேனநாயக்க, அமைச்சரவைக் கூட்டத்தில் நேற்றுப் பங்கேற்றிருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே அடிக்கடி கட்சி தாவும் வடிவேல் சுரேஸ் தொடர்பில், ஐக்கிய தேசியக் கட்சி அறிக்கை வெளியிட்டுள்ளது. (5)

மகிந்த...

கலந்து கொண்டுள்ளார். கடந்த 26 ஆம் திகதி புதிய தலைமை அமைச்சராக மகிந்த ராஜபக்ச நியமிக்கப்பட்டதை அடுத்து பலர் கட்சி தாவலில் ஈடுபட்டனர். அதில் வசந்த சேனாநாயக்கவும் ஒருவராவார். கட்சி தாவி அமைச்சுப் பதவியையும் ஏற்றுக் கொண்டார். இதன் பின்னர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன விடுத்த அரசிதழ் அறிவித்தலுக்கு உயர் நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்திருந்த நிலையில், மகிந்தவிற்கு ஆதரவு தெரிவித்த வசந்த சேனாநாயக்க மீண்டும் ஐ.தே.கவுடன் இணைந்தார். கடந்த 14 ஆம் திகதி தனது அமைச்சுப் பதவியைத் துறப்பதாக அமைச்சர் வசந்த சேனாநாயக்க தெரிவித்திருந்தார்.

'பெரும்பான்மை இருக்கும் தரப்புடன்தான் இருப்பதாகவும், புதிய அரசிடம் பெரும்பான்மை இல்லை என்பது தற்போது தெரிய வந்துள்ளதால் பதவி துறக்கின்றேன்' என்று அவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று இடம் பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்றுள்ளார். (5)

கண்ணீர் அஞ்சலி

நேற்று (21.11.2018)
புதன்கிழமை காலமான

மாணிக்கவாசகர் சாரு

(யா /வேம்படி பெண்கள் உயர்தரப்பாடசாலை மாணவி)

அவர்களின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அராலி தெற்கு, வட்டுக்கோட்டை. நாகலிங்கம் குடும்பத்தினர்.

ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

தேவை

★ தாதியர்
★ ஆய்வு கூட அனுபவமுள்ளவர்கள்

தொடர்பு -077 8730 129

வாகன விற்பனை

பல்கலைக்கழக விரிவுரையாளரின் பாவனையிலுள்ள Toyota VITZ ரக கார் விற்பனைக்குண்டு.
(2008 உற்பத்தி 87 000 km பாவனை)

தொடர்பு - 077 371 5591

காணி / வீடு விற்பனை

வவுனியா உக்குளாங்குளம் பகுதியில் 2,2 பரப்புக்காணியுள் சுற்றுமதில், கிணறு மற்றும் சகல வசதிகளுடன் அமைக்கப்பட்ட புத்தம் புதிய வீடு விற்பனைக்குண்டு.

077 945 7705 / 077 615 2992
விடுமுறை சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம்.

நல்லூர் பிரதேச சபை கொக்குவில்

2019 ஆம் ஆண்டிற்கான மீள் கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், என்பவற்றை 2019ஆம் ஆண்டு தை மாதம் 1ஆம் திகதி தொடக்கம் மார்கழி 31ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான மீள் கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி :- 06.12.2018 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 07.12.2018 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி :- 07.12.2018 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் :- கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேசசபை.

01. கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளை தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5,கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். மூன்றாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

02. கேள்விப்பத்திரங்கள் மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்திப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர்கள் தமது அடையாள அட்டையையும் கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழையும் கொண்டு வருதல் வேண்டும்.

03. கூட்டுறவுச்சங்கங்கள் தவிர்ந்த, தனிப்பட்டவர்கள் திருநெல்வேலிச்சந்தை, கொக்குவில் சந்தை என்பவற்றுக்குரிய விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பின், ஏதாவதொரு வங்கியில் தங்கள் பெயரில் முறையே ரூபா 1,500.000.00 இற்கும் ரூபா 200.000.00 இற்கும் குறையாது வைப்பில் உள்ளமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. திருநெல்வேலிச் சந்தையில் விசேட பண்டிகை நாள்களில் நடைபாதை மற்றும் வீதியோர வியாபார நடவடிக்கைகள் அனுமதிக்கப்படமாட்டாது என்பதுடன் சபையினால் ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வரி அறவிட அனுமதிக்கப்படும்.

05. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

06. ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது.

07. கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

08. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை 14.12.2018 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ளவேண்டும்.

09. கேள்வி தொடர்பான மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

2019 ஆம் ஆண்டுக்கு சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை மீள் கேள்வி அட்டவணை

இல	சந்தைகள் (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன்), இறைச்சிக்கடைகள்	மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம்	மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம்	ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா.
	நல்லூர் உப அலுவலகம்			
1.	திருநெல்வேலிச்சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்)	1,000.00	15,000.00	24,836,458.50
2.	திருநெல்வேலிச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை	500.00	5,000.00	695,205.00
3.	திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 02.	500.00	5,000.00	171,554.80
	கொக்குவில் உப அலுவலகம்			
1.	கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்)	1,000.00	10,000.00	1,227,345.00
2.	கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை	500.00	5,000.00	743,099.50
3.	கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 01	500.00	5,000.00	150,100.00
4.	கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 02	500.00	5,000.00	150,100.00

திரு தா.தியாகமூர்த்தி
தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி.
22.11.2018

Glory To God Alone
HOLY FAMILY CONVENT, JAFFNA
PAST PUPILS' ASSOCIATION

Annual General Meeting - 2018

Date : 24.11.2018
Time : 3.30 pm
Venue: School Main Hall

All the members are kindly requested to be present.

Principal
J/ Holy Family Convent Jaffna.

(CS.21346) (13.17)

பத்தாம் ஆண்டு நினைவலை

சின்னத்துரை கோணேசலிங்கம்

தோற்றம் 18.09.1934 — மறைவு 12.12.2008

திதி: பூரணை

அன்பின் அணிகலனாய்
பாசத்தின் இருப்பிடமாய்
பொறுமையின் பொக்கிஷமாய்
சுமை தாங்கியாய் வாழ்ந்து
எமது இதயத்தில் என்றும்
அணையாத் தீபமாய்
கார்த்திகை சுடரில் கலந்தீரே
பத்தாண்டு பறந்தாலும்
எந்நாளும் மறவாது
உங்கள் நினைவுகள்

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(CS.21296 (13 ,17)

குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

வேலுப்பிள்ளை கணேசமூர்த்தி

சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளைகணேசமூர்த்தி நேற்று (21.11.2018) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை பொன்னம்மா தம்பதியரின் அன்புமகனும் இலங்காதேவியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், சண்முகநாதன், அருணகிரிநாதன் மற்றும் மகாதேவன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற சசிதரன் மற்றும் சுபாசினி (சுவிஸ்), செந்தில்தரன் (லண்டன்), சுகந்தினி, சந்திரகுமார் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் றமீனா, விஜயபாலா (சுவிஸ்), நளாயினி (லண்டன்), ஆனந்தராசா (யா /பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம்), தனுஜா (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனும் பிரியந்தி, பிரதுஷா, சாய்பிரகாஷ், பிரணீத்தா, சஷ்டிபிரகாஷ், பிறின்சிகா, நளின், சிந்துஜன் (SLIIT), சௌமியா, ஜதுர்சனா, அஸ்விந் ஆகியோரின் அன்புப்பேரனும் சுஜித், பிரீத்தி, விகாஷ் ஆகியோரின் அன்புப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.11.2018) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
சீரணி, சண்டிலிப்பாய். **குடும்பத்தினர்.**

மரண அறிவித்தல்கள்

திருமதி கமலம் ஆறுமுகம்

காரைநகரைப் பிறப்பிடமாகவும், ஓமந்தை காயாங்குளத்தை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி கமலம் ஆறுமுகம் கடந்த (19.11.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் செம்பருத்தி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா சுந்தரம்மா தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்புமனைவியும் காலஞ் சென்றவர்களான சவுந்தரம், சுப்புலெட்சுமி ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற கணேஸ்வரி மற்றும் பரமேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயும் சந்திரிக்காவின் (கனடா) அன்புமாமியும் பிரியந்தன் (கனடா), மேனுஜா (கனடா), துஷாந் (கனடா) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2018) வியாழக் கிழமை ஓமந்தையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப.10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஓமந்தை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காயாங்குளம், ஓமந்தை. **தகவல் : ஆ. பரமேஸ்வரன்**
077 415 7153 **(மகன், கனடா) குடும்பத்தினர்.**

தோற்றம் 10 . 08 . 1934 — **மறைவு** 19 . 11 . 2018

திருமதி நாகம்மாஇளையதம்பி

அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா இளையதம்பி அவர்கள் கடந்த (19.11.2018) திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் நாகமுத்து தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான சடையர் சந்தனம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இளையதம்பியின் அன்புமனைவியும் காலஞ்சென்ற வர்களான தில்லைவனம், கணபதிப்பிள்ளை, கனகம்மா ஆகி யோரின் சகோதரியும் மனோன்மணி (ஜேர்மனி), மன்மதராசன் காலஞ்சென்ற வசந்தகுமாரி மற்றும் மலர் (கலா-ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயாரும்மகேந்திரன், பரமேஸ்வரி, குலேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும் மனோகரன் (பிரான்ஸ்), சுபாஜினி (ஜேர்மனி), சுதாஜினி (பிரான்ஸ்), சுகந்தினி (சுவிஸ்), சந்திரகுமார் (பிரான்ஸ்), தனுஷா (ஜேர்மனி), சசிகுமார் (Doctor - யா /போதனா வைத்தியசாலை), கமலகுமார், சங்கீதா, சிந்துஜா, கஜந்தா (பிரான்ஸ்), தர்ஷா, சுதர்சினி, சதீஷ்குமார், துஷ்யந்தினி, சியான் (ஜேர்மனி), கௌசிகன் (ஜேர்மனி), சினேகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் அர்ச்சயன், சாகித்யா, லோஜிதன், சன்சிகா, திகாஷன், லுக்ஷன், நிதர்ஷன், கிருஸ்ணயா, அபிநயா, திசான், ருஷான், யனுஷன், ஹரிஷன், ஹிந்துஷன், டிலுக், பவிரா, வினுஜா, நாரணி, பிரகாஷ், சாருகி, லக்ஸிகன், லதுஷன், லகிஷா, ஆதிஷ், ஷாய்நாத், அநிஷா, ஆர்த்திகன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2018) வியாழக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அல்லைப்பிட்டி இந்து மயானத்தில் தகனம்செய்யப்படும். இந்த அறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.
அல்லைப்பிட்டி - 01. **077 208 7778 (சசி - பேரன்)**

ஏழாம் ஆண்டு நினைவு

பிறப்பு 20.04.1940 — **இறப்பு** 08.12.2011

அமரர்

இராமலிங்கம் தளையசிங்கம்

அன்பே உருவான எங்கள் அப்பாவே பண்பிற்கு
இலக்கணமாய் பாசத்தின் திருவுருவாய்
திகழ்ந்த தெய்வமே இன்பமாய் நாம் வாழ நல்வழி வகுத்தீரே !
நல்லவை நாம் செய்ய போற்றி வாழ்த்தினீரே!
பெற்றோருக்கு உதாரணமாய்
பூமியிலே வாழ்ந்தீரே ! ஏழாண்டுகள் கடந்தாலும் உங்கள்
நினைவுகள் எம்மைவிட்டு என்றுமே அகலாது.

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

பிரிவால் துயருறும் : குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்கள்

பிறப்பு 30 . 09 . 1999 — **இறப்பு** 21 . 11 . 2018

மாணிக்கவாசகர் சாரு

(யாழ். வேம்படி உயர்தர கல்வி மாணவி)

மாணிக்கவாசகர் பரமேஸ்வரி தம்பதியரின் அன்புமகளான மாணிக்க வாசகர் சாரு நேற்று (21.11.2018) புதன்கிழமை அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம் செல்லம்மா காலஞ் சென்ற வைத்திலிங்கம் மற்றும் காவேரி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் சலன்ராஜ் (சுவிஸ்), மதுசா ஆகியோரின் அன்புச்சகோதரியும் அகிந்தனின் (கனடா) அன்புமைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.11.2018) வியாழக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் பூனாவோடை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
அராலி தெற்கு, வட்டுக்கோட்டை. **077 113 8907, 077 138 5266**

திருமதி பவளம் சத்தியானந்தன்

யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு இராஜேஸ்வரி வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி பவளம் சத்தியானந்தன் கடந்த (20.11.2018) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சத்தியானந் தனின் அன்புமனைவியும் காலஞ்சென்ற வர்களான வேலுப்பிள்ளை மீனாட்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வர்களான வைத்திலிங்கம் அன்னம்மா தம்பதியரின் அன்புமருமகளும் சதீஸ் குமார் (யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்), துஷாரா (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயும் தயாவதி எட்மன் ஜோர்ஜின் (லண்டன்) அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான சுப்பிர மணியம், பொன்னம்பலம் மற்றும் நாகம்மா, சின்னராஜா, நாகராசா ஆகி யோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், குமாரகுல சிங்கம், லீலாவதி மற்றும் தனபாக்கியம், விஜயலட்சுமி, தனலட்சுமி, பானுமதி, பஞ்சாட்சரம், கிருபாகரன் ஆகியோரின் மைத்துனியும் பிரவீன், பானுஜா, லதீஷனன், விதுஷிகா (லண்டன்), ஜஸ்மின் (லண்டன்) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2018) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

33/ 8, இராஜேஸ்வரி வீதி,
நாயன்மார்கட்டு அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்.
077 825 3330

முக்கிய அறிவிப்பு

காங்கேசன்துறை, பருத்தித்துறை வீதியில் உள்ள கோவில் பற்று தேவ உலையன் வளவில் அமைந்துள்ள வீடும் வளவும்,

காலஞ்சென்ற

யோகமூர்த்தி இராஜேஸ்வரியின்

ஆதனமாகும் அவரின் இறப்பின் பின்பு ஜவரின் உரிமையில் உள்ள இவ் ஆதனத்தை பாலசிங்கம் ஸ்ரீஸ்கந்தராசா என்பவர் தனி ஒருவராக செயற்பட்டு இதனை வாடகைக்கோ அல்லது விற்பனைக்கோ நடவடிக்கை எடுப்பதற்கு தத்துவம் அற்றவர் என்பதை இத்தால் சகலருக்கும் வெளிப்படுத்துகின்றேன். இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு மற்றையோர் பொறுப்பாளிகள் அல்ல என்பதை தெரியப்படுத்துகின்றேன்.

சந்தை வீதி, காங்கேசன்துறை. (cs.21349) (13.17)

க. உருத்திரசேனன் (சகோதரன்)

நெஞ்சம் நெகிழ 17 ஆம் ஆண்டில்

உயிரப்பு 15 . 01 . 1944

சங்கமம் 30 . 11 . 2001

அமரர் கந்தையா பன்னிருகரம்

(முன்னாள் உரிமையாளர் நியூ கௌரி மிதிவண்டி வாணிபம், நெல்லியடி)

திதி :22.11.2018

ஆண்டுகள் 17 ஆனாலும்
ஏற்க மறுக்குதப்பா நெஞ்சம்
நிஜமாய் உங்கள் பிரிவை
என்றும் உயிர்ப்புடனே வாழ்ந்திடுவாய் அப்பா
எம் மூச்சோடு கலந்து !

சாந்தி பவனம்
கொற்றாவத்தை, கரவெட்டி. (AVA 00422) (14.17)

குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

சுப்பிரமணியம் மயில்வாகனம்



தோற்றம் 01.07.1947

மறைவு 20.11.2018

கந்தரோடை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், இறம்பைக்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மயில்வாகனம் கடந்த(20.11.2018)செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் தங்கம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றசண்முகநாதன் அன்னலட்சுமி தம்பதியரின் அன்புமருமகனும் ரூபாவதியின் அன்புக்கணவரும் கந்தசாமி, சண்முகராசா, வேலாயுதபிள்ளை, இராசரத்தினம், சிவராசா, செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் மோகனதாஸ், இந்திரதாஸ், சந்திரதாஸ், துசியந்திரதாஸ், சுதர்சினி, சுகிர்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.11.2018) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வெளிக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.

என்னை...

களை முன்வைப்பது. நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் ஆர்ப்பாட்டங்களையும் குழப்பங்களையும் ஏற்படுத்துவது போன்ற செயற்பாடுகளை விட நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்பதே விவேகமான செயற்பாடாகும். இவ்வாறு சபாநாயகரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சபாநாயகரின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போதைய அரசிலிருக்கும் கட்சிகள் பத்திரிகையாளர் மாநாடுகளை நடத்தி சபாநாயகருக்கு எதிராக ஆதர மற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர். சபாநாயகர் பக்கச் சார்பாக செயற்படுவதாக காட்டுவ தற்காக நாடாளுமன்றத்துக்குள்ளேயும் வெளியேயும் ஆர்ப்பாட்டங்களைச் செய்வதாலும் கீழ்தரமான அவ தூறுகளை பரப்புவதனாலும் இனிமேலும் எந்தப்பய னும் ஏற்பட்போவதில்லை. அரசுக்கு நாடாளுமன்றத் தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு இருக் கின்றது என்பதை சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிப்பதைத் தவிர விவேகமான செயல் வேறு எதுவும் கிடையாது.

தற்போதைய அரசுக்குப் பெரும்பான்மை பலம் இல்லை என்று கூறி நாடாளுமன்றத் தின் 225 உறுப்பினர்களில் 122 உறுப்பி னர்கள் கையெழுத்திட்டு சபாநாயகரிடம் எழுத்து மூலம் அறிவித்திருப்பதால் நாடா ளுமன்றச் சம்பிரதாயத்துக்கு செவி மடுக்க வேண்டியதே சபாநாயகரின் தவிர்க்க முடி யாத பொறுப்பாகும். சபாநாயகர் எடுத்தி ருக்கும் நிலைப்பாடு பக்கச் சார்பானது என்று கூறி சபைக்கு வெளியேயும் உள் ளேயும் ஆர்ப்பாட்டம் செய்வதனாலும் அவதூறு பரப்புவதனாலும் எந்த பயனும் ஏற்படப்போவதில்லை.

தனக்குச் செய்யப்படுகின்ற அவதூறு களையும் உயிருக்கு விடப்படுகின்ற அச்சு றுத்தல்களையும் பொறுப்படுத்தாமல் தாய் நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாப்பதற் கும் எதிர்கால சந்ததியினர் ஜனநாயக நாட்டில் சுதந்திரமாக வாழ்வதற்கான உரி மையை உத்தரவாதப்படுத்துவதற்கும் சபாநாயகர் தன்னை முழுமையாக அர்ப ணித்திருக்கின்றார் - என்றுள்ளது.

(5,31,61)

பொதுமக்கள் பார்வைக்கு

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச்சட்டத்தின் 168 ஆம் பிரிவிற்கிணங்க வேலணை பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு 22.11.2018 ஆம் திகதி தொடக்கம் 29.11.2018 ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதனை அறியத்தருகின்றேன்.

வேலணை பிரதேசசபை.
21.11.2018

கௌரவ. நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி தவிசாளர்.

பத்தாண்டு நினைவஞ்சலி

அம்மா !. உமையிழந்து ... ஆண்டு பத்து ஆனதுவோ ?

வயதகம் 05 . 09 . 1951

வாதகம் 12 . 12 . 2008

அமரர் பாலசுப்பிரமணியம் தனலெட்சுமி

திதி : பூரணை

ஆண்டு தசம் கடந்தாலும்
ஆறிடுமோ எங்கள் துயர்
மாண்டீர் என்று சொல்ல
மனசு மறுக்குதம்மா....
கார்த்திகை விளக்கீடதனில் காலனவன்
காவு கொண்டதனவோ ?
பார்த்து விழி பூத்திருப்போம்
பகலிரவாய் உம் நினைவிலிருப்போம்

ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அம்மா உங்கள் உறவுக்கு
நிகர் இல்லையம்மா
யுகம் பல கடந்து சென்றாலும்
ஜெகத்தினில் நாம் இருக்கும் வரை
நெஞ்சில் சுமப்போம் உம் நீங்கா
நினைவலைகளை

இராமகிருஸ்ணா வீதி,
கோண்டாவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

திருமதி விஜயலட்சுமி அம்பலவாணர்

தாவடியைப் பிறப்பிடமாகவும், துணுக்காய் மற்றும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி அம்பலவாணர் நேற்று (21.11.2018)புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற பொன்னுத்துரை இரத்தினம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ் சென்ற வைத்திலிங்கம் கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் அம்பலவாணரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நடராஜா மற்றும் ஜெயலட்சுமி, விக்னராஜா ஆகியோரின் அன்புச்சகோதரியும் ரவிநாத், ரகுநாத், தயாளினி, ரமணன் ஆகியோரின் அன்புத்தாயும் விக்னேஸ்வரி, நிரஞ்சலா, வினோதா ஆகியோரின் அன்பு மாமியும் அருண், கவின், அர்ச்சனா, அபிநயா, அபிசயா, அச்சுதன், அர்ச்சயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2018) வியாழக்கிழமை பி.ப.12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
தாவடி, கொக்குவில்.
077 8177 076

தகவல் : குடும்பத்தினர்.

சிறப்பு...

மேல் நீதிமன்றங்களின் நடவடிக்கைகளை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு ஒத்தி வைப்பதும், தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணக் கூடியதாக இருக்கும். இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் பிரதித் தூதுவருடான சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நாட்டில் எழுந்துள்ள பிரச்சினைக்குத் தீர்வு காண கூட்டு அரசு அமைக்கவேண்டும். ரணிலை தலைமை அமைச்சராக நியமித்து, மகிந்தவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்படவேண்டும். இந்தக் கூட்டு அரசு அமைப்பதற்கு, சிறப்பு மேல் நீதிமன்றங்கள் மகிந்த அணியினருக்கு எதிராக அமைக்கப்பட்டுள்ளதை கவனத்தில் எடுக்க வேண்டும்.

அடுத்த இரண்டு வருடங்களுக்கும் குறித்த மேல்நீதிமன்றங்கள் சம்பந்தமான நடவடிக்கைகளைத் தற்போதைய அவசரமும் அவசியமும் கருதித் தள்ளிவைக்கலாம் என்று எண்ணுகின்றேன். ஆனால் உரிய காலத்தில் சட்டம் தனது நடவடிக்கைகளை எடுக்க அனுமதி வழங்கப்படவேண்டும், என்று விக்னேஸ்வரன் கூறியுள்ளார். (5)

நாமலுடன்...

ஐக்கிய தேசிய கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள், பன்னாட்டுச் சமூகத்தின் பிரதிநிதிகளுடன் சந்திப்பை மேற்கொள்வது சுவாரசியமாக உள்ளது. இந்தக் கட்சிகள் தங்கள் மக்கள் மற்றும் சமூகத்தவர்களை சந்திப்பது குறித்து அதிக அக்கறை செலுத்தினால், தேர்தலுக்கான மக்களின் எதிர்பார்ப்பை செவிமடுத்தால் இலங்கை நன்மையடையும்' என்று நாமல் ராஜபக்ச கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார்.

இதற்குப் பதிலளித்த இலங்கைக்கான கனாத் தூதுவர், நீங்கள் உங்கள் பொதுமக்கள் முன்னணிக் கட்சியின் பிரமுகர்கள் சிலர் யாரை சந்திக்கின்றனர் என்பதை அவர்களிடம் கேட்டு தெரிந்துகொள்ளுங்கள், என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு மீண்டும் பதிலளித்த நாமல் ராஜபக்ச, இலங்கை ஒரு இறையாண்மை நாடாகவும் மக்களின் சிறந்த உறைவிடமாகவும் காணப்படுகின்றது. அந்த இறையாண்மையைப் பேணுவது அனைத்துத் தலைவர்களின் கடமையாகும். இதில் தேர்தலும் அடங்கும், என்று கூறியுள்ளார். (5)

இடைக்கால...

மகிந்த ராஜபக்ச, அடுத்த ஆண்டின் முதன் நான்கு மாதங்களுக்கான அமைச்சரவைப் பத்திரதை சமர்ப்பித்திருந்தார். அரசின் செல வீனம் உள்ளிட்ட விடயங்கள் இதில் உள்ள டக்கப்பட்டுள்ளன. மகிந்தவின் அமைச்சர வைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த 26ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட அரசி யல் குழப்பத்தினால் அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவில்லை. அடுத்த ஆண்டு ஆரம்பத்திலிருந்து அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவு உள்ளிட்ட அனைத்து நடவடிக் கைகளும் முடங்கும் நிலமை காணப்படுகின் றது. இவ்வாறானதொரு நிலையில் இடைக் கால கணக்கு அறிக்கையைச் சமர்ப்பிக்க மகிந்த தரப்பு முடிவு செய்துள்ளது.

மேலும், மகிந்தவின் அலுவலகத்துக்கான நிதி ஒதுக்கீட்டை நிறுத்தும் தீர்மானம் ஐக்கிய தேசியக் கட்சியினால் சமர்பிக்கப்பட்டு எதிர்வ ரும் 29ஆம் திகதி நாடாளுமன்றத்தில் எடுத் துக் கொள்ளப்படவுள்ளது. சபை ஒழுங்குப் பத்திரத்திலும் உள்வாங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அமைச்சரவையின் நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

இதேவேளை அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவித்த பந்துல குண வர்த்தன, அடுத்த ஆண்டுக்கான முதல் நான்கு மாதங்களுக்கான அரசசெலவீனங் கள் தொடர்பில் இடைக்கால கணக்கறிக்கை தயாரிப்பதற்கும் அதனை நாடாளுமன்றத் தில் சமர்ப்பிப்பதற்கும் அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது. அரச நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்வதில் எவ்விதமான பிரச்சினையும் கிடையாது. அரச ஊழியர்க ளுக்கு பணிப்புக்களை செயற்படுத்த வேண் டாம் என்று கூறுவதற்கு ஜ.தே.கவுக்கு என்ன உரிமை காணப்படுகின்றது. அரச ஊழியர்க ளின் பணிகளுக்கு சவால் விடுப்பதற்கு நாடா ளுமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்றார்.

உதய கம்பன்பில தெரிவித்ததாவது: மங்கள சமரவீர பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து விட் டது. கடன் செலுத்த முடியாத நிலமைகள் ஏற்பட்டுள்ளன என்று பொய்யான பரப்புரை கள் மேற்கொள்கின்றனர். புள்ளிவிவரங்க ளுடன் தெளிவுபடுத்தப்பட்டது. அமைச்ச ரவை சட்டத்துக்கு முரணானது என்று ஊட கங்களுக்கு முன்னாள் விவாதித்துக்கொண்டி ருப்பதால் எவ்விதமான பயனும் ஏற்படப்போ வதில்லை. சட்டவிரோதமான அமைச்சரவை என்றால் உடனடியாக அவர்கள் உயர் நீதி மன்றத்திற்குச் செல்ல வேண்டும் என்றார்.

விமல்வீரன்ச தெரிவித்ததாவது, அமைச்சர வைக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. தங்க ளிடத்தில் பெரும்பான்மை இருக்கின்றது என்று கூறினாலும் நித்திரைக்குச் சென்று காலையில் எழுகின்றபோது அந்த எண் ணிக்கை குறைவடைந்துகொண்டேசெல்கின் றது. இதனை விட பொதுவேட்பாளரை நிய மிக்கவுள்ளதாகக் கூறுகின்றார்கள். ஆசியா வின் சிறந்த மூளைசாலியை வைத்துக் கொண்டு ஏன் பொது வேட்பாளரை தேடுகின் றார்கள். இதன்மூலம் அவர்களிடத்தில் தலைமை இல்லை என்பது தெளிவாகின்றது என்றார்.

காமினி லொக்குகே தெரிவித்ததாவது, நாங் கள் ரணில் விக்கிரமசிங்கவை வலுக்கட்டாய மாக அலரிமாளிகையிலிருந்து வெளியேற் றப்போவதில்லை. ஆசை தீர அவர் அலரிமா ளிகையில் இருந்து விட்டு பின்னர் தானா கவே வெளியேறுவார். அவரும் எங்களின் பழைய தலைவர் தானே. அவருடைய ஆசை நிறைவேறும் வரையில் நாம் பொறுமையாக இருப்போம் - என்றார். (5,10,61)

மகிந்த...

கிய தேசியக் கட்சி, அடுத்த கட்ட அதிரடியாக ஏனைய அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட் டையும் நிறுத்தும் தீர்மானத்தைச் சமர்ப்பித் துள்ளது. புதிய தீர்மானம் நாடாளுமன்றச் செயலரிடம் நேற்றுக் கையளிக்கப்பட் டுள்ளது.

இரண்டு நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள் ளதைச் சுட்டிக்காட்டி, அரசமைப்புக்கு அமை வாக அரசு கலைக்கப்பட்டுள்ளது என்றும், இந்த நிலையில் தலைமை அமைச்சர் மற் றும் அமைச்சர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய முடியாதென்பது இந்தத் தீர்மானத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. செயலிழந்த அரசின் தலைமை அமைச்சருக்கோ, அமைச்சர்க ளுக்கோ நிதியளிக்க அரசமைப்பில் இடமில் லையென்பதும் கையளிக்கப்பட்ட தீர்மானத் தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை, மகிந்தவின் தலைமை அமைச்சர் அலுவலகத்துக்கான நிதி ஒதுக் கீட்டை நிறுத்தும் தீர்மானத்தை ஐக்கிய தேசி யக் கட்சி நாடாளுமன்றச் செயலரிடம் கைய ளித்திருந்தது. அது ஏற்றுக் கொள்ளப்பட்டு எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்ற நிகழ்சி நிரலில் உள்ளடக்கப் பட்டுள்ளது. அதற்கான ஒழுங்குப் பத்திரமும் நாடாளுமன்றத்தால் வெளியிடப்பட்டுள் ளது. (5)

பலவந்த...

முறைப்படுத்தப்படும் வரை பலவந்த அரசின் ஆட்சியை தொடர்வதற்கு இடமளிக்க முடி யாது. இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ் மன் கிரி யெல்ல தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்றுப் புதன்கிழமை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசதலைவர்மைத்திரிபால சிறிசேனவுக்கும் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் முரண்பாடு என்பதற்காகவும், தனிப்பட்ட பிரச் சினைகளுக்காகவும் நாட்டின் தலைமை அமைச்சர் பதவியை இன்னொரு தனிநப ருக்கு வழங்குவதற்கான அதிகாரம் அரச தலைவருக்கு இல்லை. நாடாளுமன்ற உறுப் பினர்களே தீர்மானிக்க வேண்டும்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஏதும் பிரச்சினைகள் இருக்குமாயின் அரச தலைவர் அனைத்து உறுப்பினர்களையும் அழைத்துக் கலந்துரை யாடியதன் பின்னரே அடுத்த தீர்மானத்தை எடுத்திருக்கவேண்டும். முறையான அணுகு முறையில்லாமல் அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன தன்னிச்சையாக எடுத்த தீர்மா னத்தால் பெரிய நெருக்கடியைச் சந்தித்துள் ளோம்.

தெரிவு செய்யப்பட்ட அரசுக்குப் பெரும் பான்மை இல்லை என்ற காரணத்தினா லேயே 3 வார காலமாகியும் நாடாளுமன்றத் தில் சட்ட மூலங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்பட வில்லை.

பெரும்பான்மை இருக்குமானால் நாடாளு மன்றத்தில் ஓடி ஒளிக்கக் கூடாது. நாடாளு மன்றத்தில் பெரும்பான்மையை நிரூபித்து காட்ட வேண்டும்.

அரசமைப்பின் ஊடாக நாடாளுமன்றத்துக் கென தனியான சலுகைகளும் சிறப்புப் பல மும் பகிரப்பட்டுள்ளது. அதற்கமைவாக 7ஆவது உறுப்புரையில் ஏதாவதொரு கார ணம் தொடர்பாக நமது அரசமைப்புக்கு முர ணாக அமைந்திருக்குமாயின் பிரிட்டன் நாடாளுமன்ற சம்பிரதாயங்களைக் கடைப் பிடிக்க வேண்டும். பிரிட்டன் நாடாளுமன்ற சம்பிரதாயங்களின் படி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் உள்ளவர் ஒருவ ரையே, தலைமை அமைச்சராகத் தெரிவு செய்ய வேண்டும். இதுவே அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உண்மையாகும்.

பிரிட்டன் நாடாளுமன்ற சம்பிரதாயங்களை கடைப்பிடிப்பதற்கு நமது அரசமைப்பின் ஊடாகவே ஏற்றுக்கொண்டுள்ளோம். எனவே தற்போது அமைச்சரவை கலைக்கப் பட்ட நிலையிலேயே உள்ளது.

சட்டவிரோதமாக தெரிவு செய்யப்பட்ட தலைமை அமைச்சர் மற்றும் அரசு மேற் கொள்ளும் நடவடிக்கைகளை அரச விதி முறைகளை மீறியதாகவே கொள்ளப்படும். அதனையும் மீறி தொடர்ந்து அமைச்சுக்க ளின் செயலர்கள் பணிப்புரிவார்களானால் அவர்களே பொறுப்பேற்க வேண்டும் - என் றார். (5,10,61)

சதித்...

மக்களின் பிரச்சினைக்கு தீர்வைபெற்றுக் கொடுக்க அரச தலைவர் மைத்திரிபால முன் னின்று செயற்படுகின்றார் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலர் ரோஹண லக்ஷ்மன் பிய தாச தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத் தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப் பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையி லேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு மக்களின் காணிப் பிரச்சினை, அங்கு நிறுவப்பட்டிருக்கும் தேவையற்ற இராணு முகாம்களை அகற்றுதல் மற்றும் அபிவி ருத்தி போன்ற நடவடிக்கைகளை அரச தலை வர் மைத்திரிபால துரிதமாக மேற்கொண்டு வருகின்றார்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்றுமுன்தினம் வெளிநாட்டு இராஜதந்திரி களை அழைத்து நாட்டு நிலமை தொடர்பாகக் கதைத்துள்ளனர்.

அரசின் நடவடிக்கைகளை விமர்சித்து தெரி வித்துள்ளனர். தற்போதைய அரசியல் பிரச் சினையானது பன்னாட்டுச் சமூகத்துக்குத் தெரிவிக்கவேண்டிய அளவுக்கு ஒன்று மில்லை.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறிலங்கா சுதந் திரக் கட்சிக்கும் நாடாளுமன்றத்தில் பெரும் பான்மை தொடர்பான பிரச்சினை. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சம்பந்தப்படா மல் இருக்கலாம் - என்றார். (5)

நாடாளுமன்ற...

கட்சியினருக்கும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கும் இடையில் கைகலப்பு இடம் பெற்றுள்ளது.

கொழும்பு மாவட்டத்தின் பலப்பிட்டிய பிரதேச சபையின் அமர்வு நேற்று ஆரம்பமானது. ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் கறுப்புப் பட்டி அணிந்தவாறு சபைக்குள் பிர வேசித்தனர். நாட்டில் ஜனநாயகம் நிலைநாட் டப்பட வேண்டும் என்றும் அரச தலைவரின் செயற்பாடுகளுக்கு எதிராகக் கோசங்களை யும் எழுப்பினர்.

இதனைத் தொடர்ந்து, பொதுமக்கள் முன்ன ணியின் உறுப்பினர்களும் கறுப்புப் பட்டி அணிந்தவாறு சபைக்குள் பிரவேசித்தனர். அவர்கள் ரணில் விக்கிரமசிங்க திருடன், ஜ.தே.க உறுப்பினர்கள் திருடர்கள் என்றும் கூச்சலிட்டனர். சபையில் அமைதியின்மை ஏற்பட்டது. இதனையடுத்து சபைக்கு நடுவே வந்த இருதரப்பினரும் கடும் வாய்த்தர்க்கத் தில் ஈடுபட்டனர். வாய்த்தர்க்கம் உச்சம டைந்து பின்னர் கைகலப்பாக அது மாறியது. இதனையடுத்து தவிசாளர் உடனடியாக சபையை ஒத்திவைத்து நிலமைகளை கட்டுக் குள் கொண்டு வந்திருந்தார். பலப்பிட்டிய பிரதேசபையின் ஆளும் கட்சியாக 18 ஆச னங்களுடன் மகிந்த அணியான சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியே உள்ளது. (5,71)

ரணிலை...

வேண்டும். மற்றும் பல விடயங்களில் ஒருங் கிணைந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கு இரு தரப்பாரும் முன்வரலாம். இன்றைய காலகட் டத்தில் இது அதி முக்கியதேவையாக இருப் பதை இருதரப்பாரும் உணர்ந்து கொண்டால் இவ்வாறான கூட்டரசை அவர்கள் நிறுவ முடியும். இவ்வாறு வடக்கு மாகாண முன் னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் இலங்கைக்கான பிரதித் தூதுவர் விக்ரோரியா கொக்கிலேக்கும், வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையில் நேற் றுச் சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்புத் தொடர்பில், விக்னேஸ்வரனின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளதாவது:

சுதந்திரக் கட்சியில் 40 ஆண்டு காலமாக பதவி வகித்த அரச தலைவர் சிறிசேன, திடீர் என்று ஐ.தே.கவைச் சேர்ந்த ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒரு ஒப்பந்த அடிப்படை யில் கூட்டரசை நடத்த முடிந்ததாக இருந்தால் தற்போதைய நாடாளுமன்றத்தின் மிகுதிக் காலம் கிட்டத்தட்ட 2 வருடங்கள் முடியும் வரை யில் ஒரு தேசியக் கூட்டரசை மகிந்த ராஜபக் சவுடன் ரணில் விக்கிரமசிங்க ஏற்படுத்தி முக்கியமான விடயங்களுக்கு ஏன் பரிகாரம் தேடமுடியாது.

சிறிசேனவின் தலைமைத்துவத்தின் கீழ் மகிந்த ராஜபக்சவுடன் ரணில் ஒரு கூட்டு அர சுக்கான உடன்படிக்கையைக் கைச்சாத்திட்டு நாட்டின் முக்கிய பிரச்சினைகளை இருவரும் தீர்க்கமுன்வரலாமே? இரு தரப்பாரும் நாட் டின் நலன் கருதி இவ்வாறான கூட்டு அரசை நிறுவி பின்வரும் முக்கிய விடயங்களைத் தீர்த்து வைக்கலாம்.

இது சம்பந்தமாக இருவரும் சேர்ந்து அரச தலைவர் ஊடாகச் சிறையில் வாடும் தமிழ்ச் சிறைக் கைதிகளை விடுவிக்கலாம், பயங்க ரவாதத் தடைச் சட்டத்தை உடனே நீக்கலாம், காணாமற் போனோர் பற்றிய அலுவல கத்தை மேலும் பலம் வாய்ந்ததாக மாற்ற லாம், ஜெனிவாவில் அடுத்தவருடம் மார்ச் மாதத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றிஒரு சுமூகமான தீர்வுக்கு வரலாம், தமிழ் மக்கள் பிரச்சினையை மூன்று தரப்பா ரும் பேசித் தீர்க்கலாம். புதிய அரசமைப்பை கூட்டாட்சி அடிப்படையில் முழு நாட்டுக்கும் ஏற்புடைத்ததாக இயற்றலாம்.

எமது பொருளாதார நிலையைச் சீர்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை நிறுத்தப்பட்டமை சம்பந் தமாகவும் வெளிநாட்டில் இருந்துவரும் உத விகள் நிறுத்தப்பட்டமை சம்பந்தமாகவும் உரிய நடவடிக்கை எடுத்து நாட்டின் உறுதிப் பாட்டை நிச்சயப்படுத்தலாம். குறைந்து கொண்டுபோகும் எமது ரூபாவின் பெறுமதி யைத் திடப்படுத்தலாம். நாட்டின் கடன் சம்பந் தமாக இருவரினதும் ஒருமித்தகருத்துக்களி னூடு அவற்றைத் திரும்பச் செலுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

எதற்கும் ரணிலைத் தொடர்ந்து தலைமை அமைச்சராக ஏற்றுக்கொண்டு மகிந்தாவை எதிர்க்கட்சித் தலைவர் ஆக்கி இருதரப்பாரி டையேயும் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத் தலாம். இதன் ஊடாக நாட்டின் பிரச்சினை யைத் தீர்க்க முடியும் என்று ஆஸ்திரேலிய பிரதித் தூவருக்கு விக்னேஸ்வரன் எடுத்து ரைத்துள்ளதாக, அந்த அறிக்கையில் கூறப் பட்டுள்ளது. (5)

நாடாளுமன்ற...

மையும் மூடப்படுமென படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற அமர்வு நாளை வெள்ளிக்கி ழமை 10.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இதன்போது பார்வையாளர் மற்றும் முக்கிய பிரமுகர்களின் பகுதிகளுக்கு எவரும் அனு மதிக்கப்பட மாட்டார்கள்.

இதேவேளை, கடந்த 19ஆம் திகதி திங்கட் கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற அமர் வின்போதும் கலரி மூடப்பட்டிருந்தது. கலரி யிலிருந்து தாக்குதல் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகப் புலனாய்வுத் தக வல்கள் கிடைக்கப்பெற்றன என்றும் அதற்கு அமைவாகவே கலரி மூடப்பட்டதாக சபாநா யகர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக் கது. (5)

நாடாளுமன்றத்...

வெள்ளிக்கிழமை 23ஆம் திகதிக்கு முன்னர் தெரிவுக்குழுவுக்கான பெயர் பரிந்துரை களை மேற்கொள்ளுமாறு சபாநாயகர் அறி வித்திருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து நாடாளு மன்ற தெரிவுக்குழுவுக்கு பரிந்துரை செய்யப் படவுள்ளவர்களின் பெயர் விவரங்கள் உறு திப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அந்த விவரம் நாளைமறுதினம் (நாளை) சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்படும் என்றும் லக்ஸ்மன் கிரி யெல்ல தெரிவித்திருந்தார். பெரும்பான்மை பலம் தமது தரப்புக்கே உள்ளதால் தெரிவுக் குழுவில் பெரும்பான்மை உறுப்பினர்கள் தமது தரப்பிலிருந்தே தெரிவுசெய்யப்படுவார் கள் என்றும் அவர் கூறியிருந்தார்.

இந்நிலையில், ஆளும் தரப்பாக தாமே உள் ளதால் தெரிவுக்குழுக்கு எமது தரப்பிலிருந்து பெரும்பான்மை உறுப்பினர்கள் நியமிக் கப்பட வேண்டும் என்று மகிந்த அணியினர் தெரிவித்திருந்தனர்.

அவர்கள் தமது தரப்பிலிருந்து, தினேஸ் குணவர்தன, எஸ்.பி.திசாநாயக்க, நிமல் சிறிபால டி சில்வா, மகிந்த சமரசிங்க, விமல் வீரவன்ச, திலங்க சுமதிபால மற்றும் உதய கம்மன்பில ஆகிய 7 பேரின் பெயர்களை நாடாளுமன்றச் செயலரிடம் ஒப்படைத்துள் ளனர்.

12 பேர் அங்கத்துவம் வகிக்கக்கூடிய தெரிவுக் குழுவில் அதிகளவான உறுப்பினர்கள் தங் களுடைய உறுப்பினர்களாக இருக்க வேண் டும் என்று தெரிவித்தே அவர்கள் இந்தப் பட்டியலை வழங்கியுள்ளனர்.

(5,10)

வென்னப்புவ நியூயங்ஸ் அணிக்கு தலைவரானார் தமிழ் வீரர் டக்சன்

யாழ்ப்பாணம், நவ. 22
வென்னப்புவ நீயூயங்ஸ் கால்பந்தாட்ட அணியின் தலைவராக தமிழ் வீரரான டக்சன் பியூஸ்லஸ் நிய மிக்கப்பட்டார்.
2008ஆம் ஆண்டு முதல் வென்னப்புவ நீயூயங்ஸ் கால்பந்தாட்ட அணிக்காக விளையாடி வருகிறார் டக் சன் பியூஸ்லஸ். 2014ஆம் மற்றும் 2015ஆம் ஆண் டுகளில் அந்த அணியின் தலைவராகக் கடமையாற் றிய டக்சன் பியூஸ்லஸ் மூன்றாவது முறையாக மீண்டும் தலைவராக நியமிக்கப்பட்டார். (மு-23)

கே.ஸி.ஸி.ஸி. அணி இறுதிக்கு சென்றது

யாழ்ப்பாணம், நவ. 22
ஏபி விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்ப்பாண துடுப் பாட்ட லீக் தொடரில் கே.ஸி.ஸி.ஸி விளை யாட்டுக் கழக அணி வெற்றிபெற்று இறு திக்குத் தகுதிபெற்றது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத் தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஜொனி யன்ஸ் விளை யாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெ டுத்தாடிய ஜொனி யன்ஸ் விளை யாட்டுக் கழக அணி 20 பந்துப் பரிமாற் றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்;து 113 ஓட்ட ங்க ளைப் பெற்றது. கானாமிர்தன் 25 ஓட்டங்;களையும், லவேந்திரா 23 ஓட்டங்களையும், பிருந்தாபன் 15 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சாம்பவன், சத்தியன் இருவரும் தலா இரு இலக்கு களை வீழ்த்தினர்.
பதிலுக்குத் துடுப்பெ டுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி. விளையாட் டுக் கழக அணி 19.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்கு களை இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றது. யனுதாஸ் 57 ஓட்டங்களைப் பெற்றார். (மு-23)

'த பப்பரே' கிண்ணத்துக்கான காலிறுதி ஆட்டங்கள் நாளை

யாழ்ப்பாணம், நவ. 22
இலங்கைப் பாடசாலைகள் கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் த பப்பரே வெற்றிக் கிண்ணத்துக்கான தொடரில் வடக்கு மாகா ணத்தில் இருந்து யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜ னக் கல்லூரி ஆகியன தகுதி பெற்றிருந்த நிலையில் காலிறுதி ஆட்டங்கள் நாளை யும், நாளைமறுதினமும் நடைபெறவுள் ளன.
கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெ றும் காலிறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு மோரிஸ்ரெலாக் கல்லூரி மோத வுள்ளது.
நாளைமறுதினம் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு சுகததாச விளை யாட் டரங்கில் இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சாகிராக் கல்லூரி அணி மோதவுள்ளது. (மு-23)



தேசியமட்ட கூடைப்பந்தாட்டம்

இலங்கை பல்கலை அணியில் தமிழ் வீரர் கிசாந்துக்கு இடம்

யாழ்ப்பாணம், நவ. 22
இலங்கை கூடைப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் 52ஆவது தேசியமட்ட கூடைப்பந்தாட்டத் தொடருக்கான இலங்கைப் பல்கலைக் கழக அணியில் சப்பிரகமுவ பல்க லைக் கழக அணியைச் சேர்ந்த ஈ. கிசாந் தெரிவாகியுள்ளார். இந்தத் தொடர் எதிர்வரும் 30ஆம் திகதி தொடக்கம் டிசெம் பர் மாதம் 1ஆம் 2ஆம் திகதி வரை மட்டக்களப்பில் இடம்பெ றவுள்ளது. (மு-23)

தீவுகள் பங்களாதேஷ் டெஸ்ட் தொடர் இன்று!

மேற்கிந்தியத் தீவுகள் பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட் டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் இன்று ஆரம்பமாக வுள்ளது.
மேற்கிந்தியத் தீவுகள் அணி பங்களாதேஷ்க்குச் சுற்றுப் பயணம் மேற்கொண் டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் மூன்று வகைத் தொடர்களும் நடைபெறவுள்ளன. முதலாவதாக டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. முதலாவது ஆட்டம் சிட்டகொங்கில் இன்று ஆரம்பமாகவுள்ளது. (ம)



மே.தீவுகளின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார் போத்தாஸ்

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு இடைக்காலப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார் நிக் போத்தாஸ். மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு தலைமை பயிற் சியாளராக இருந்தவர் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் ஸ்டுவர்ட் லா. இவர் இங்கிலாந்துக் கழகமான மிடில்செக்ஸ் அணிக்கு பயிற்சியாளரா கச் செல்ல இருப்பதால் பதவியில் இருந்து விலகி னார். இதையடுத்து களத்தடுப்புப் பயிற்சியாளராக இருக்கும் நிக் போத்தாஸ் இடைக்காலப் பயிற்சியா ளராக நியமிக்கப்பட்டுள்ளார். (ம)

டெஸ்ட் தொடரை கைப்பற்றுவோம்

கோக்லி நம்பிக்கை



ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை நிச்சயம் கைப்பற்றுவோம் என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி.

இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ரி20 தொடர் நேற்று ஆரம்பமானது. அடுத்ததாக நான்கு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் 6ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடர் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே கோக்லி இவ்வாறு குறிப்பிட்டார்.

'இங்கிலாந்துப் பயணத்தில் நாங்கள் செய்த மோசமான தவறுகளை ஆஸ்திரேலியப் பயணத்தில் நிச்சயம் நிகழாமல் தவிர்ப்போம். இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் எமது ஆட்டத்தின் தரம் மிகவும் உயர்வாக இருந்தது. ஆனால் சில தவறுகள் மோசமாக இருந்ததால், நாங்கள் தொடரை இழந்தோம சிலநேரங்களில் நாங்கள் செய்யும் சிறிய தவறுகளால் வெற்றியை நழுவ விடுகிறோம். ஆனால், இந்த ஆஸ்திரேலியத் தொடரில் எங்களின் திறமையை சிறப்பாக வெளிப்படுத்தி, எங்களின் குறைபாடுகளைக் களைந்து வெற்றி பெறுவோம். எங்களின் நோக்கம் தவறுகளைக் குறைப்பதாகும். டெஸ்ட் தொடரை ஒவ்வொரு அணியும் வெல்வதற்கு முயற்சிக்கும். அந்த வகையில் டெஸ்ட் தொடரை வெல்வதற்கான தகுதி எங்களிடம் இருக்கிறது' என்று கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

டக்வேர்த் லூயிஸ் முறைப்படி

இந்தியா தோல்வி

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி20 தொடரில் நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் போராடி வெற்றி பெற்றது ஆஸ்திரேலிய அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. ஆஸ்திரேலிய அணியின் ஆரம்ப வீரர்களாக ஷோட் மற்றும் பின்ஞ். ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பம் மந்த கதியில் அமைந்தது. 4.1 பந்துப்பரிமாற்றங்களில் அணி 24 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ஷோட். அணித் தலைவர் பின்ஞ் 27 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன் பின்னர் மக்ஸ்வெல் மற்றும் லின் இணைந்து அபார ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். குறிப்பாக வேகப்பந்து வீச்சாளர் கலீல் அகமட் மற்றும் சுழல் பந்துவீச்சாளர் குருனல் பாண்டியா இருவரின் பந்துவீச்சுக்களும் நேற்றுப் பதம் பார்க்கப்பட்டன. 20 பந்துகளில் 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் லின். மக்ஸ்வெல் 46 ஓட்டங்களைக் குவித்தார். மழை குறுக்கிட்டதால் ஆட்டம் 17 பந்துப்பரிமாற்றங்களாக குறைக்கப்பட்டது. ஆஸ்திரேலிய அணி 4 இலக்குகளை இழந்து 158 ஓட்டங்களைப் பெற்றது.

இந்திய அணிக்கு டக்வேர்த் லூயிஸ் முறைப்படி 174 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. ரோகித் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். எனினும் தவான் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி



ஆஸியை அச்சுறுத்தினார். ராகுல் 13, கோக்லி 4 என்று ஏமாற்றினாலும் 28 பந்துகளில் அரைச் சதம் கடந்தார் தவான். அவரின் அதிரடி தொடர்ந்தது. 76 ஓட்டங்களுடன் தவான் ஆட்டமிழந்தார். பின்வரிசையில் டினேஸ் கார்த்திக் ஆஸ்திரேலிய அணியின் வெற்றியை சந்தேகத்துக்கு உட்படுத்தினார். அவர் 13 பந்துகளில் 30 ஓட்டங்களைக் குவித்தார். இந்திய அணியால் 169 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது. இதையடுத்து 4 ஓட்டங்களால் வென்றது ஆஸ்திரேலியா. (ம)

இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், நவ. 22

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

ரி20 தொடரில் சம்பியனாவோம்

பின்ஞ் நம்பிக்கை

இந்தியாவுக்கு எதிரான ரி20 தொடரைக் கைப்பற்றுவோம் என்று நம்பிக்கை தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் தலைவர் ஆரோன் பின்ஞ்.

இந்தியா - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ரி20 தொடர் நேற்று ஆரம்பமானது. இந்த ஆட்டத்துக்கு முன்னதாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே பின்ஞ் இவ்வாறு தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்கு எதிராக ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற ரி20 தொடரில் வழித்துத் துடைக்கப்பட்டாலும் நாங்கள் சிறந்த ரி20 அணிதான். நியூசிலாந்து, இங்கிலாந்து முத்தரப்பு மற்றும் சிம்பாப்வே தொடரில் நாங்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினோம் என்று நினைக்கிறேன். ரி20 வகை ஆட்டங்களில் நாங்கள் மிகவும் உறுதியாக இருக்கிறோம். மூன்று வகை ஆட்டங்களிலும் நீண்ட காலமாக இந்தியா சிறந்த திறனில் உள்ளது. ஆனால், ஆக்ரோஷமான ஆட்டத்தை வெளிப்படுத்த இந்தத் தொடர் எங்களுக்குச் சிறப்பான வாய்ப்பு. ரி20 தொடரில் கிண்ணம் வெல்வோம் என்ற நம்பிக்கை உண்டு என்று பின்ஞ் மேலும் தெரிவித்தார். (ம)



பந்தை சேதப்படுத்தும் விவகாரம் பெரிய பிரச்சினையாக உள்ளது!

ஆஸியின் பயிற்சியாளர் லாங்கர் தெரிவிப்பு

பந்தைச் சேதப்படுத்தும் விவகாரம் பன்னாட்டுப் பிரச்சினையாக உள்ளது என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் தலைமைப் பயிற்சியாளர் ஜஸ்ரின் லாங்கர்.

ஆஸ்திரேலியா இந்தியா அணிகளுக்கு இடையிலான இருதரப்புத் தொடர் தற்போது நடைபெற்று வரும் நிலையில் இந்தத் தொடர் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே லாங்கர் இவ்வாறு தெரிவித்தார்.

'பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்தும் விடயங்கள் தற்போது பன்னாட்டுப் பிரச்சினையாக உள்ளன. அணிக்கு வெற்றிகள் தேவைப்படும்போது வெற்றிபெறுவதற்கு ஆடுகளங்களும் தேய்வடைந்த பந்துகளும் ஒத்துழைக்காத போதுதான் பந்துகள் சேதப்படுத்தப்படுகின்றன' என்று லாங்கர் மேலும் தெரிவித்தார்.

ஆஸ்திரேலிய அணி அண்மையில் தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தது. இந்தத் தொடரில் ஆஸ்திரேலியாவை அடக்கி வலுவான ஆதிக்கம் செலுத்தியது தென்னாபிரிக்க அணி. இதனால் தென்னாபிரிக்காவின் ஆதிக்கத்தைத் தடுக்க டெஸ்ட் ஆட்டமொன்றில் பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்தும் சதியைக் கையிலெடுத்தது ஆஸ்திரேலிய அணி. உபதலைவர் வோர்ணர் திட்டம் வகுக்க, அணித் தலைவர் சிமித் அதை அனுமதிக்க ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பான்குரொப்ட் பந்தைச் சேதப்படுத்தினார்.

இவர்களின் குற்றம் உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து சிமித், வோர்ணர் இருவருக்கும் தலா ஓர் ஆண்டும், பான்குரொப்ட்டுக்கு 9 மாதங்களும் தடை விதித்தது ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை. தலைமைப் பயிற்சியாளர் லீமனும் இந்தச் சதிக்குப் பொறுப்பேற்று பதவி விலகினார். இதையடுத்தே லீமனின் இடத்துக்கு லாங்கர் நியமிக்கப்பட்டார்.

(ம)

தனஞ்சயவின் தலை தப்புமா?

மரண அறிவித்தல்

திருமதி புவனேஸ்வரி பரராஜசிங்கம்

(ஓய்வு நிலை ஆசிரியர் - யா/ சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி)



பிறப்பு 10.03.1936 | இறப்பு 20.11.2018

சண்டிலிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி பரராஜசிங்கம் 20.11.2018 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா சின்னத்தங்கச்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முத்தையா பாக்கியம் தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற பரராஜசிங்கத்தின் (முன்னாள் அதிபர் - யா/ சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி) அன்பு மனைவியும் திருமதி தி.பொன்னம்மா காலஞ்சென்ற பொ.கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மதியழகி (ஆசிரிய ஆலோசகர் - சித்திரம் வலிகாமம் கல்வி வலயம்), காலஞ்சென்றவர்களான அறிவழகன், கலையரசன் மற்றும் யாழரசிஓய்வு நிலை ஆசிரியர் - யா/சுதுமலை வடக்கு த.க.பாட சாலை), கலைமதி, அருள்மொழி (ஆசிரியர் - வவு/ சீ.சீ.ரி.எம்.எஸ் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இளமுருகன், கருணாகரன், மகேஸ்வரன், சிவகுமார் ஆகியோரின் பாசமிகு மாமியும் சுதர்சினி, இளதாரகன் (சுகாதார உதவியாளர் -தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை), கஜாரணி (அளவையில் விஞ்ஞானம், சப்ரகமுவ பல்கலைக்கழகம்), அருள்மயூரன் (மாணவன் - யா/மெமோரியல் ஆங்கில பாடசாலை), தனுசியா (முதலாம் வருட மருத்துவபீட மாணவி - யாழ் பல்கலைக்கழகம்), மௌசியா (பௌதிக விஞ்ஞானம் - யாழ் பல்கலைக்கழகம்), அனுசிஜா (மாணவி - வேம்படி மகளிர் உயர்தர பாட சாலை), கஜனிகா(மாணவி -வவு/சைவப்பிரகாஷா மகளிர் கல்லூரி), லிபிஷானிஹா(மாணவி, வவு/ சைவப்பிரகாஷா ஆரம்பப்பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் புட்கலை, புவனராணி, பூரண லிங்கம் காலஞ்சென்றவர்களான பூலோகநாதன், பரிமளம், பவளராணி, புவனேந்திரன், புஸ்பகாந்தன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2018) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளான் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"அறிவகம்",
சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய். (CS 21352) (14,17)

தகவல்:
குடும்பத்தினர்.

077 347 7323/ 077 920 9156

மரண அறிவித்தல்

முத்தையா சிவலிங்கம்



மண்கும்பான் மேற்கு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா சிவலிங்கம் 20.11.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சதாலக் ஷ்மியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பார்த்தீபன் மற்றும் கோவிந்தன், ரஜீவன், மகாலக் ஷ்மி(யசோ), ஆனந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற மகாலக் ஷ்மி மற்றும் மாணிக்கவாசகர் (ஆஸ்திரேலியா), கெங்காதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுகந்தினி, வேனுகா, சுலக் ஷனா, சயந்தன், மைதிலி(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் விதுஜன், ஜெயதீபன், கபிஸ்ரன், தனுசன், வினுஜன், லிதர்ஷன், லதுஷியா, கம்ஷாயினி, யதுர்சியா, யசிக்கா, விஜிதா, ஒஸ்தி, திஷாயினி, வானுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2018) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப ஒரு மணியளவில் சாட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

5ஆம் வட்டாரம்,
மண்கும்பான் மேற்கு. (CS 21351) (14,17)

தகவல்: குடும்பத்தினர்.

077 824 8813

பிரிஸ்பெய்னில் நாளை சோதனை

இலங்கை அணியின் சுழல் பந்து வீச்சாளர் அகில தனஞ்சய, பந்தை பன்னாட்டுக் கிரிக்கெட் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளுக்கு முரணாக எறிகிறார் என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அவர் ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பெய்ன் சோதனைக் கூட்டத்தில் நாளை தனது பந்துவீச்சு முறையை சோதிக்கவுள்ளார்.

இங்கிலாந்து -இலங்கை அணிகளுக்கு இடையிலான தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரின் முதலாவது ஆட்டத்தில் தனஞ்சயவின் பந்துவீச்சு முறையற்ற விதத்தில் இருந்தது என்று பன்னாட்டுக் கிரிக்கெட் சபை குற்றச்சாட்டை முன்வைத்திருந்தது.

இதனால் அடுத்த 14 நாள்களுக்குள் தனஞ்சய தனது பந்துவீச்சை பன்னாட்டுக் கிரிக்கெட் சபையால் ஏற்றுக்கொண்ட சோதனைக்கூடத்தில் நிரூபிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருந்தது.

இத்தகைய பின்னணியில் பிரிஸ்பெய்னில் உள்ள சோதனை மையத்தில் நாளை தனது பந்துவீச்சு முறையை தனஞ்சய சோதனைக்கு உட்படுத்துகிறார்.

தனஞ்சயவின் பந்துவீச்சு முறையை ஏற்றுக்கொள்ளப்பட்ட வரையறையை விட முரணாக இருந்தால் அவர் தனது பந்துவீச்சு முறையை சீர்செய்து மீண்டும் நிரூபிக்கும் வரைக்கும் பன்னாட்டு அரங்கில் பந்துவீச அனுமதிக்கப்படமாட்டார்.

தனஞ்சய பிரிஸ்பெய்ன் சென்றுள்ளதால் இங்கிலாந்து - இலங்கை அணிகளுக்கு இடையில் கொழும்பில் நாளை ஆரம்பமாகும் மூன்றாவதும் இறுதியானதுமான டெஸ்ட் தொடரில் அவரால் பங்குபற்ற முடியாது. இதனால் பதில் வீரராக 21 வயதேயான நிசான் பீரிஸ் அழைக்கப்பட்டுள்ளார். (ம)

வாடகைக்கு

நல்ல நிலையில் உள்ள Haice வாகனம் மாதாந்த / நாளாந்த வாடகைக்கு குறைந்த விலையில் விடப்படும்.

077 026 1966

நவம்பர் 24, 25, 26 ஆம் திகதிகளில்... 8.30 a.m - 1.30 p.m

2018 O/L மாணவர்களுக்கான இறுதிக் கருத்தரங்கு

பாடம் வரலாறு | வளவாளர் R.S. சந்திரன்

குறிப்பு : • வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.
• எதிர்பார்க்கை வினாக்களுடன் கூடிய கையேடு வழங்கப்படும்.
• இலங்கைப்படம், உலகப்படம் இலகுவான முறையில் குறித்தல்.
• முன்கூட்டியே பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

நோயல் அக்கடமி
தொடர்புகளுக்கு 077 664 9134
அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
கட்டணம் ரூபா 600

தென்னிந்திய யாத்திரை

தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரியூடான யாத்திரை

ஆரம்பம் 05.12.2018 | யாத்திரீகர் 10 | நாள்கள் 16

தரிசிக்கும் இடங்கள் :- மலைக்கோட்டை விநாயகர், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம், பிரம்மாகோயில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காள கஸ்திரி, திருவெண்ணாமலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவானைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷாணம், சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழபகவான், செவ்வாய், ராகு, கேது, சனி பகவான், திருநள்ளாறு, நளன்குளத்தில் நீராடல், தோணியப்பர், குருவாயூர், மைசூர் சாமூண்டீஸ்வரி, நந்திகோவில், கன்னியாக்குமரி, சுசீந்திரம், மனக்குழவிநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி பிள்ளையார், பட்டி விநாயகர், வடபழனி முருகன் உட்பட 60 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR, ஜெயலலிதா, அண்ணா சமாதி களையும் மைசூர் பாலஸ், பிருந்தாவனம் காடின், அப்துல் கலாமின் மணிமண்டபமும் பார்க்கலாம்.

தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை :- இருவழி விமான ரிக்கட், மூன்றுவேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர், 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வரவும் வாகன வசதி. இவை அனைத்தும் எமது சேவை.

மேலும் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும். சகல ஆலயங்களும் பூசை நேரத்தில் தரிசிக்கலாம்.(இத்துடன் யாழ் - கொழும்பு, யாழ் போக வர வாகன வசதி செய்து தரப்படும்)

வந்தவரைக் கேளுங்கள் சென்றுவரலாம் வாருங்கள்.

தொடர்புகளுக்கு:
கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
59, 3/6, செட்டியார்தெரு, கொழும்பு -11,
sriranganathan1944@gmail.com / sriranganathan2601@gmail.com
T.P - 077 768 0102/ 077 736 2154

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.11.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.